வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 புரட்டாதி திங்கள் 27-ம் நாள் (13—10—1963) ஞாயிற்றுக்கிழமை ஜமா. அவ் 24 | இதழ் 20

மில்க்வைற் நீலசோப்

MILK WHITE SOAP

பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# பாதயாத்திரைக்கு முழு வெற்றி

## மக்கள் காட்டும் அமோக ஆதரவு

(நமது விசேட நிருபர்)

யாழ்ப்பாணம், அக். 11

காந்தியடிகள் அவதரித்த தினத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பித்த பாத யாத்திரை வெற்றியைக் கொடுத்து வருகிறது. மக்கள் வெள்ளம் போல் திரண்டு செல்கிறார்கள். பாத யாத்திரையினர் செல்லுமிடமெல்லாம் கிராம மக்கள் பூரண கும்பம் வைத்து மூவர்ணக் கொடியேற்றி நங்கள் உளங்கனிந்த பேராதரவை அளித்து வருகிறார்கள். தினே தினே மாபெரும் கூட்டங்கள். கூட்டங்களுக்குக் கூடும் மக்களின் தொகையோ அளப்பரியது. தொண்டுக் கிழவர் முதல் பச்சிளம் பாலகர் வரை பெருந் தொகை பெண்கள் உட்படப் பலர் பாத யாத்திரையில் பங்கு கொள்கிறார்கள். இன்முகம் காட்டி இனியமொழி கூறி பாத யாத்திரிகர்களுக்கு உணவு, சிற்றுண்டி, இளநீர் கொடுப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறார்கள் கிராம மக்கள். ஊர்வலத்தில் காந்தி அடிகள், அமரர் வன்னியசிங்கம் போன்றோரின் படங்களை அலங்கரித்து எடுத்துச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. தலைவர்களும் தொண்டர்களும் திறந்த வெளிகளில் இரவில் தங்கும் காட்சி மக்களைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.


காந்தி அடிகள் அவதரித்த புனித தினமான இரண்டாம் திகதி கீரிமலையிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினருக்கு சென்ற இடமெல்லாம் மகத்தான வரவேற்புக் கிடைத்து வருகிறது.

கடந்த 5-ம் திகதி காலை குரும்பசிட்டியில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழுவினருக்கு குப்பிளானில் காலை உணவு அளிக்கப்பட்டது. அவ்விடத்திலிருந்து புறப்பட்ட குழுவினருக்கு தம்போதனையில் மதிய போசனம் வழங்கப்பட்டது. அங்குள்ள வைரவர் கோவிலிலும், இ. மூ. சங்கக் கட்டிடத்திலும் சிறுபான்மை மக்களே உணவளித்தனர். அன்று மாலை உடுவில் தொகுதியை அடைந்த பாத யாத்திரைக் குழுவினருக்கு சுன்னாகம் சந்தை மைதானத்தில் ஓர் மாபெரும் வரவேற்பு வர்த்தகர்களால் கொடுக்கப்பட்டது. எந்த அரசியற் கட்சிக்காவது சுன்னாகத்தின் சரித்திரத்தில் இந்தகைய வரவேற்பு கிடைத்ததில்லை.

3000த்துக்கு மேற்பட்ட தொண்டர்கள் புடைசூழ வந்த தலைவர்களுக்கும் தமிழரசுத் தந்தை செல்வாவுக்கும், சந்தை வட்டாரகிராம சபை உறுப்பினர் திரு. ஆசிர்வாதம் ஹென்றி அவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற மாபெரும்

(8ம் பக்கம் பார்க்க)



அஹிம்சாமூர்த்தி காந்தியடிகள் அவதரித்த புனித தினமான இரண்டாம் திகதி, அன்னாரின் அஸ்தி கரைக்கப்பட்ட புண்ணிய தீர்த்த ஸ்தலங்களில்ஒன்றான கீரிமலையிலிருந்து புனிதயாத்திரை தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் புறப்படுகிறது. அருகில் மூவர்ணக் கொடி தாங்கி நிற்பது வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் மைந்தன்—எட்டுவயதும் நிரம்பாத பச்சிளம் பாலகன் செல்வன் காண்டீபன்.

யாழ்ப்பாணத்தில்

## முற்போக்குகள் பரப்பும் புரளி

## கொழும்பில் கலகம் நடைபெறுவதாக வதந்தி

(சுதந்திரன் விசேட நிருபர்)

யாழ்ப்பாணம், அக். 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பகிஷ்கரிப்பு இயக்கத்தின் எதிரொலியாக கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் கலவரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொய்யான வதந்திகள் யாழ்ப்பாணம் எங்கும் பரப்பப்பட்டு வருகிறது. அமைதியாகவும், அஹிம்சையை அடிப்படையாகவும் கொண்டு நடந்து வரும் பகிஷ்கரிப்பு இயக்கத்தை வேறு வழியில் திருப்பிப் பாழடித்துவிட சில விஷமிகள் இத்தகைய பொய் வதந்திகளைப் பரப்ப முற்பட்டுள்ளனர். இத்தகைய பொய்யுரைகளைச் செவிமடுக்க வேண்டாம் என்று தமிழரசுத் தலைவர்கள் பொது மக்களை வேண்டுகின்றனர்.

அமைதியாக நடைபெற்று வரும் அறப் போராட்டங்களை நிலை குலைக்க இத்தகைய முட்டாள்தனமான காரியங்களைச் செய்து வருபவர்கள் வேறு யாருமல்ல. 'முற்போக்குவாதிகளே'. இன்று இந்தப் பொய் வதந்திகளை யாழ்ப்பாணமெங்கும் பரப்ப ஆரம்பித்துள்ளதாக நமக்கு நம்பகமாகச் செய்திகள் கிடைத்துள்ளன. இத்தகைய வதந்திகளை எள்ளளவும் நம்பக் கூடாது என்று மீண்டும் வற்புறுத்தப்படுகின்றனர்.

### மக்கள் ஆதரவு உண்டு

கொழும்பு, அக். 10

'நேரடி நடவடிக்கையில் பொது மக்கள் நிறைந்த உற்சாகம் காட்டி வருகிறார்கள். பாத யாத்திரையின் பொழுது நாம் நடாத்தும்

(9-ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

## தென்னவன் பிரமராயன்

ஆசிரியர்: தேவன்-யாழ்ப்பாணம்.

வெளியீடு: ஆசீர் வெளியீடு கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

விலை: ஒரு ரூபா.

கவிதை, சிறுகதை, நாவல் எனும் இலக்கிய வடிவங்கள், இன்றைய தமிழிலக்கியத்தில் பெற்றுள்ள உயர் பீடத்தை, நாடகம் எனும் இலக்கிய வடிவம் பெறவில்லை என்றே கூறவேண்டும். தமிழில் இதுவரை வெளிவந்த நாடக நூல்கள் யாவும், இலக்கியம் எனும் இலட்சியத்தை நோக்கித் தத்து நடை போடும் குழந்தைகளாகவே அமைந்துள்ளன. ப. சம்பந்த முதலியார், க. கணபதிப்பிள்ளை, பி. எஸ். ராமையா, தி. ஜானகிராமன் என்போரால் எழுதப்பட்ட நாடகங்கள் பல, வெற்றி பெற்ற மேடை நாடகங்களே. இவற்றை இலக்கிய நாடகங்கள் என்று மதிப்பிடுவது கேலிக்குரிய செயல், இலக்கிய நாடகங்கள் என்று இங்கு குறிப்பிடுவது, இலக்கிய அந்தஸ்தை எட்டிப் பிடிக்கக் கூடியவற்றையேயாகும்.

தமிழில் இதுவரை காலமும் வெளி வந்த நாடக நூல்கள் ஒன்றாவது இலக்கிய அந்தஸ்தை எட்டிப் பிடிக்கவில்லையா, என்ற கேள்வி நேர்மையானது. ஆனல், அதற்குரிய பதில் உண்மையில் வேதனைக் குரியதே. சிறு கதைக்கு இலக்கிய அந்தஸ்தைக் கொடுத்தவர்களெனப் புதுமைப் பித்தன், கு. ப. ரா. மௌனி என்போரைக் குறிப்பிடுவது போல, கவிதைக்கு இலக்கிய அந்தஸ்தைக் கொடுத்தவர்களெனப் பாரதி, தேசிக விநாயகம்பிள்ளை, சோமசுந்தரப்புலவர், என்போரைக் குறிப்பிடுவது போல, நாவலுக்கு இலக்கிய அந்தஸ்தைக் கொடுத்தவர்களென ராஜமையர், சங்காரம், கல்கி என்போரைக் குறிப்பிடுவது போல, நாடகத்திற்கு இலக்கிய அந்தஸ்தைக் கொடுத்தவர்கள் என்று எவரையும் குறிப்பிட முடியாதுள்ளது.

'நாடகம் என்பது நடிப்பதற்குரியது' என்ற மனோபாவமே சம்பந்த முதலியாரிலிருந்து, தேவன்—யாழ்ப்பாணம் வரை நிலவி வருவதை அவர்தம் நூல்களில் இருந்து தெளிவாக அறிய முடிகிறது. 'நாடகம் என்பது படிப்பதற்கு முரியது' என்ற மனோபாவம் விரிவடையும்போதுதான், நாடக நூல்கள் இலக்கிய அந்தஸ்தை எட்ட முடியுமே தவிர, நாடகங்கள் நடிப்பதற்குரியன என்ற மனோபாவம் இருக்கும் வரை, அவை மேடை நாடகங்களாகவே இருந்து, மறைய வேண்டியவைதான்.

'இலக்கியம் வெறும் பொழுது போக்கிற்காக' என்ற நம்பிக்கையுடையவர்கள், பொழுது போக்கிற்குகந்த மேடை நாடகங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கலாம்.

தேவன்—யாழ்ப்பாணத்தின் 'தென்னவன் பிரமராயன்' இலக்கிய நாடகமே. 'மேடை நாடகம்' என்று தனியக் கூறுவது முழுமையாகாது—இருபதாம் நூற்றுண்டின் நாடக மேடைக்குரிய நாடகம் என்று கூறல் வேண்டும்.

வரலாற்றில் இருந்து ஒரு பகுதியை எடுத்து நாடகமாக்கினல், அது வரலாற்று நாடகம்; பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்து நாடகமாக்கினல் அது 'இலக்கிய நாடகம்'. (ஆனல், இலக்கிய அந்தஸ்தை எட்டிப் பிடித்த நாடகம் என்று கருத்தாகாது). அவ்வகையில், பெரிய புராணத்தில் கூறப்படும் மாணிக்கவாசகரின் வாழ்வை—லௌகிக வாழ்வை—நாடகமாக்கியமையால், தென்னவன் பிரமராயன் 'இலக்கியமே'தான்!

இதுவரை காலமும் வெளிவந்த மேடை நாடக நூல்களை எடுத்து ஆராய்ந்து பார்க்கும் போது, தென்னவன் பிரமராயனுக்குரியது, தனித்த ஓரிடம் என்பதில் சந்தேகமில்லை. மேடை நாடக நூல்களைப்பொறுத்த மட்டில், தென்னவன் பிரமராயனேடு புதிய ஒரு திருப்பம் தொடங்குகிறது என்றே கூற வேண்டும். எவ்விதத்தில் தென்னவன் பிரமராயன் மேடை நாடகவுலகில் ஒரு திருப்பு முனையாகும்?



யாழ்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆதரவில் சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்ற தமிழிலக்கிய விழாவை வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆரம்பித்து வைத்துப் பேசுகிறர். அருகில் கவிஞர் அம்பி அவர்களும் பிரபல சிறுகதை ஆசிரியர் நாவேந்தன் அவர்களும் அமர்ந்திருக்கிறர்கள்.

இந் நூற்றுண்டின் நாடக மேடைகளில் நவீன வசதிகளோடு—முக்கியமாக மின்சார வசதிகளோடு—நாடகங்கள் நடத்தப்படுகின்றன. அது காலத்தோடியைந்த மாற்றமே. அவ்வாறு நடத்தக் கூடிய ஒரு நாடகமாகவே, 'தென்னவன் பிரமராயன்' அமைந்துள்ளது. நிழற் காட்சிகளும், ஒளி மங்கி மீள்வதன் மூலம் நீண்ட காலக் கட்டத்தின் கழிவை ஒரே காட்சியில் காட்டக் கூடிய உத்தியும் மின்சார வசதிகளுடனேயே நிகழ்த்தக் கூடியவை. 'தென்னவன் பிரமராயனி'ல் காணப்படும் இவ்வுத்திகள் யாவும், அதனை மேடை நாடககம் தான் என்று நிரூபிக்கின்றன. இவையே மேடை நாடக நூலுலகில் தென்னவன் பிரமராயனை ஒரு திருப்பு முனையாகக் கொள்ள வைக்கின்றன.

மாணிக்கவாசகரின் அரசியல் வாழ்விற்கும், பக்தி வாழ்விற்கும் இடையே ஏற்படும் மோதலினைச் சித்தரிக்கும் நாடறிந்த கதைதான் தென்னவன் பிரமராயன் [illegible] மையைப் [illegible] சித்தரிக்கின்ற கதைதான், இது. நாடக உத்திகளில் மட்டுந்தான் புதுமையைக் காண முடிகிறது. அதாவது, நெய் விளக்காக விருந்த மாணிக்க வாசகர், 'தென்னவன் பிரமராயனி'ல் மின்சார விளக்காக ஜொலிக்கின்றர்.

'புதுமைப்பித்தனி'ன் 'அகலிகை' என்ற சிறு கதைக்கும், 'நாவேந்தனி'ன் 'அகலிகை' என்ற சிறுகதைக்குமிடையிலே காணப்படும் அகழி வித்தியாசம் தான், 'புதுமைப்பித்தனின்' 'அன்று இரவிற்'கும், தேவனின் 'தென்னவன் பிரமராயனு'க்கு மிடையிலும் காணப்படுகிறது. சிறுகதைக்கும், நாடகத்திற்கும் ஒப்புமை காட்டுவது தவருகிலும், பிழையில்லை என்றே நம்புகின்றேன். பழைய கதைதான் புதுமைப்பித்தனும் எழுதினர். ஆனல் புதுமைப்பித்தனின் 'அன்று இரவி'ல் இருக்கின்ற 'ஏதோ ஒன்று' (கதையிலுள்ள புதுமை) தென்னவன் பிரமராயனில் இல்லை என்றே கூறவேண்டும்.

தென்னவன் பிரமராயனில் காணப்படுகின்ற சிறப்புக்கள் என, பாத்திரங்களை அறிமுகம் செய்து வைக்கும் முறை, காட்சிகளை ஒழுங்கு

(15ம் பக்கம் பார்க்க)

# கவிதைப் பூங்கா

## அடிமை எனும் பதம் அகற்று....

—நாவலூர்க் கேசரி—

கடல்கடந்து பகைவரெல்லாம் கலங்கியோட
காலடியில் அந்நாட்டைச் சேர்த்துக் கொண்டு
மடல்திறந்நாற் போல்வீரர் வாழ்த்துக்கூற
மணி,பவளம் முத்துபல திரட்டி வந்து
திடமுடனே "செந்தமிழைக்" காத்துவந்தாய்
திகைக்கின்றேன் உன்நிலையைக் கண்டுதம்பி!
இடமொன்று இல்லாமல் ஏழையாக,
இருக்கிறுய்! ஏங்குகின்றுய் என்ன சொல்வேன்.

புகழ்படைத்த மாவீரர் சோழமன்னர்
புவியாண்ட சேரனெடு பாண்டியன்தான்
இகழ்ந்திடுவார் இன்றிருந்தால் உன்னைப்பார்த்து
இதழ்விரித்து பெரிதாகச் சிரித்துநிற்பார்
அகமொன்று இல்லாமல் அலைகின்றுயே
ஐயையோ இதுவென்ன "வெட்கம் வெட்கம்,"
நிகழ்காலம் உன்கையில் இருக்குதம்பி
நிமிர்ந்துநில்லு நேர்மைதனைப்
பிடித்துக்கொள்ளு.

உரிமைதனை இழந்திங்கே வாழ்வதென்ருல்
உலுத்தரென்று உமை அழைகக்கும்
உலகம் பார்த்து
பெருமையுடன் வாழ்வதென்ருல் பிரிந்து நிற்கும்
மெருமினமாம் எம்மவரை யொன்று சேர்த்து
அரியமொழி பகன்றுவந்து அன்னை நாட்டின்
அடிமை எனும்பதமகற்ற "உயிர்" கொடுப்பாய்
எரிகின்ற அழல் போலே உன்னுளத்தில்
எறிக்கட்டும் தமிழ்மானம் எழுந்து நிற்பாய்.

## வளம் பெற வயலைப் பேணு

— முத்தழகு—

சிங்களம் படித்துப் பெற்ற
சம்பளப் பணத்தைப் பெற்றேன்!
அங்கமும் நடுநடுங்க, எந்தன்
அன்னையின் மொழி. நசுங்க!

என்னையே பெற்ற அன்னை
என்னிலை எண்ணி ஏங்கி
'கண்ணையே விற்று நீயும்
கண்ணுடி ஏனே பெற்றுய்?

அன்னையை விற்று நீயும்
அணிகலன் பெற்று எந்தப்
பெண்ணிடம் அழகு பார்க்கப்
புறப்பட்டாய் சொல்! மகனே?

தமிழினத் துரோகி; என்று
தூற்றுமே! உன்னைச் சொந்தம்
கம்மிய குரலில் பேசிக்
கடிந்திடும் காலம் உன்னை.

சிங்கள மொழியில் தாகம்
சம்பள் உயர்வில் மோகம்
எங்களுக் குதவா வேகம்
எழுந்திரு மானம் காக்க.

சென்றிடு கலப்பை தூக்கு,
சமைத்திடு வயலை நன்றுய்
எண்ணிடு நாளைக் கொஞ்சம்
அள்ளிடு நெல்லைக் கூட்டி.

ஆட்சியில் பதவி பெற்று
ஆயிரம் கூறு போட்டும்
வாட்டுமே வறுமை நோய்கள்!
வளம்பெற, வயலைப்பேணு!


# வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றுகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ. றெ. ஜெயமணி,
பொத்துவில்.

கே: மனதிற்கு சந்தோஷமேற்பட என்ன செய்ய வேண்டும்?

ப: ஆஸ்பத்திரி சுவீப்பில்-முதற் பரிசைத் தட்டவேண்டும்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: சாகித்திய மண்டல விழாவில் முற்போக்கு எழுத்தாளர்கள் கலாட்டா செய்தார்களாமே? இதுதான் யதார்த்தமா?

ப: எழுத்திலே புரட்சி செய்ய வேண்டியவர்கள் அதை மறந்து, கூட்டத்திலே 'புரட்சி' செய்துவிட்டனர். இனி அவர்களின் சொந்தக் கூட்டங்களிலும் 'புரட்சி' ஏற்படாமலிருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை.

ஃ

கா. மகாதேவா,
மானிப்பாய் தெற்கு

கே: ஒரு தினசரிப் பத்திரிகை இந்தியப் பாதுகாப்பு நிதிக்குத் திரட்டிய பணத்தின் முடிவு என்ன குயுக்தியாரே? அப்பணம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு விட்டதா?

ப: அந்தப் பத்திரிகைக்கு எழுதிக் கேளுங்கள். பதில் கிடைக்கா விட்டால் நிதி மந்திரிக்கு எழுதுங்கள்.

ஃ

ந. செல்வராசா, நயினாதீவு

கே: நேரடி நடவடிக்கையின் மூலம் தமிழ் மக்களுக்கு விமோசனம் உண்டா?

ப: விமோசனம் பெற இதர வழிகளெல்லாம் கையாண்டு பார்த்தாகிவிட்டது. நேரடி நடவடிக்கைதான் ஒரே வழி என்ற நிலை இன்று உருவாகியுள்ளது.

ஃ

'வடலூரான்', அனலைநகர்

கே: தமிழரசுத் தந்தையவர்கள் ஸ்ரீமாவோ அம்மையாருக்கு அனுப்பிய கடிதத்திற்குப் பதில் எப்படி வந்தது? தமிழருக்குரிய சலுகை தருவதாகவா; அல்லது வேறு என்ன மாதிரி?

ப: இரு சிங்கள அதிகாரிகளை இடமாற்றம் செய்ததைக் கண்டித்துப் பௌத்த பலவேகயத் தலைவர் திரு. மெத்தானந்தா பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்குப் பிரதமர் 4 பக்கங்களில் பதில் எழுதி அனுப்பினாராம். ஒரு சிங்களத் தினசரி இரண்டு பக்கங்களில் அந்தப் பதிலைப் பிரசுரித்தது. ஆனால் 30,000,00 தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகள் வழங்கக் கோரி தமிழரசுத் தந்தை எழுதிய கடிதத்துக்குக் 'கடிதம் கிடைத்தது' என்ற இரண்டே சொற்களில் பிரதமர் பதில் எழுதிவிட்டார்.

ஃ

வே. மார்க்கண்டு,
உடப்புசல்லாவ

கே: திருவாளர் சு. ந. செனட்டர் பதவி ஏற்றதும் தமிழுக்கும் உரிமை கிடைக்குமென்று பிரசாரம் செய்தவர்களின் நிலை என்ன?

ப: சிங்களத் தீவிர அமுல் அவர்களுக்குச் சாட்டையடி கொடுத்துள்ளது. எனவே அரசியலைக் கைவிட்டு, இலக்கியம் வளர்க்கப் புறப்பட்டு விட்டார்களாம்.

ஃ

ம. ஜெயரஞ்சன்,
பருத்தித்துறை

கே: பகிஷ்கரிக்க வேண்டியவர்களின் பெயர்களைத் தெரிவித்தால் நாமும் பகிஷ்கரிக்கலாமல்லவா?

ப: உங்கள் சொந்த ஊரில் சிங்களத்தைத் திணிக்கும் அதிகாரிகள் உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாதல்லவா!

ஃ

பார்வதி, நுவரெலியா

கே: நான் ஒருவரைக் காதலிக்கிறேன், அவரும் என்னை மனப்பூர்வமாக நேசிக்கின்றார். அவரை நான் மணந்துகொள்ளலாமா?

ப: மணப்பதற்காகக் காதலிப்பதானால் தாராளமாக மணந்து கொள்ளுங்கள்!

ஃ

நா. வடிவேலு, சாவகச்சேரி

கே: தமிழனுக்கு ஆபத்து ஏற்பட்டது பற்றி, அரசினரைக் கண்டித்து அறிக்கை விடுகிறாரே ஜி. ஜி. பொன்னம்பலம். அந்த ஆபத்தைத் தவிர்க்கத் தமிழ் மக்களோடும், தமிழரசுக் கட்சியோடும் சேர்ந்து போராட முன் வருவாரா?

ப: சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் வேண்டாமா? ஆகையால்தான் செயலில் இறங்காமலிருக்கிறார்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து 'தபால் அட்டை'யில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

கோ. இ. து. கோவிந்தராசன்,
பொகவந்தலாவ

கே: மக்கள் குற்றம் செய்தால் மன்னனிடம் சொல்லலாம், ஆனால் மன்னரே குற்றம் செய்தால்?

ப; மக்கள் புரட்சி செய்து மன்னரைக் கவிழ்த்து விடலாம்.

ஃ

வே. மகேந்திரன்,
கொழும்பு-12

கே: 'தோட்டக்காரி' பார்த்தீர்களா? இனிமேலாவது இந்தியாவிலிருந்து வரும் தமிழ்ப் படங்களைப் பகிஷ்கரித்து விட்டு, நம் பட அதிபர்கள், இலங்கைத் தமிழ்க் கலைஞர்களைக் கொண்டு படம் தயாரிப்பார்களா?

ப: இலங்கையிலேயே நம் கலைஞர்களைக் கொண்டு தமிழ்ப் படம் தயாரிக்க நல்ல வாய்ப்பு உண்டு. அதற்காக இந்தியப் படங்களைப் பகிஷ்கரிக்க வேண்டியதில்லையே!

ஃ

சிவதாசன், சிறுப்பிட்டி

கே: திருமணம் செய்து சில தினங்களின் பின் இல்லற வாழ்க்கையில் அலுப்பு ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

ப: 'பூ! இவ்வளவுதானா?' என்ற மனப்பான்மையே.

ஃ

க. மார்க்கண்டன்,
வெள்ளவத்தை

கே: கடந்தஞாயிற்றுக்கிழமை ஒரு பத்திரிகையில் வெளிவந்த 'ஒரே வழி' என்ற சிறுகதையும் இ. த. எ. சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற 'ஒரே வழி' யும் ஒரே கதையா?

ப: ஒரே கதை தானும். இரண்டாம் பரிசை [illegible] கதை எழுதிய ஆ[illegible] எழுத்தாளர் சங்கத்தால் கண்டுபிடிக்க முடியவில்லையாம்! அந்த எழுத்தாளரின் வயது எட்டே எட்டுத் தானும். உலக அதிசயங்களில் இதுவுமொன்றும்!

ஃ

'மணிமாறன்', கொழும்பு-11

கே: ஒன்றுபட்டால், உண்டு வாழ்வு என்பதற்கிணங்க தமிழரசுக்கட்சி, இ. தொ. க., இ. தொ. கா., ஐ. தொ. கா., தி.மு.க ஆகிய எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மொழிப் பிரச்சினைக்கும், பிரசாவுரிமைக்கும் போராட்டம் நடத்தினால் நல்லது தானே?

ப: தனிச் சிங்களத்தை ஏற்றுக் கொள்ளும் கட்சி, பிரசாவுரிமைக்குப் போராடத் தயாராயில்லாத கட்சி-இவற்றுடன் தமிழரசுக் கட்சி எப்படி ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்த முடியும்!

ஃ

தாமரைச் செல்வி இராமநாதன்,
மாத்தளை

கே: அடங்காத் தமிழர் திரு. சுந்தரலிங்கம் திருகோணமலையிலும் தலை நீட்ட இருக்கிறாரே?

ப: அடிக்கடி தலையை நீட்டி, புறமுதுகிட்டோடினால்தானே மக்கள் மத்தியில் அவர் பெயர் அடிபட்டுக் கொண்டேயிருக்கும்!

ஃ

வி. கனகலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: திருமலை இடைத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடுமா?

ப: தேர்தல்களில் போட்டியிடும் வழக்கத்தை அ. இ. ஆனைப்பந்திக் காங்கிரஸ் அநேகமாகக் கைவிட்டு விட்டதே!

ஃ

க. பார்த்தசாரதிராசா,
தாவடி

கே; சில குமரிகள் சிங்களம் படிக்கப் போகிறோம் என்று தங்கள் பெற்றோருக்குச் சொல்லி விட்டு யாழ்ப்பாணம் பஸ் நிற்கு மிடத்தில் ஆடவர்களுடன் கைகோத்துக் கும்மாளம் கொட்டுகிறார்களே!

ப; சிங்களம் படிப்பதைப் பெற்றோர்கள் தடை செய்தால் இந்த ஆபாசக் கூத்துக்கள் நடைபெறுமா?

ஃ

ஆர். குணரத்தினம், கண்டி

கே: மாணவ ஆசிரியர் பதவிக்கு 100,00 பேர் மனுச் செய்திருக்கிறார்களாம். ஆனால் கல்வி மந்திரிக்குத் தேவை 10,000 பேர்தானே?

ப: இது பணம் திரட்டக் கல்வி மந்திரி கண்டுபிடித்த ஒரு சூட்சுமத் திட்டம். ஒரு லட்சம் அபேட்சகர்களும் தங்களின் விண்ணப்பப் பத்திரங்களுக்கு முத்திரைச் செலவாக ரூ. 500,000 செலுத்தியுள்ளனர். விண்ணப்பங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 60,000 செலவு செய்துள்ளனர். இந்த வகையில் அரசாங்கத்துக்கு மொத்த வருமானம் ரூ. 560,000.

ஃ

கு. களஞ்சியம், சண்டிலிப்பாய்

கே: மலையக மக்கள் போராட்டம் நடத்தாமலிருந்தால் உரிமை கிடைக்குமா? ஏன் சும்மாயிருக்கிறார்கள்?

ப; கிடைக்காது. காங்கிரஸ் தலைமை அவர்களின் உரிமை உணர்ச்சியை மழுங்கச் செய்துவிட்டதால் சும்மாயிருக்கிறார்கள்.

கே: ஜி. ஜி. மக்களுக்கு அறி[illegible]

ப: திரு. சுந்தரலிங்கத்தைப் பின் பற்றுகிறார்.

மறைந்த கலைஞர் எம். எஸ் பாலுவைப் பற்றிய 'சானா'வின் கட்டுரையுடன் இரு கவிதைகள் பிரசுரிப்பதாகக் 22—9—63 இதழில் அறிவித்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணங்களினால் அவை இடம் பெறவில்லை. இம்முறை அக் கவிதைகள் இடம் பெறுகின்றன.

—ஆசிரியர்

# காலனும் கண்ணில்லானே!

—திருமதி சிவயோகம் ஏரம்பமூர்த்தி—

மறைந்தனன் எம். எஸ். பாலு!
மட்டுமா நகரும் இன்று
துறந்தது கலையின் எல்லாத்
துறையையும்; இனிமேல் இங்கு
பிறந்தெவர் வருவார் இந்தப்
பெருமான் போலே மீண்டும்
சிறந்த நற் கலைகள் யாவும்
செழிப்புறச் செய்ய வல்லோர்?

நாடகக் கலையின் ஆசான்
நந்தமிழ்க் கவிஞன், நல்ல
பாடகன், பலரும் போற்றும்
பைந்தமிழ் நடிகன், பண்பில்
ஈடிணை இல்லாச் சிலன்
இலக்கிய கர்த்தா தன்னைக்
காடுறச் செய்த பொல்லாக்
காலனும் கண்ணில் லானே!

ஐயகோ! தமிழே, உன்னை
அணி செயும் மேலோர் இந்த
வையகந் தனிலே கொஞ்சம்
வாழ்வதும் அரிதோ? கண்ணீர்
பெய்வதும் ஒய்ந்தி டாதோ?
பேரிடி தினமும் தாக்கின்
உய்வதும் உண்டோ? துன்பம்
ஒன்றுதான் எங்கள் சொத்தோ?

——**——

# என்று காண்போம்!

—அன்பு முகையதீன்—

அன்புநல் வழியில் நின்று
அறிவுயர் பணிகள் செய்த
பண்பினர் பாலு ஐயா
பரிதவிக் கெம்மை விட்டு
சென்றனர் என்ற செய்தி
சிந்தையை வருத்துதையா!
என்றுநாம் உம்மைப் போன்ற
இனியவர் காண்போம் வாழ்வில்.

முத்தமிழ் வளர்க்க என்றும்
முயற்சித்தாய் வெற்றிகண்டாய்
உத்தம மான நல்ல
உயர் வுள்ள மாணவரை
இத்தரைக் கீந்தாய் என்றும்
எவற்றிலும் பங்கு கொண்டாய்
நித்தமும் எங்கள் நெஞ்சில்
நிலைத்து நீ வாழ்வாய் ஊழி!

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாவில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை:

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5000 சிங்களக் குடும்பங்கள் தேவையாம்

## திருமலைப் பகுதியைச் சிங்கள மயமாக்க பிக்குவின் திட்டம்

## பகிஷ்கார இயக்கத்தின் மீது பிலிப் பத்திரிகை பாய்ச்சல்

வட இலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் உள்ள காட்டுப் பிரதேசங்களைத் தமிழரசுக் கட்சியும், "நாம் தமிழர்" இரகசிய இயக்கமும் தினே தினே விழுங்கி வருவதால், அந்தப் பிரதேசங்களிலுள்ள நிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு சேருவாவில மங்கள ரஜமஹா விகாரத் தலைமை பிக்கு தம்பகஸ்யாரே சுமேதங்கார மகா நாயக்க தேரே காணி மந்திரி திரு. சி. பி. டி சில்வாவிடம் கேட்டுக் கொண்டுள்ளாரென்று "சவஸ" பத்திரிகை 8—10—1963ம் திகதி ஒரு செய்தி பிரசுரித்துள்ளது.

அந்த பிக்கு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"சேருவில பிரதேசம் சமஷ்டிக் கட்சிக்கும், நாம் தமிழர் இயக்கத்திற்கும் உட்பட்டு வருவதால், அந்தப் பிரதேசத்தில் எஞ்சிய பிரதேசத்தை சிங்களவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

(1) கடலிப்பிஞல் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கும் ஹிக்கடுவ, தொடந்துவ பிரதேசங்களிலிருந்து 5000 குடும்பங்களைக் கொண்டு வந்து சேருவில தெஹிவத்த பிரதேசத்தில் குடியேற்ற வேண்டும்.

(2) இவ்வாறு குடியேற்றப்படும் குடும்பங்களுக்கு அண்மையிலுள்ள கடலில் மீன் பிடிப்பதற்கும் சுண்ணாம்புக் கற்களில் சுண்ணாம்பு சுடுவதற்கும், உப்பு காய்ச்சுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(3) மட்டக்களப்பிலிருந்து திருமலை வரை உள்ள காடுகளை ஓரளவேனும் சுத்தம் செய்து தென்னை உண்டாக்க வேண்டும். கள்ளக் குடியேற்றக்காரர்கள் இங்கு வருவதைத் தடுக்க வேண்டும்.

(4) இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கும், தற்போதுள்ள குடியேற்றத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் முன்னிடம், தமிழ் உத்தியோகத்தர்களை இங்கு அனுப்பாமல், பௌத்த உத்தியோகத்தர்களை மட்டுமே அனுப்ப வேண்டும். அந்த உத்தியோகத்தர்களுக்கு சிங்களவர்களின் எதிர்கால முன்னேற்றத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுத்து, செயலாற்றும் முறையையும் கற்பிக்க வேண்டும். சேருவில தெஹிவத்த பிரதேசத்துக்குச் சிங்கள டி. ஆர். ஓ ஒருவரை நியமிக்க வேண்டும்."

### அங்கு அரசாங்கமே இல்லையாம்!

"நாட்டை இரு கூறுக்கும் சமஷ்டிக் கட்சியை அடக்க சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்குத் திறமை கிடையாது. சமஷ்டிக் கட்சியின் சிங்கள—எதிர்ப்பு இயக்கம் இவ்வாரம் மீண்டும் தொடங்கியுள்ளது" என்று "மகஜன எக்சத் பெரமுன"

### பத்திரிகைகள் மீது பாய்ச்சல்

"லங்கா தீப" சிங்களத் தினசரி 4—10—63ம் திகதி இந்தியப் பத்திரிகைகளையும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதராலயத்தையும் தாக்கி தலையங்கம் தீட்டியுள்ளது.

இப்பத்திரிகை கூறுவதாவது:-

"2000 ஆண்டுகளாக இந்த நாட்டை அடிமைப்படுத்த கொள்ளைக்காரச் சோழர்களும், பாண்டியர்களும், இதர தமிழர்களும் செய்த முயற்சிகளை யெல்லாம் இந்த நாட்டு மக்கள் இரத்தம் சிந்தி முறியடித்தனர். நாடுகளை அடிமைப்படுத்தும் பைத்தியம் மீண்டும் அவர்களைப் பற்றிக் கொண்டுள்ளது.

### சிங்கள இதழ்களில்...

என்னும் மக்கள் முன்னணியின் சிங்களப் பத்திரிகை இவ்வாரம் எழுதியுள்ளது.

"ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய முக்கோண மொழிக் கொள்கையின் காரணமாகச் சமஷ்டி இயக்கம் புத்துயிர் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் திறமையின்மையாலும், பிற்போக்குக் கட்சிகளின் ஆதரவாலும் அடிக்கடி கிளம்பும் சமஷ்டி இயக்கத்தின் காரணமாக அரசாங்க இலாகாகளின் வேலைகள் மிக மோசமான முறையில் சீர்குலைந்து வருகின்றன. வட, கிழ மாகாணங்களில் அரசாங்கமொன்று கிடையாது என்று சொல்லும் அளவுக்கு நிர்வாகம் தேய்ந்துபோய் விட்டது.

இலங்கையில் பல பகுதிகளில் இயங்கும் "நாம் தமிழர் இயக்கமும்" சமஷ்டிக் கட்சியின் ஓர் அங்கம் என்பது இரகசியமன்று.

கள்ளத் தோணித் தொல்லையை ஒழிக்க வேண்டுமாகுல், கள்ளத் தோணிகளை இந்நாட்டுக்குக் கொண்டுவரும் தரகர்களைப் பிடித்து விசாரணை செய்து ஆயுள் தண்டனை விதிக்க வேண்டும்" என்று இப் பத்திரிகை மேலும் எழுதுகிறது.

இந்நாட்டு தேசிய வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க இடமளிக்காமல், 'சால்வீனியா' போன்று பார்த்துக் கொண்டிருக்கும் போதே பல்கிப் பெருகும் தோட்டத் தொழிலாளர்கள் மூலமாக இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தையும் அடக்கி, இந்நாட்டைத் தென்னிந்தியாவின் ஒரு பகுதியாக்கும் பொருட்டு இந்தியப் பத்திரிகைகள் நடத்தும் இயக்கம் இப்பொழுது அம்பலமாகியுள்ளது. இந்தியப் பத்திரிகைகள் இலங்கை அரசாங்கத்துக் கெதிராக நடத்தும் பொய்ப் பிரசாரத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது இங்குள்ள இந்தியத் தூதராலயத்தின் கடமையாகும். கள்ளத்தோணிகளைத் திருப்பி அனுப்பும் விஷயத்திலும் இந்தத் தூதராலயம் போதிய ஒத்துழைப்பு அளிப்பதில்லை. அண்டை நாடுகளான பாகிஸ்தான், பர்மா, சீன நாடுகளுக்கு இந்தியாவிடம் நல்லெண்ணம் கிடையாது. நல்லெண்ணத்துடன் இருப்பது இலங்கை மட்டுந்தான். இந்த நல்லெண்ணத்தைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியா தம் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும்."

### தமிழ் அரசில் செல்வநாயக புரி

ஆலி-எல உப்புவெளி அரசாங்கப் பண்ணைக்கு அண்மையிலுள்ள சுமார் 150 ஏக்கர் அரசாங்கக் காடுகளை வெட்டி 125 சட்ட விரோத குடியேற்றக்காரர்களின் குடும்பங்கள் வசிப்பதாகவும், இந்தப் பகுதியை "தமிழ் அரசு" என்று அழைப்பதாகவும், அந்த 150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்துக்கு "செல்வநாயகம் புரி" என்று பெயர் சூட்டியிருப்பதாகவும் [illegible] செய்தியை வெளியிட்டுள்ளது.

அக் குடும்பங்களுக்கு ஒரு தமிழரசு முதலாளி எல்லா வசதிகளும் செய்து கொடுப்பதாகவும், ஒரு குடும்பத்துக்கு ஒன்று வீதம் அவர்களுக்குக் கள்ளத் துப்பாக்கிகளை அவர் வழங்கியிருப்பதாகவும் இப் பத்திரிகை குறிப்பிடுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிகளுத்துறை மாநாட்டிலே காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் ஜனநாயக—சோஷலிஸக் கொள்கையை ஏற்றுக்கொண்டதின் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் "கார்பன் கொப்பி"யாக தன்னை மாற்றிக் கொள்ள முயற்சி செய்துள்ளது என்று சுதந்திரக் கட்சியின் வாராந்த சிங்களப் பத்திரிகையான "சிங்களே" இவ்வாரம் எழுதியுள்ளது.

"சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கையை ஐ. தே. கட்சி தனது வேலைத் திட்டத்திலுள் திணித்துக் கொண்டது. இந்நாட்டில் பௌத்தத்துக்கு அந்தஸ்து வழங்கும் சுதந்திரக் கட்சியின் கொள்கையையும் ஐ. தே. கட்சி சுவீகரித்துள்ளது. பாடசாலைகளைத் தேசிய மயமாக்கும் சுதந்திரக் கட்சிக் கொள்கையையும் ஐ. தே. கட்சி அபகரித்துக் கொண்டுள்ளது" என்று சிங்களே மேலும் குறிப்பிட்டிருக்கிறது.



இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்கள் யாழ். நகரில் உள்ள கடைகளுக்குப் பகிஷ்கரிப்பு இயக்கம் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்கிருர்.

## இலங்கை திரும்புகிருர்



கடந்த ஒரு வருட காலமாக நைலோன் உற்பத்தி தொழில் நுட்ப முறைகளில் ஜப்பானில் பயிற்சி பெற்றுள்ள திரு. றெஜினோல்ட் மகேந்திரன் சேவியர் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ஓ. ஏ. சி. விமானமூலம் கட்டுநாயக்கா வந்து சேருகிருர்.

இவர் நைலோன் உலகில் மிகவும் புகழ் பெற்று விளங்கும் 'ரோறே' உரிமையாளரும் ஜப்பானில் நைலோன் உற்பத்தியில் முன்னணி வகிப்பவர்களுமான 'ரோயோ றேயோன்' ஸ்தாபனத்தினதும், பிரசித்தி பெற்ற 'சாக்கேயே சென்சபேயே' ஸ்தாபனத்தாரின் கூட்டுறவு திட்டத்துடன் அளிக்கப் பட்டுள்ள பயிற்சியைத் திறம்பட முடித்து மேலதிகாரிகளின் நன் மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

இளைஞரான திரு. மகேந்திரன் சேவியர் ஜப்பான் பாஷையை மிகச்சரளமாகப் பேசக் கற்றதுடன் ஜப்பானின் பல்வேறு பாகங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து தம் ஓய்வு நேரங்களில் ஜப்பானிய மக்களுக்கு இலங்கைத் தமிழரின் தற்போதைய அரசியல் நிலை, தமிழ்மக்களின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை எடுத்துக் கூறும் வாய்ப்பை நன்குபயன்படுத்தியுள்ளார்.

இவர் இலங்கையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மிகப் பெரிய நைலோன் உற்பத்தி ஸ்தாபனமான 'சிலோன் சிந்தற்றிக் மில்ஸ் லிமிட்டெட்'டில் ஜப்பானிய தொழில் நுட்ப குழுவினருள் ஓர் உதவி தொழில் நுட்ப வல்லுனராகக் கடமை ஏற்றுள்ளார்.

திரு. மகேந்திரன் சேவியர், ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும், கொழும்பு சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ் லிமிட் ஸ்தாபனத்தின் உதவிக் கணக்காளருமான திரு. சே. எப். சேவியரினதும் திருமதி சேவியரினதும் சிரேஷ்ட புதல்வராவர்.

ஆயிரக்கணக்கானபேருக்கு வேலை கிடைக்கும்!

ஆசிரியர் பதவி முதலிய நீங்கள் எதிர்பார்க்கும் உத்தியோகத்தைப் பெற்றுக் கொள்ளவும், பரீட்சைகளில் தேர்ச்சி பெறவும், படித்த பாடங்கள் ஞாபகத்தில் வைக்கவும், எத்தகைய கொடிய நபரையும் மடக்கி அடக்கவும் வேறு எதற்கு வேண்டுமானாலும் மந்திரம், உச்சாடனம் மாந்திரிகம், வைத்தியம் ஆகியவை செய்து கொடுப்போம். விபரம் விசாரியுங்கள். இல்லையேல் நேரில் சந்தியுங்கள்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திஸாநாயக்கா

கம்பனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் உரிமைப் போராட்டம்

## தமிழரசுத் தலைமையிலே தங்கியுள்ளது

## இத்தனை காலமும் ஏமாற்றப்பட்டவர்கள் இனி இ. தொ. கழகத்தில் சேரலாம்

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்டு தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார்கள் மலையக மக்கள். தம் எதிர்காலச் சுபீட்சத்தை நாடியே மலையக மக்கள் பாலைவனங்களைச் சோலைவனங்களாக்க இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்தார்கள். ஆனால், அந்த மக்கள் முன் இன்று- வாக்குரிமையின்மை, குடியுரிமையின்மை, மொழியுரிமை இன்மை, வேலை இன்மை, கல்வி இன்மை, இருக்க இடவசதி இன்மை என்னும் கோரப் பிசாசுகள் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன.

இதுதான் தொழிற் சங்கங்கள் மலையக மக்களுக்குச் செய்த தொண்டின் விளைவு. இதற்காகவா மலையக மக்கள் மாடாக உழைத்தார்கள்? நம்பியவர்களை, சுயநலத்திற்காகப் பாதாளக் குழியில் தள்ளுவதா மனிதாபிமானம்? இவற்றைத்தானா சர்வ தேசத் தொழிற் சங்கங்கள் போதித்தன? இதற்காகவா மலையக மக்கள் தொழிற் சங்கங்களில் சேர்ந்தார்கள்?

இந்த ஏமாற்று வித்தைகளை மலையக மக்கள் அறிந்து விட்டார்கள். எதிர்காலத்தில் இந்த ஏமாற்று வித்தை செல்லுபடியாகாது என்பதை அச்சங்கத் தலைவர்களுக்கு எடுத்துரைக்க மலையகமே திரண்டு எழுந்துவிட்டது. வேதனை பொறுக்க முடியாத சில மலையக மக்கள் தம் குறைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடத்திற்கு முறையிட்டனர். பொறுமையுடன் காத்திருந்த மலையக மக்கள் பொங்கி எழுந்தார்கள். தம் அடிப்படை உரிமைகளைப் பெற, தமக்கொரு சிறந்த தொழிற் சங்கம் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து கொண்டார்கள். இது காலவரை மலையக மக்களின் உரிமைகளை மீட்டுக் கொடுக்கப் பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் குரலெழுப்பிய இலங்கைத் தமிழரசுக்கட்சி இன்று மலையக மக்களின் கோரிக்கையை நிராகரிக்க முடியாது. மலையகத்தில் அடி வைத்து அங்கு ஒரு தொழிலாளர் கழகத்தையும் நிறுவி வளர்த்து வருகிறது. அதுதான் இலங்கைத் தொழிலாளர் கழகம்.

இ. தொ. கழகமே தமக்கு விமோசனத்தை அளிக்கும் என்ற உறுதியுடன் நாளுக்கு நாள் மலையக மக்கள் இ. தொ. கழகத்தில் சேர்ந்து அதன் பலத்தைப் பெருக்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

வாழையடி வாழையாக மலையகத்தையே தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வரும் மலையக மக்களும் இந்நாட்டுப் பிரஜைகளே. எனவே அவர்களும் வாழ வேண்டும்; அவர்களுக்கும் இந்நாட்டின் சுக துக்கங்களில் சம பங்கு உண்டு. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஆராய வேண்டும்.

### வாக்குரிமையும் • குடியுரிமையும்

இந்தியாவும் இலங்கையும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு அடிமைப்பட்டு இருந்த பொழுது, தென் இந்திய மக்களிற் சிலர் இங்கு இறக்குமதி செய்யப்பட்டனர். அம்மக்கள் மலைப்பிரதேசங்களில் உள்ள காடுகளை வெட்டி நாடாக்கித் தேயிலை, றப்பர் போன்ற ஏற்றுமதிப் பயிர்களை அங்கு உற்பத்தி செய்தார்கள். இந்த நாட்டை ஒரு பொன் கொழிக்கும் பூமியாக்கியவர்கள் அவர்களே.

மலையகத்தில் வாழ்ந்து வந்த தென் இந்திய மக்களை ஆதரித்து அவர்களை இந்த நாட்டுப் பிரஜைகளாக்கினார்கள், அன்றைய ஆட்சியாளர்கள். தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு வாக்குரிமையும் அளிக்கப்பட்டது.

காலகிரமத்தில் அவர்கள் வாக்குரிமைக்கு வாய்க்கரிசி போட்டு விட்டன, பின் வந்த அரசாங்கங்கள். இந்த நடவடிக்கையைத் தமிழ்க் காங்கிரஸ் ஆதரித்துப் பாராளுமன்றத்தில் வாக்களித்தது. இந்தக் காரணத்தைமுன்விட்டே திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரசில் இருந்து விலகி

**சுவாமிநாதன்**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தார். அன்று அரசாங்கத்திற்குச் சார்பாக வாக்களிக்கவில்லை என்ற ஒரு செயலில் இருந்தே, தமிழரசுத் தந்தையின் பெரும் பண்புகளையும் இடையறாத தியாகத்தையும் நாம் அறிய முடிகிறது.

### வேலை வசதிகள்

இலங்கை ஏட்டளவிலேயே ஒரு ஜனநாயக நாடு. பௌத்த, சிங்கள மக்களுக்கு

# மலை நாடு

மட்டுமே இங்கு சலுகைகளும், நீதியும் வழங்கப்படுகின்றன. இதர இனத்தவர்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் இட்ட வண்ணம் இருக்கிறது ஆட்சி பீடம். எதிர் காலத்தில் வட, கிழ் மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் இனம் வாழ அப்பிரதேசங்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும், மற்றும் மலையகத்தில் வேலையற்று வாழும் மலையக மக்களை வட, கிழ் மாகாணங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் நிலங்களில் குடியேற்றி வைத்து, அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இக் குறிக்கோளைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்றத்தில் பேசியது மட்டுமின்றி அதற்கு ஏற்ற நடவடிக்கையும் எடுத்து வருகின்றது.

மலையகத் தொழிலாளிகள் கடும் உழைப்பாளிகள். அவர்களே இன்றும் கூடிய நேர வேலை குறைந்த ஊதியத்துடன் செய்கிறார்கள். அவர்கள் மழை, வெய்யில், காற்று இவைகளைப் பொருட்படுத்தாது தினமும் மாடாக உழைக்கிறார்கள். இவர்களுக்கு மற்றைய தொழிலாளர்கள் அனுபவிக்கும் சலுகைகள் அளிக்கப்படவில்லை.

சுருங்கக் கூறின் தொழிலாளர்களின் துயரைத் துடைக்க தொழிற் சங்கங்கள் சாதகமான நடவடிக்கை ஒன்றும் [illegible] எடுக்கவில்லை. தேயிலைத் தோட்டங்கள் இலங்கையர் மயமாக்கப்பட்டால் சிங்களத் தொழிலாளர்களுக்கே முக்கிய இடம் வீதாசாரப்படி வழங்கப்படும். சிங்களத் தொழிலாளர்கள் மலையகத் தொழிலாளர்களைப் போல் மழை, வெய்யில், காற்று இவைகளைப் பொருட்படுத்தாது கடமையுணர்ச்சியுடன் மாடாக உழைப்பார்களா? அவர்களின் வேலைத் திறனை ஒரு முறை கொழும்புத் துறைமுகத்தைப் பார்வையிட்டால் புரிந்து கொள்ள முடியும்.

குறைந்த நேர கஷ்டமற்ற வேலையுடன் கூடிய சம்பளம் பெற வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோள். தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டதும் சிங்களத் தொழிலாளர்கள் அங்கு பெருந்தொகையில் புகுத்தப்படுவார்கள். இவர்கள் தங்கள் குறிக்கோளை நிறைவேற்ற வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவார்கள். இது நாட்டிற்கு ஒரு பெரிய பொருளாதார மந்தத்தை ஏற்படுத்தும். எனவே, தேசியமயமாக்கப்பட்டதின் பலனைப் பின்பு அரசாங்கம் உணரத் தொடங்கும்.

### கல்வி வசதி

கல்வியில் பின் தங்கியவர்களாகவே மலையக மக்கள் என்றும் விளங்குகிறார்கள். அவர்களில் படித்து முன்னுக்கு வரக்கூடியவர்கள் இல்லை என்று காரணம் அல்ல. அவர்கள் விமோசனத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தக்க சூழ்நிலையோ, வசதியோ இல்லை என்பதே முக்கிய காரணம்.

மலையகத்தில் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே போதிக்கப்பட்டு வருகிறது. ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களே இத்தனை வகுப்புக்களையும் நடாத்துகின்றனர். மற்றைய ஆசிரியர்களைப் போல் இவர்களுக்கு வேலைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படவில்லை. மலையக மக்கள் எந்த வகையிலும் உயர்தரக் கல்வி பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

வசதி உள்ளவர்கள் படித்துப் பட்டம் பெற்றால் பிரஜா உரிமை இல்லை என்ற சாட்டைக்கூறி அவர்களுக்கு அரசாங்க இலாகாக்களில் வேலை வசதி மறுக்கப்படுகின்றது. எனவே அவர்கள் தமது படிப்புக்கள் முடிந்ததும் தமக்கே சொந்தமான கரண்டியைத் தூக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

சிங்களம் படித்தால் அவர்களை இந்த நாட்டுப் பிரஜைகளாக்குவதாக அரசாங்கம் ஆசை வார்த்தை கூறி வருகிறது. சிங்களம் படித்துப் பட்டம் பெற்றால், அவர்களுக்கு மற்றைய பிரஜைகளுக்கு அளிக்கப்படும் வசதிகள் யாவும் அளிக்கப்படுமா? சிங்களம் அரசகரும மொழியாக [illegible] கத்தை நன்கு புரிந்துகொண்டால், இந்தப் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு மலையக மக்கள் ஏமாந்து போகமாட்டார்கள்.

இவை எல்லாவற்றையும் விளக்கி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பலமுறை கூறியுள்ளது.

### உரிமை பெற வழி

காங்கிரஸ் தலைவர்கள் மலையக மக்களின் புனர் வாழ்விற்குச் செயலளவில் எந்தவிதப் போராட்டத்திலும் இதுவரை இறங்கவில்லை என்று கூறின், அது மிகையாகாது. மலையக மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த இலட்சியங்கள், இவர்களால் சுயநலத்துக்காகச் சிதறடிக்கப்பட்டன. இதன் விளைவை இன்று மலையக மக்கள் அனுபவிக்கிறார்கள்.

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபின்பு முதன் முதல் திரு. தொண்டமான் அவர்களே தமிழரசுக் கட்சியின் விடாமுயற்சியினாலும், ஆதரவுடனும் பாராளுமன்றத்திற்கு ஒரு நியமன அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மலையக மக்களின் விருப்பு வெறுப்புக்களை அரசினருக்கு எடுத்துக் கூறவே அவர் மலையக மக்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அதனை அவர் செய்யவில்லை.

மலையக மக்கள் எதிர் காலத்திலாவது இவர்களை நம்பி ஏமாறாது தமது விமோசனத்திற்காகப் பாடுபடும் ஒரு கட்சியுடன் சேர்ந்து போராட வேண்டும். மலையக மக்களின் உரிமைகளுக்காக அன்றும் இன்றும் விசுவாசத்துடன் போராடும் கட்சி ஒன்று உண்டு ஆயின், அது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்று துணிபுடன் கூற முடியும்.

மலையகத்தில் தமிழ் அரசுக் கட்சியின் ஒத்தாசையுடன் இயங்கி வரும் தொழிற் சங்கமே இலங்கைத் தொழிலாளர் கழகம். எனவே இலங்கைத் தொழிலாளர் கழகத்தை மலையக மக்கள் ஆதரித்து, தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

### போராட வேண்டும்


சந்தர்ப்பம் ஏற்படும் போது மலையகம் பொங்கி எழவேண்டும். கத்தியின்றி, இரத்தமின்றித் தொடரப்படும் போராட்டங்களில் ஈடுபட்டு, உரிமைக்குப் போராட வேண்டும். மலையக மக்கள் எரிமலைபோல் குமுறி எழுந்தால் இந்த நாட்டின் எந்த சக்திகளாலும் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது.

மலையகத் தொழிலாளர் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் இறங்கினால் இந்த நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். மலையகத்தில் வெகு இலகுவாக அரசாங்கத்தின் கருங்காலிகளைக் கொண்டு வேலை நிறுத்தங்களை முறியடிக்க முடியாது. எனவே வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நடத்தி வெற்றி பெற முடியும்.

இந் நாட்டின் நூற்றுக்கு அறுபது வீத வருமானம் மலையக மக்களின் கரங்களில் தான் உண்டு. மலையக மக்களின் போராட்டத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். அந்நிய ஆஸ்தியும் குன்றிவிடும். அன்றுதான் மொழி வெறி பிடித்த அரசாங்கம் திகைப்புடன் எழுந்து மலையக மக்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கும்.

தொழிலாளர் தொடர்ந்து பிடிவாதமாக இருந்தால், அரசினர் நாட்டின் நலனைக் கருதியாவது அவர்களது கோரிக்கைகளைக் கொடுத்தே தீரவேண்டும். இதற்கு மலையக மக்கள் சிறிது தியாகம் செய்தல் வேண்டும். அன்றுதான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தீர்க்கதரிசனங்களை மக்கள் அறிவார்கள்.

எனவே, மலையக மக்கள் இலங்கை தொழிலாளர் கழகத்தில் முழு நம்பிக்கை கொண்டு கழகத்தோடு ஒத்துழைத்து, தியாகங்கள் பல புரிந்து, உறுதியுடனும் பிடிவாதமாகவும் தொடர்ந்து போராடினால் மானத்துடன் அவர்கள் வாழ முடியும்.



வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் அவர்களும் பகிஷ்கார இயக்கம் சம்பந்தமான பிரசுரங்களைக் கடை முதலாளிகளுக்குக் கொடுக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் இடதுசாரிகள் தீவிரம்

## அடிமைச் சாசனம் உருவாக்க எட்டப்பர்களுக்கு அழைப்பு

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் உலக அரங்கில் ஓரளவு கண்ணியமாகக் கணிகசப்படுவதற்காகக் கற்புக்கரசியாகவும் யோக்கியனாகவும் வேடம் போடுகிறார்கள்—நடிக்கிறார்கள். ஆனால் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வடகிழக்குப் பகுதிகளில் உள்ள எடுபிடிகளோ தன்மான உணர்வுக்குப் புறம்பான முறையில் உளறிக்கொட்டுகிறார்கள்.

இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு இடது சாரி ஐக்கிய முன்னணிக் கற்றுக் குட்டி தமிழ் பேசும் இனம் தனது போராட்ட நடவடிக்கைகளை உடன் கைவிட வேண்டுமென்று அறிக்கை விட்டிருந்ததைப் பார்த்தோம்.

### இடது சாரிகளின் இடக்கு வாதம்

இந்த வாரம், மற்றுமொரு இடது சாரி ஐக்கிய முன்னணிப் (சமசமாஜ) பிரமுகர் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குச் சவால்விட்டிருக்கிறார். இவர் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு சவால் விடுவதன் மூலம் பொது மக்கள் அரங்கில் தன் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார்போலும். கோட்சேயும், சோமராமதேரோவும் கூட மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளனரே!

சமசமாஜக் கட்சிப் பிரமுகரான இவர், சமசமாஜ வாலிப முன்னணிக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையிலேயே இந்தச் சவாலை விட்டுள்ளார். நல்ல காலம்-பொது மக்கள் முன்னிலையில் இதைக் கூறி சங்கடத்திற்குள் மாட்டிக் கொள்ளாது, ஏதோ ஒரு கையடங்கிய வாலிபர் கூட்டத்தில் இதைக் கூறித் தப்பித்துக் கொண்டார்.

### யார் கலந்து கொள்ள வேண்டும்?

ஐயா சமசமாஜக் கட்சிப் பிரமுகரே! தமிழ் பேசும் மக்கள் யாவரும் பங்கு கொள்ளும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கும்படி தமிழரசுத் தலைவர்களை வேண்டியிருக்கிறீர், 'தமிழ் பேசும் மக்கள் யாவரும்' என்று கருதுவது யாரை என்பது தெரியவில்லை? தேர்தல் காலங்களில் பொந்துக்குள் இருந்து தலையை நீட்டும் பிரமுகர்களைக் குறிப்பிடுகிறீரா? அல்லது பாராளுமன்றக்கதிரை தந்து அதுவும் போட்டியின்றிப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தால்தான் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக உழைப்பேன் என்று கூறும் அடங்காத் தமிழரைக் குறிப்பிடுகிறீரா? அல்லது செத்தொழிந்த இயக்கமான தமிழ்க் காங்கிரஸையும், அதன் 'தனிப் பெருந் தலைவரை'யும் குறிப்பிடுகிறீரா? அல்லது பாத பூசை செய்து புதிய பதவி பெற்று மேல் சபையில் கொலுவிருக்கும் எட்டப்பரைக் குறிப்பிடுகிறீரா? அல்லது கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணி என்ற பெயரில் அலரிமாளிகைக்குக் காவடி தூக்கும் சுயநலக் கும்பலைக் குறிப்பிடுகிறீரா? யாரைக் குறிப்பிடுகிறீர்கள்? இடதுசாரி ஐக்கிய முன்னணி என்ற சுண்டியெடுத்த அரை வேக்காட்டு வகுப்புவாத இயக்கத்தில் அமிழ்ந்து கிடக்கும் தங்களையும் தங்களைச் சார்ந்த கூழ் முட்டை வீரர்களான கொம்யூனிஸ்டுகளையும் குறிப்பிடுகிறீர்களா?

**பூங்குன்றன்**

### மக்கள் புகட்டிய பாடம்

இவர்கள் அனைவரும் இழந்த நமது உரிமைகளைப் பெற்றுத் தரும் யோக்கியாம்சம் அற்றவர்கள் என்பதைக் கடந்த மூன்று பொதுத் தேர்தல்களின் போதும் தமிழ் பேசும் மக்கள் துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். இவர்கள் உண்மையில் தமிழ் பேசும் மக்களின் நலனில் நாட்ட முடையவர்களாக இருந்திருந்தால் தங்கள் வழியை மாற்றியிருப்பார்கள். தமிழ் பேசும் மக்கள் நடாத்தும் போராட்டங்களில் கலந்து கொண்டிருப்பார்கள்.

'தமிழர் யாவரும்' என்று குறிப்பிடும்போது நீங்கள் நிச்சயம் பொது மக்களைக் குறிப்பிட்டிருக்க முடியாது. தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் பேசும் மக்கள் மூன்று பெரும் போராட்டங்களை நடாத்தியுள்ளார்கள். அவற்றின் மூலம் தாங்கொணாத் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவித்துள்ளார்கள். என்றாலும் மீண்டும் அவர்கள் தலைமையையே விரும்புகின்றார்கள். எனவே நீங்கள் 'தமிழர் யாவரும்' என்று குறிப்பிடுவது பொது மக்களைக் கருத மாட்டாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

### எடுத்த நடவடிக்கை என்ன?

நீங்கள் கூறும் 'தமிழர் யாவரும்' பங்குகொள்ளக் கூடிய திட்டம் ஒன்று உருவாகப் போவதுமில்லை. அப்படியொரு முயற்சியை தமிழ் பேசும் மக்கள் ஏற்கப் போவதுமில்லை.

இத்தனை காலம் தமிழ் பேசும் மக்களின் நலனில் நாட்டமுள்ள நீவிர், இற்றை வரை தமிழ் பேசும் இனத்தின் இழந்த உரிமைகளுக்காக எடுத்த நடவடிக்கைகள் தான் என்ன? கடந்த 61ம் ஆண்டு தமிழ் இனம் முழுவதும் ஏகோபித்துக் கலந்து கொண்ட போராட்டத்தின்போது நீங்கள் எங்கு இருந்தீர்கள்?

உங்கள் அரை வேக்காட்டு இடதுசாரி ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கொம்யூனிஸ்டுப் பிரமுகர்கள் சிலர் மக்கள் வெறுத்து ஒதுக்கிய கூப்பன் அரிசி வினியோகத்தில் ஈடுபட்டு மூக்குடைபட்டு முக்காடு போட்டு மூலையில் குந்தியதை மறந்து விட்டீர்களா? இல்லை உங்கள் கட்சிப் பிரமுகர்கள் இரகசிய நடவடிக்கைமூலம் போராட்டத்தை நசுக்கும் கும்பலுடன் ஒத்துழைத்ததை மறந்து விட்டீர்களா? இல்லை உங்கள் கட்சியில் இருந்த சிலர் தன்மான உணர்வால் உந்தப்பெற்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார்கள். அவர்கள் இன்று எங்கே? உங்கள் கட்சியில் உளரா? பதில் கூறத்தான் முடியுமா?

நடந்து முடிந்த போராட்டங்களில் நேரடியாகக் கலந்து கொள்ளத்தான் உங்கள் தென்னிலங்கை எசமான்கள் அனுமதி தரவில்லை என்றால், அனுதாபமாவது தெரிவித்தார்களா? மாறாக எட்டப்பர்களாக மாறி, காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தில் முனைந்தீர்கள். இவற்றைத் தமிழ் பேசும் இனம் நிச்சயம் மறந்துவிடவில்லை.

இந்நிலையில் நீங்கள் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குச் சவால் வேறு விடுகிறீர்களா?

கடந்த கால நடவடிக்கைகளை வேண்டுமானால் மறந்துவிடுவோம். நடந்தவை கடந்தவையாகட்டும் என்று விட்டு விடுவோம்.

### சரணடைவீர்கள்

நீங்கள் கருதும் தமிழர் யாவரும் ஒப்பக்கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். (அப்படியொரு திட்டம் தீட்டப்பட்டால் அது மரண சாசனமாகத்தான் இருக்கும்.) அத் திட்டத்தின்படி போராட்டம் ஒன்று நடைபெறப் போகிறது, அதில் நீங்களும் கலந்து கொள்ளப் போகிறீர்கள் என்றதும் அதை உங்கள் தென்னிலங்கை எசமான்கள் ஒப்புவார்களா? அவர்கள் உங்கள் செயலைத் தடுத்து நிறுத்தினால் நீங்கள் தென்னிலங்கைத் தலைமையைத் துறக்கத் தயாரா? நிச்சயம் இது நடக்கப் போவதில்லை. இன்று சுதந்திரக் கட்சி அரசாங்கம் எதை யெல்லாம் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கிறதோ அதையெல்லாம் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் தனது வேலைத் திட்டமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இவற்றைத் தெரிந்திருந்தும் நீங்கள் தென்னிலங்கைத் தலைமையைத் துறக்கவில்லை. எனவே முன் குறிப்பிட்டது போன்ற நிலையொன்று உருவாகினால் நிச்சயம் நீங்கள் தென்னிலங்கை எசமான்களின் பாதாரவிந்தங்களிலேயே சரண் புகுவீர்கள்.

இன்று தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழிக்கு அரியாசனத்தில் சரியாசனம் வேண்டுமென்றும், அநீதியான முறையில் தமிழ்ப் பிரதேசத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டுமென்றும், மலைநாட்டு மக்களுக்கு குடியுரிமை வாக்குரிமை வழங்கப்படவேண்டுமென்றும், இந்த உரிமைகளை நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொள்ளவும், நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கவும் ஒற்றையாட்சி ஒழிக்கப்பட்டு கூட்டாட்சி மலர வேண்டுமென்றும் கோரிப் போராடுகிறார்கள்.

இவற்றில் எதையாவது உங்கள் அரைவேக்காட்டு இடதுசாரி ஐக்கிய முன்னணியோ அல்லது கிழடு தட்டிய மலட்டுக் கட்சியான சமசமாஜக் கட்சியோ ஏற்றுள்ளதா? இதற்கு மாறாக, சுதந்திரக் கட்சியிலும் பார்க்க ஒருபடி மேலே நிற்கும் வகுப்புவாத வேலைத் திட்டத்தையல்லவா இடதுசாரி ஐக்கிய முன்னணி வகுத்து வைத்திருக்கிறது. இந்த இலட்சணத்தில் நீங்கள் கூறுகிறீர்கள் 'தமிழர் யாவரும்' பங்கு கொள்ளும் திட்டம் வேண்டுமென்று! ஏன், பிரச்சினையை மூடி மறைக்காது சுருக்கமாகவும் விளக்கமாகவும், 'தமிழர் யாவரையும்' சிங்கள வெறி பிடித்த ஆட்சியாளருக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் அடிமைச் சாசனம் ஒன்று உருவாக்க வேண்டுமென்று கூறியிருக்கலாம் அல்லவா?

### எது ஒழுங்கற்றது?

அடுத்து பகிஷ்கார இயக்கம் உடன் வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும், அது ஒழுங்கற்றது என்றும், காந்திய தத்துவத்திற்குப் புறம்பானது என்றும் நீங்கள் கூறுகிறீர்கள்.

பகிஷ்கரிப்பு இயக்கம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பலமுறை அடித்துக் கூறியுள்ளார்கள். மேலும் பகிஷ்கரிப்பு இயக்கம் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்படும் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு

(13-ம் பக்கம் பார்க்க)

# ஆட்சியாளரின் பொய்யுரைக்கு தமிழரசுத் தந்தை சாட்டை

## கற்புக்கரசி வேடம் எத்தனை நாளைக்கு?

பலே சூதாடி! சூதாடுவது தான் வேலை — வாழ்வு — வாழ்க்கையின் இலட்சியம் என்ற நிலையிலே வாழ்பவன் அவன்.

சூதாட்டந்தவிர வேறு வேலைகளில் பிறருடன் அவனுக்குத் தொடர்பே கிடையாது. ஊரார் அவனைக் கண்டு மிரண்டிடும் அளவுக்கு அவனது சூதாட்டப் பித்து வளர்ந்துவிட்டது.

திடீரென ஒருநாள் அவன் ஊரார் ஒருங்கே கூடியுள்ள கூட்டத்தில் தன்னைப்பற்றிப் பேசி, அறிமுகம் செய்து கொண்டான்.

"நான் ஒரு சூதாடி! சோம்பேறி" என்ற முறையிலே அல்ல.

"ஊர் மக்களே, உங்களுக்கு என்னைத் தெரியும். மிகமிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். என்னைப் பற்றி அறியாத ஒன்றையும் நான் உங்களுக்கு சொல்லப் போவதில்லை.

நான், மிகவும் யோக்கியமான முறையிலே எனது வாழ் நாளைக் கழித்திருக்கிறேன். நாணயம் தவறாதவன், சுறுசுறுப்புக்குப் பெயர் போனவன் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாததல்ல.

ஆகவே, இந்த நிலையில் எனக்கு ஒரு பட்டம் தர வேண்டும். என்மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதற்குச் சான்றாகத் தர வேண்டும்.

'யோக்கியன்' என்ற அடைமொழியோடு என்னை இன்று முதல் அழையுங்கள்" என்று கேட்டான்.

ஊரார் இதனை ஒப்புவரா?

விபச்சாரி பெயர் பெற்ற விபச்சாரி. வாலிபர்களை வலிந்து வலிந்து பிடித்திழுத்து விபச்சாரியாகவே காலத்தைக் கடத்தி வருபவள்.

வயது நாற்பதுக்கும் மேல் இருக்கும் என்றாலும் வாலிப வனிதையாகத்தான் காட்சியளிப்பாள். வசிகரி என்று பிறர் நினைத்திடும் அளவுக்குத் தன்னைச் சிங்காரித்துக் கொள்வதிலே கைதேர்ந்தவள் அவள்.

போவோர் வருவோரைக் கண்காட்டி, கைகாட்டி அழைத்திடுவாள் அவள்.

விபச்சாரி என்று ஊரிலே இழித்தும் பழித்தும் எண்ணப்பட்ட, பேசப்பட்ட அவள், ஊர்மன்றத்தைை ஒரு நாள் கூட்டி எனக்குக் 'கற்புக்கரசி' என்ற பெயரைக் களிப்புடன் சூட்டவேண்டுமென்று கேட்டாள்.

ஆம்; சுண்டியெடுத்தவிபச்சாரி தனக்குக் கற்புக்கரசி என்ற அடைமொழி வைத்து அழைக்கும்படி ஊர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தாள்.

இது கற்பனைக் கதையல்ல. தேர்ந்தெடுத்த யதார்த்தக் கதையாகும்.

### அயோக்கியத்தனம்

இந்நாட்டு ஆளவந்தாரின் அண்மைக்கால நடவடிக்கை இவற்றை ருசுப்படுத்துகிறது. இலங்கையின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றிருந்த திரு. பி. டி. எஸ். குலரத்ன 'இலங்கையின் சட்டங்கள் இன, மத பாகுபாடுகளுக்கு இடமளிக்கவில்லை' என்று விளாசித் தள்ளியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைப் பார்க்கையில் சுண்டியெடுத்த சூதாடி தன்னை யோக்கியன் என்றும், அசல் விபச்சாரி தன்னைக் கற்புக்கரசி என்றும் வாதாடுவது போன்ற சம்பவங்களே மனத்திரையில் வந்து மோதுகின்றன.

சட்டத்தின் மூலமும் நிர்வாக நடவடிக்கைகள் மூலமும் இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினர் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஐ. நா. மனித உரிமைச் சாசனத்திற்குப் புறம்பான முறையில் ஆட்சி பீடத்தின் உச்சியில் அமர்ந்திருப்போர் இனவொழிப்பு நடவடிக்கையில் வெகு தீவிரமாகச் செயல்படுகின்றனர்.

ஊர் அறிய உலக அறிய இந்நாட்டில் வாழக்கூடிய தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன. தொழில் உரிமைகள் தினம் தினம் அபகரிக்கப்படுகின்றன. வளர்ந்து வரும் சிறார்களின் கல்வி வசதியும் மற்றும் ஏனைய வசதிகளும் மறுக்கப்படுகின்றன.

மொழிச் சட்டத்தின் மூலம் தமிழ் பேசும் இனமே நிர்மூலமாக்கப்படுகின்றது. குடியேற்றத் திட்டம் என்ற பேரில் தமிழ் பேசும் மக்களின் பிரதேசம் தினமும் களவாடப்படுகின்றது. சிங்களக் கலை, கலாச்சாரங்கள் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்படுகின்றன.

### மத ஒழிப்பு

அரசாங்க மதம், புத்த மதம் என்று பிரகடனம் செய்யாத போதிலும்,

([illegible] பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிஷ்கரிப்பு இயக்கம் ஆரம்பம்

### அரங்கம் 13

அயர் குடியரசு இராணுவத்தை ஒழித்துக் கட்டுவதற்காக மைக்கேல் கொளின்ஸ் தலைமையிலுள்ள இடைக்கால அரசாங்கம் ஒரு திட்டம் தீட்டியது. அதன்படி, முன்னர் ஆங்கிலப் படைகளில் பணியாற்றியவர்களும் ஆர். ஐ. பொலீஸில் பணிபுரிந்தவர்களும் அயர் சுதந்திர மாநில இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் குடியரசுவாதிகளை வெறுப்பவர்களாகையினால் குடியரசு இராணுவத்தினருக்கும் சுதந்திர மாநில இராணுவத்தினருக்குமிடையில் சச்சரவுகளுக்குக் குறைவேயிருக்கவில்லை,

சுயேச்சையாக இயங்கும் குடியரசு இராணுவத்தின் வாரியம் — அதாவது நிறைவேற்றுங் குழு, தமது தலைமைப் பீடத்தை டப்ளினிலுள்ள நான்கு முன்றில்களில் (போ கோட்ஸ்) அமைக்க முடிவு செய்தது. அம்முடிவை ஏற்று டப்ளின் பிரி

## இராணுவத்தின் மத்தியில் சச்சரவு

கேட், நான்கு முன்றில்களை இடைக்கால அரசாங்கத்திடமிருந்து கைப்பற்றியது. இடைக்கால அரசாங்கத்தின் சுதந்திர மாநில இராணுவம், குடியரசு இராணுவத்தினருக்குச் சென்றவையெல்லாம் ஆத்திரமூட்டி வந்தது. இதற்குப் பதிலுக்கு முகமாகக் குடியரசு இராணுவம் ஒப்பந்த சார்புக் கட்சியினரின் கூட்டங்களைக் குழப்ப முற்பட்டது. ஆதர் கிரிபித் பேசிய கூட்டங்களில் இவ்வீரர்கள் குழப்பம் செய்ததோடு மைக்கேல் கொளின்ஸ் பேசுவதற்காக ஓரிடத்தில் அமைக்கப்பட்ட மேடைக்கு நெருப்பும் வைத்தனர்.

இவ்வாறான செய்கைகளை டி வேலரா ஆதரிக்கவில்லை. எனினும் அவற்றைக் கட்டுப்படுத்த அவரிடம் அதிகாரமும் இருக்கவில்லை. பத்திரிகைகளோ குடியரசுவாதிகளின் செய்கைகளைப் பெருப்பித்து எழுதின; சுதந்திர மாநிலவாதிகளின் செயல்களை இருட்டடிப்புச் செய்தன. இவ்வாறுகப் பத்திரிகைகள் ஒப்பந்தத்துக்கு ஆதரவு தேடின!

வட அயர்நாட்டில் கத்தோலிக்கர்களுக்கு இன்னல் விளைவிக்கப்பட்டு வந்தமையால் 1920ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தோள் அயரின் பெல்பஸ்ற்றில் உற்பத்தி செய்யும் பொருட்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனத் தீர்மானித்ததோடு அதை நடைமுறைக்கும் கொண்டு வந்தது. எனினும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் இடைக்கால அரசாங்கம் அந்தப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு விட்டது. பகிஷ்கரிப்பை மீண்டும் ஆரம்பிக்க அயர் குடியரசு இராணுவம் முடிவு செய்தது. பெல்பஸ்ற் பொருட்களை ஏற்றி வந்த புகைவண்டிகள் மறிக்கப்பட்டு அந்தப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த நிலை இன்னும் சில நாட்கள் நீடிக்குமானுல் நிச்சயமாக ஓர் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் என்பது யாவருக்கும் தெரிந்திருந்தது.

## செய்திகள் இருட்டடிப்பில் பத்திரிகைகள் தீவிரம்

அவ்வாறான ஒரு யுத்தத்தைத் தவிர்க்கும் பொருட்டு அயர்நாட்டுத் தொழிற் கட்சி டி வேலராவுக்கும் ஆதர் கிரிபித்துக்கும் இடையில் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து வைத்தது. தொழிற் கட்சி ஒரு திட்டத்தைத் தயாரித்தது. அதன் பிரகாரம், அயர்நாட்டின் பிளவுபட்ட இராணுவம் ஒன்ருக்கப்பட வேண்டும்; தேர்தல் ஒன்று நடைபெறும் வரையும் தோள் அயரினே இடைக்கால ஆட்சியை நடாத்த வேண்டும். இந்தத் திட்டத்தை டி வேலரா ஏற்றுக் கொண்டாலும் குடியதிபதி ஆதர் கிரிபித் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

இந்நேரத்தில், அயர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தை டி வேலராவும் அவரது குடியரசுக் கட்சியினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அயர்நாட்டுக் கத்தோலிக்கத் திருச்சபை புத்திமதி கூறியது. அயர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் அயர் குடியரசை முன்னர் நிறுவிய போது அந்தக் குடியரசை அங்கீகரிக்க மறுத்த கத்தோலிக்கத் திருச்சபை இப்பொழுது இவ்வாறுகப் புத்திமதி கூற முயல்வது வருந்தத்தக்கது என்று டி வேலரா அதற்குப் பதிலளித்தார்.

பெல்பஸ்ற் பொருட்களைத் தென் அயர்நாட்டில் பகிஷ்கரித்தும் அங்கு இனவெறி அடங்கியதாகத் தெரியவில்லை. ஆங்கில ஏகாதிபத்தியம் வட அயர்நாட்டு அரசாங்கத்திற்குப் பொருளாதார உதவி அளித்தமையால் குடியரசுவாதிகளின் பகிஷ்கரிப்பு அவ்வளவாகப் பயனளிக்கவில்லை. தினமும் கத்தோலிக்கர் சுட்டும் அடித்தும் கொல்லப்பட்டனர்; கத்தோலிக்கர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன; கத்தோலிக்கர்களின் வீடுகளும் வாணிப நிலையங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. இவையெல்லாம் வட அயர்நாட்டில் நடைபெற்றுக் கொண்டு வந்தன. ஆனுல் அயர்நாட்டின் தென் கரையிலுள்ள கோக் மாவட்டத்திலும் புரட்டஸ்தாந்த இனவெறி தலைகாட்ட ஆரம்பித்தது. அயர் குடியரசு இராணுவத்தின் பதில் தளபதிகளில் ஒருவரான ஓநீல் அங்குள்ள புரட்டஸ்தாந்தர் ஒருவரின் வீட்டுக்கு 25—4—1922ல் சென்ற பொழுது, வீட்டு வாசலில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைக்குப் பழி வாங்கும் பொருட்டு அயர் குடியரசு இராணுவத்தினர் சுற்றுடலிலுள்ள புரட்டஸ்தாந்தர் பத்துப் பேரை அடுத்தடுத்த நாட்களில் சுட்டுக் கொன்றனர். எனினும் இந்தப் படுகொலைகளை அயர் குடியரசு இராணுவத்தின் தலைமைப் பீடமோ டி வேலராவோ ஆதரிக்கவில்லை. வாழ வழியின்றி வந்தாரையெல்லாம் வரவேற்று வாழ்வளித்த அயர்

**'கோமகன்'**
**'மாமல்லின்'**

இனம் பழிக்குப் பழிவாங்க எண்ணித் தன் பண்பாட்டை இழக்கப்படாது என டி வேலரா அயர் குடியரசு இராணுவத்தினருக்கு எடுத்துக் கூறினர்.

### அரங்கம் 14

ஆதர் கிரிபித்தினுலும் இடைக்கால அரசாங்கத்தினுலும் படிப்படியாக அழிக்கப்பட்டு வரும் குடியரசைக் காப்பாற்றுவதற்காக அ. கு. இராணுவம் தயார் செய்வதற்கு அதனிடம் போதிய ஆயுத பலம் இருக்கவில்லை. சு. அ. மா. இராணுவத்தினரிடமோ முன்னர் கைவசமிருந்த ஆயுதங்களைத் தவிர ஆங்கிலேய அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட 4,000 படைத்துப்பாக்கிகளும், 2,200 சுழல் துப்பாக்கிகளும் 6 எந்திரத் துப்பாக்கிகளும் இவற்றிற்கான குண்டுகளும் இருந்தன; இன்னும் ஆயுதங்கள் வந்து சேர்ந்து கொண்டு இருந்தன. அ. கு. இராணுவத்தினர் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ள

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

தானுலும் அதற்குரிய பணம் அவர்கள் கைவசம் இருக்கவில்லை. முன்னர் சேகரிக்கப்பட்ட பணம் அனைத்தும் இடைக்கால அரசாங்கத்தினரிடம் இருந்தது.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்த குடியரசு இராணுவத்தினர், பண்டசாலைகளிலிருந்து பலாத்காரமாகப் பொருட்களைப் பெறுவதென்றும் தேவையேற்படும் பொழுது உயர் பதவிகளிலிருக்கும் ஆங்கில அதிகாரிகளின் கார்களைப் பலாத்காரமாகப் பறிப்பதெனவும் தீர்மானித்து அவ்வாறே செய்தும் வந்தனர். அரசாங்கத்தின் அஞ்சல் அலுவலகங்களை முற்றுகையிட்டு அங்கிருந்த பணத்தையும் குடியரசுவாதிகள் கொள்ளையடித்தனர். இந்தப் பணம் தமது தேவைக்குப் போதாதெனக் கண்ட அவர்கள், இடைக்கால அரசாங்கத்தின் பணம் போடப்பட்டிருக்கும் அயர்நாட்டு வங்கியை 1-5-1922ல் கொள்ளையடித்து 50,000 பவுணைக் கொண்டு சென்றனர்.

இடைக்கால அரசாங்கத்தினரின் இராணுவத்திலும் குடிகள் காவலர் படையிலும் உறுப்பினர்கள் சேரா வண்ணம் குடியரசு இராணுவத்தினர் பிரசாரம் செய்து வந்தனர். இவ்வாறுக அயர் நாட்டு இராணுவத்தில் ஏற்பட்ட பிளவு மேன் மேலும் வளர்ந்து கொண்டு சென்றது. குடியதிபதி ஆதர் கிரிபித்துக்கும் டி வேலராவுக்கும் இடையில் சமரசம் ஏற்பட முடியாது போகவே, இராணுவத்தின் இரு பகுதித் தலைவர்களும் தாமாகவே 2-5-1922ல் பேச்சு வார்த்தைகள் நடாத்த ஆரம்பித்தனர். 4-5-1922ல் இரு பகுதிகளுக்குமிடையில் ஒரு யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் அத்தலைவர்களுக் கிடையில் ஒரு திட்டவட்டமான முடிவு எதுவும் ஏற்படவில்லை.

தோள் அயரின் 17-5-1922ல் கூடி நிலைமையை ஆராய்ந்தது. ஏமன் டி வேலராவையும் மைக்கேல் கொளின்ஸையும் ஒரு சமாதானத்

## நாடெங்கும் மதக் கலவரம்

திட்டத்தைத் தயாரிக்கும்படி அம் மன்றம் பணித்தது. ஆரம்பத்தில் இருவருக்குமிடையில் எதுவித கருத்து ஒற்றுமையும் ஏற்படவில்லை. எனினும் உள்நாட்டு யுத்தம் ஒன்றின் பீதி ஒரு சமரசத் திட்டத்திற்கு வழி வகுத்தது. இரு தலைவர்களும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தின் படி,

எந்தத் தேர்தலை யூன் மாதத்தில் நடாத்த வேண்டும் என ஆதர் கிரிபித் ஆலாய்ப் பறக்கின்ருரோ அந்தத் தேர்தல் நடாத்தப்படலாம். ஆனுல் அந்தத் தேர்தலில் ஆங்கிலேயரும் ஆதர் கிரிபித்தின் குழுவினரும் கைச்சாத்திட்ட ஒப்பந்தமோ அதன் மூலம் தோன்றும் புதிய யாப்பு முறையோ தேர்தலில் பிரச்சினைகளாகக் கிளப்பப்படமாட்டா. மூன்றுவது தோள் அயரினுக்காக நடாத்தப்படும் தேர்தலாகக் கருதப்படும் அத்தேர்தலில் ஒப்பந்த சார்புக் கட்சி வேட்பாளர்களாக முன்வரும் 66 பேரையும் எதிர்த்து ஒப்பந்த எதிர்ப்புக் கட்சி வேட்பாளர்களை நிறுத்தாது; அதே போல ஒப்பந்த எதிர்ப்புக் கட்சி வேட்பாளர்கள் 58 பேரையும் ஒப்பந்த சார்புக் கட்சி எதிர்க்காது. தேர்தல் முடிவில், புதிய தோள் அயரின் குடியதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும். ஒப்பந்த சார்புக் கட்சியைச் சேர்ந்த ஐவரும் மற்றக் கட்சியைச் சேர்ந்த நால்வரும் அமைச்சர்களாக நியமிக்கப்படுவர். பாதுகாப்பு மந்திரி இராணுவத்தினராலேயே தேர்ந்தெடுக்கப்படுவார். நாட்டில் அமைதி ஏற்பட்ட பின் புதிய வாக்காளர் இடாப்புக்களின்படி ஒப்பந்தத்தின் மீதான தேர்தல் நடைபெறும்.

டி வேலராவுக்கும் மைக்கேல் கொளின்ஸுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதைக் கேள்வியுற்றதும் பிரித்தானிய அரசாங்கம் கொதித்தெழுந்தது. மீண்டும் போரொன்றுக்குத் தயார் செய்தது. நாசகாரிக் கப்பல் ஒன்றையும் இன்னும் பல போர்க் கப்பல்களையும் வட அயர்நாட்டுக்கு அனுப்பியது. பத்தொன்பது பட்டாலியன்கள் இருந்த வட அயர்நாட்டுக்கு இன்னும் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை ஆகியவற்றை அனுப்ப ஆயத்தங்கள் செய்தது. கொளின்ஸின் தலைமையில் அயர்நாட்டில் இயங்கி வந்த இடைக்கால அரசாங்கத்திற்குப் படைப்பல உதவிகள் அளிப்பதை நிறுத்தியது. தென் அயர்நாட்டிலிருந்த ஆங்கிலப் படைகள் அனைத்தையும் டப்ளினுக்கு வரவழைத்து, அவசியம் ஏற்படின் டப்ளின் நகரை நிர்மூலமாக்குவதற்குத் திட்டங்கள் தீட்டியது.

ஆதர் கிரிபித்தும் மைக்கேல் கொளின்ஸும் ஆங்கில ஆட்சியினரால் லண்டனுக்கு அழைக்கப்பட்டனர். ஆதர் கிரிபித், டி வேலராவோடு மைக்கேல் கொளின்ஸ் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தான் வெறுப்பதாகக் கூறினர். ஆங்கிலேயருக்கும் தமக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காகவே தான் இந்தப் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகவும் கொளின்ஸ் விளக்கம் கொடுத்தார்.

(வளரும்)


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாய்க்க வீதி,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன் போன் : 3411


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஒக்டோபர் மாதம் 13-ந் தேதி

194 ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# மற்றொரு திட்டம்

தமிழினம் அழிய, சிங்கள இனம் பெருக, ஒரே இனம் வாழ, ஒரே மொழி ஆட்சிபுரிய ஒரு நீண்டகாலத் திட்டத்தைத் தீட்டியுள்ளனர் ஆட்சியாளர். தமிழ் பேசும் இளஞ்சிறார்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதே இத் திட்டம். இது பயங்கரமான, கொடிய திட்டம் என்பது அலசி ஆராய்ந்தால் புலனாகும்.

சிங்கள அமுலில் கண்மூடித்தனமாக இறங்கிய அரசாங்கம், அதே வேளையில் நீண்டகாலத் திட்டத்தை நடத்தவும் வழிவகுத்தது. அதற்கென ஒரு மந்திரிகள் உப குழுவையும் நியமித்துள்ளது.

சிங்களத்தைக் கட்டாயப் பாடமாக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. எல்லா அரசினர் பாடசாலைகளிலும் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, சிங்கள வகுப்புகள் தொடங்கப்படுமாம். பின்னர் சிங்களம் படிக்குமாறு தமிழ் பேசும் பிள்ளைகளைத் தூண்டுவார்கள். கட்டாயப்படுத்துவார்கள். ஆசை வார்த்தை காட்டுவார்கள்.

இந்த நாட்டில் சிங்களம் படித்தால்தான் பிள்ளைகளுக்கு எதிர்காலமுண்டு எனப் பெற்றோரை ஏமாற்றுவார்கள் — மிரட்டுவார்கள். அதற்காக சில சில்லறைச் சலுகைகளையும் வழங்குவார்கள். இன்னும் பல தந்திரங்களைக் கையாள்வர், நம் எதிர்கால சந்ததியை அழித்தொழிக்க.

இன்று நயத்தாலும் பயத்தாலும் சிங்களத்தைப் போதிக்க முயற்சி செய்பவர்கள், அதற்கு எதிர்ப்பில்லையேல், நாளை சிங்களத்தையே போதனா மொழியாக்கத் தயங்க மாட்டார்கள். இஷ்டபாடம், கட்டாயப் பாடமாகி, பின்னர் போதனா மொழியாக மாறிவிடும். இதனைத் திட்டப்படி படிப்படியாக நிறைவேற்ற முயற்சி செய்வார்கள்.

அதனால் அடுத்த சந்ததியினர் சிங்களம் கற்று, சிங்களக் கலாசாரத்தை ஏற்று, சிங்களப் பண்புகளைத் தழுவி, நாளடைவில் சிங்களவர்களாகவே மாறி விடுவர் என்பது ஆட்சியாளரின் திட்டம்.

தற்போதைய சந்ததியினரைச் சிங்களவராக மாற்றுவது எளிதன்று. தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் விடாப்பிடியான எதிர்ப்பு, இவற்றினூடே சிங்களத் திணிப்பு வெற்றி பெறுவது குதிரைக் கொம்புதான். தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் பேராதரவைப் பெற்றிருப்பதால், தங்களெண்ணம் என்றுமே நிறைவேருது என்பது ஆட்சியாளருக்குத் தெரியும்.

எனவே இன்றிலிருந்தே பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைப் பாய்ச்சிவிட்டால், அடுத்த சந்ததியாவது அடிமையாகிவிடும். தமிழ் மொழி, தமிழ்ப் பண்பு, தமிழ்க் கலாசாரம்—எல்லாம் படிப்படியாகத் தேய்ந்து அழிந்துவிடும். அதன் விளைவாக பெரும்பான்மை இனத்துடன் இரண்டறக் கலந்து இறுதியில் தமிழ் பேசும் இனமே மறைந்து போகும். இந்த இனக் கொலையை அடுத்த சந்ததியில் பூர்த்தி செய்துவிடலாம் என்பதே சிங்கள வெறியர்களின் திடமான கருத்து.

நீர்கொழும்பு தொடக்கம் புத்தளம் வரை கரையோரப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் எவ்வாறு சிங்களவர்களாக மாறி வருகிறார்களென்பதை ஆராய்ந்தால், இனம் அழிந்து வருவதைக் கண்கூடாகக் காணலாம். பல்லாயிரக்கணக்கான இத் தமிழ் மக்களின் நடையுடை பாவனை, கலாச்சாரம், பண்பு, நாகரிகம் அத்தனையும் ஏற்கனவே சிங்கள மயமாக மாறி விட்டன. அவர்களிற் பெரும்பாலோரின் வீடுகளில் பேசும் மொழியும் சிங்களமே. அநேகரின் பெயர்களும் சிங்களப் பெயர்களாக மாறி விட்டன. அவர்கள் இன்று 90 சதவிகிதம் சிங்களவர்கள் என்று கூசாமல் கூறலாம். இன்னும் சில ஆண்டுகளில் முழுச் சிங்களவர்களாக மாறி விடுவர் என்பதில் ஐயம் வேண்டாம்.

பள்ளிக்கூடம் வாயிலாக நடத்தவிருக்கும் சிங்களத் திணிப்பை எதிர்த்து முறியடிக்காவிட்டால், நீர்கொழும்பு—சிலாபம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட கதிதான் இதர பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஏற்படும்.

இத் திட்டத்தை நிறைவேற்றும் கருவிகள்தான் பாடசாலைகள். இன்று பாடசாலைகள் அனைத்தும் ஆட்சியாளர் கையில் சிக்கிவிட்டன. எனவே இளஞ்சிறார்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பது மிக எளிது—அவர்களின் உள்ளங்களைச் சிங்களக் கலாச்சாரத்துக்குச் சாதகமாகத் திருப்பி விடுவதும் சுலபம். அத்தகைய படுபாதக இனக் கொலைக்கு இடமளிப்பதா?

இனத்தை அழிக்கப் பாடசாலைகளைப் பயன்படுத்துவார்கள் என்பதைத் தமிழரசுத் தலைவர்கள் அன்றே அறிந்திருந்தனர். பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டதை அவர்கள் அன்று எதிர்த்ததற்கு இதுதான் காரணம். தலைவர்களின் இந்தத் தீர்க்கதரிசனத்தை இன்றுதான் மக்கள் உணர்கின்றனர்.

பாடசாலைகள் தம் கையிலிருப்பதால் பிள்ளைகளைச் சிங்களவர்களாக்கிவிடலாம் என்ற ஆட்சியாளரின் திட்டத்தை எதிர்த்துப் முறியடித்து விடவேண்டும். இப்பொறுப்பு பெரும்பாலும் பெற்றோர்களின் கையிலே தங்கியுள்ளது.

என்னதான் நேரிடினும், 'தங்களின் பிள்ளைகளைச் சிங்களம் படிக்க அனுமதிப்பதில்லை—அவர்களை அடிமைகளாக்க இடமளிப்பதில்லை' என்று பெற்றோர்கள் இன்றே திடசங்கற்பம் கொள்ளவேண்டும். சிங்களம் படித்தால் உத்தியோகம் கிடைக்கும் என்ற பொய்ப்பிரசாரத்தில் அவர்கள் மயங்கிவிடக்கூடாது. சிங்களம் படித்த அளவில் உத்தியோகம் கிடைத்துவிடாது. சிங்களப் பண்பு, கலாசாரத்தை ஏற்று, சிங்களப் பெயர் பூண்டு, சிங்களவராக மாறி, பௌத்த சமயத்தையும் தழுவினால், வேலையின்றித் தவிக்கும் இலட்சக்கணக்கான சிங்கள பௌத்தர்களுடன் உத்தியோகத்துக்காகப் போட்டியிட ஒருவேளை உரிமை கிடைக்கலாம். அப்பொழுதும் பரம்பரைச் சிங்களவருக்கே முதற் சலுகை வழங்கப்படும் என்பது திண்ணம்.

ஆகவே தங்கள் பிள்ளைகள் சிங்களம் படித்துவிட்டால் உத்தியோகம் கிடைத்துவிடும் என்ற தவருன எண்ணத்தைப் பெற்றோர்கள் அடியோடு மறந்துவிட வேண்டும். அது வெறும் பகற்கனவு.

சிங்கள வகுப்புகளையும், சிங்கள ஆசிரியர்களையும் தமிழ் பேசும் மாணவர்கள் புறக்கணிக்க வேண்டும். முன்பும் இது நடைபெற்றது. பிள்ளைகள் சிங்களம் படிக்க மறுத்ததால் சில பாடசாலைகளில் சிங்கள வகுப்புகள் மூடப்பட்டன. சிங்கள ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். மீண்டும் சிங்கள வகுப்புகளைத் தொடங்க அரசாங்கம் விரிவான முறையில் ஏற்பாடு செய்கிறது.

பெற்றோர் சங்கங்கள் ஆட்சியாளர்களைக் கடுமையாக எச்சரிக்க வேண்டும். தமிழ்ப் பகுதி பாடசாலைகளிலும் தமிழ் பாடசாலைகளிலும் சிங்களம் போதிப்பதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட வேண்டும். அந்த எச்சரிக்கையையும் மீறி அரசாங்கம் சிங்கள வகுப்புகளைத் தொடங்கினுல், தமிழ் பேசும் பிள்ளைகள் சிங்கள வகுப்புகளை முற்ருகப் பகிஷ்கரித்துவிட வேண்டும்.

இதில் ஆசிரியர் சங்கங்களுக்கும் பெரும் பொறுப்பு உண்டு. பெற்றோர்களின் எதிர்ப்பினூடே சிங்கள வகுப்புகள் தொடங்குவதை ஆசிரியர் சங்கங்கள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். பிள்ளைகளின் விருப்பத்துக்கு மாருக சிங்களம் கற்பித்தல் கல்வி முறைக்கு மாருன பாசிஸச் செயல் என்பதை ஆட்சியாளருக்கு இடித்துக் கூறவேண்டும்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்று [illegible] பாடசாலைகளுக்குள் [illegible] நிர்ணயம் தடுத்து நிறுத்திவிட முடியும். இதுவும் தமிழ் பேசும் சமுதாயம் நடத்தும் உரிமைப் போராட்டத்தின் ஒருபகுதியே.

# பாத யாத்திரைக்கு முழு வெற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உரை நிகழ்த்துகையில்:

பாத யாத்திரைக்கு கிராமந்தோறும் மக்கள் காட்டும் உற்சாகத்தைக் காணும் போது நமது உரிமைகள் யாவும் கிடைக்கும் காலம் அண்மித்துவிட்டது' என்று கூறினர். திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், க. துரைரத்தினம், வி. தர்மலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். கூட்ட முடிவில் தொண்டர்களுக்குத் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

புன்னாலைக் கட்டுவன் வடக்கிலிருந்து சாதிக் கலவரத்தால் துரத்தியடிக்கப்பட்டு குடிபெயர்ந்து இருக்கும் சிறுபான்மைத் தமிழர்கள் எல்லோரும் பாத யாத்திரைக் குழுவினருக்கு மயிலங்காடு என்னுமிடத்தில தேனீர் விருந்தளித்து உபசரித்தனர். அங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உரை நிகழ்த்துகையில்:

'இப்பகுதி மக்கள் அனைவரும் உரிமைப் போராட்டத்தில் தீவிரமாகக் கலந்து கொள்ளவேண்டும், குறிப்பாகப் பெண்கள் தமது பங்கை உரிமைப் போராட்டத்தின்போது சரிவர நிறைவேற்ற வேண்டுமென்று' கூறினர்.

## சால்வை நூறு ரூபா

பாத யாத்திரைக் குழுவினர் அன்றைய இரவை இணுவிலில் கழித்தனர். இணுவில் சந்தையில் அன்றிரவு மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில், வரவேற்புகளின்போது அணிவிக்கப்பட்ட சால்வைகள் ஏலம் விடப்பட்டன. ஆறு சால்வைகளை மக்கள் போட்டிபோட்டு நூறு ரூபாவுக்கு வாங்கினர்.

ஞாயிற்றுக் கிழமை காலை இணுவிலிருந்துபுறப்பட்ட யாத்திரைக் குழுவினர் கோண்டாவிலை அடைந்ததும் காலை உணவு வழங்கப்பட்டது. கோண்டாவில் குமாரகோட்டம் சனசமூக நிலையத்தில் மதிய போசனம் வழங்கப்பட்டது.

கோண்டாவில் மேற்கு காளி கோவிலை பாத யாத்திரைக் குழுவினர் வந்தடைந்ததும் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. மு. செல்லையா தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் உரை நிகழ்த்துகையில் 'சமஷ்டி கிடைக்கும் வரை தமிழ் பேசும் மக்களின் போராட்டம் ஓயாது ஒழியாது என்றும் எக்காரணத்தைக் கொண்டும் அரைகுறைச் சலுகைகளை ஏற்க மாட்டோம்' என்றும் கூறினர். இக்கூட்டத்தில் பண முடிப்புக்களும் வழங்கப்பட்டது.

## நாடு பிளவுபடும்


அன்றைய இரவைத் தொண்டர்கள் காளி கோவிலில் கழித்தனர்.

திங்கட்கிழமை காலை கோண்டாவிலில் இருந்து புறப்பட்ட தொண்டர்கள் காலை உணவைக் கொக்குவில் தபாற் கந்தோருக்கு அண்மையில் ஏற்றனர். சிறுபான்மைத் தமிழ் மக்கள் காலை உணவை அன்புடன் வழங்கினர். மதிய உணவைக் குளப்பிட்டியில் முடித்துக் கொண்டு, அவ்விடத்திலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினர் ஆனைக்கோட்டை வீதி வழியாகச் சென்று கொக்குவில் மேற்கு பிடாரிக் கோவிலடியை அடைந்தனர்.

இவ்விடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. ஏ. சிவசுந்தரம் உரை நிகழ்த்துகையில்: 'காந்தி வழியில் நாம் போராடுகிறோம். இது வெற்றி பெறாவிட்டால், அடுத்த சந்ததியினர் பலாத்கார வழியில் போராடி நாட்டை துண்டு போடுவதுதான் ஒரே வழியாகும் என்று குறிப்பிட்டார்.

கொக்குவில் பிடாரி கோயிலிலிருந்து அதிகாலை புறப்பட்டு, தாவடி தெற்கு பத்திரகாளி கோயிலில் காலை எட்டு மணிக்கு உணவு உண்ட பின்னர், அங்கிருந்து புறப்பட்டு தாவடியை அடைந்தனர். அங்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தாவடியில் இருந்து புறப்பட்டுக் கொல்லாவில் சந்தியை அடைந்து, 'கொல்லாவில் ஒழுங்கை வழியாக உடுவில் கிழக்கு பாலாவோடையை அடைந்தனர். மதிய உணவை உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் வழங்கினர். இங்கிருந்து உடுவில் டச் வீதி வழியாகச் சென்று சங்குவேலிப் பிள்ளையார் கோவிலை அடைந்தனர். இங்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.



பாத யாத்திரையின்போது கிடைக்கும் ஆறுதல் நேரத்தில் திட்டங்களை வகுப்பதில் செலவிடுகிருர் தமிழரசுத் தந்தை. கிராம மக்களை அணுகி அவர்களுடன் கலந்து அறப்போர் ஆட்டத்தங்களைச் செய்வதற்கு நல்ல வாய்ப்பை பாத யாத்திரை நல்குகிறது.

உடுவில் பிரதிநிதி திரு வி. தர்மலிங்கம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

மந்திரி சபை முடிவின்படி அடுத்த வருடம் முதல் நாடு முழுவதும் சிங்களம் போதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இதை நாம் எதிர்த்தாக வேண்டும். அப்படி எதிர்க்காவிடில் சில வருடங்களில் நாடு பூராவும் சிங்களம் போதனு மொழியாகிவிடும். இந்நிலையில் தமிழ் கற்க இடமிருக்காது' என்ருர்.

சங்குவேலி பிள்ளையார் கோவிலிலிருந்து புறப்பட்டு கந்தரோடைப் புது வழியாகச் சென்று கந்தரோடையை அடைந்தனர். இங்கு மதிய போசனத்தை முடித்துக்கொண்டு மாசியப்பிட்டி வழியாகச் சென்று அளவெட்டியை அடைந்தனர்.

## முற்போக்கு வாலிபர் சங்க வரவேற்பு

அளவெட்டி தெற்கில் மனைாக்கு பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கொ. கந்தையாவால் நிறுவப்பட்ட முற்போக்கு வாலிபர் சங்க சனசமூக வாசிகசாலையில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு. அ. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்தினர். முற்போக்கு

(-9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர சபையில் தமிழ் நிர்வாகம்



ஊர்வலம் புறப்பட்டுவிட்டது. வானதிர கோஷங் களை எழுப்பிக் கொண்டு விறு நடை போடுகின்றனர் தொண்டர்கள்

## முற்போக்குகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் பொது மக்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து கூடுகிறார்கள். பகிஷ்கரிப்பு இயக்கம் மிகவும் அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இதே ரீதியில் அமைதியாகவும் சாத்வீகமான முறையிலும் இயக்கம் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற மக்கள் ஆதரவு உண்டு.

சாத்வீக முறையில் நடைபெறும் போராட்டம் ஒன்றின் மூலமே தமிழ் பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளைப் பெறலாம் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்களாக உளர் என்பதைப் பாத யாத்திரையின் போது தெரிந்து கொள்ள முடிந்தது.'

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் நமது கொழும்பு நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

# சுதந்திரன் செய்தி கைமேற் பலன்

கடந்த வாரம் சுதந்திரனில் பிரசுரமான செய்தியைத் தொடர்ந்து யாழ். மாநகரசபைத் தலைவர் தலைவர் திரு. தா. துரைராசா பகுதித் தலைவர்களனைவரையும் கொண்ட மாநாடு ஒன்றைக் கூட்டி மாநகரசபை அலுவல்கள் யாவற்றையும் தமிழில் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரியவருகிறது. ஊழியர்கள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் தமிழில் கடமையாற்றுவதாக அறிகிறோம். காசோலைகளும் தமிழிலேயே எழுதப்படுகின்றன.

மாநகரசபைக் கமிஷனர் சிங்களத்தில் வரும் கடிதங்களைச் சில ஊழியர்களைக் கொண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கடமை பார்க்க முனைவதாகவும், இது விடயம் மாநகர சபையின் கவனத்துக்கு விரைவில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

### கிராம சபைத் தலைவர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாண மாவட்ட கிராம சபைத் தலைவர்கள் செயற்குழு கடந்த 5-10-63ல் கூடிய பொழுது பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது:-

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கிராம சபைகளுக்கு தமிழிலேயே அரசாங்கம் சகல கடிதங்களையும் அனுப்ப வேண்டியது கடமை. அதிலிருந்து தவறினால் கிராம சபை நிர்வாகம் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சகல கிராம சபைகளுக்கும் தமிழிலேயே சகல கடிதங்களையும் அனுப்பிவைக்க வேண்டுமென்று பிரதமரையும், உள்ளூராட்சி அமைச்சரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொள்ளுகிறது.

## சுதந்திரன் பேச்சுப் போட்டி

அட்டன், மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இடைவிறுதிப் போட்டி இவ்வாரம் நடைபெறுகிறது. திருக்கோணமலை, பதுளை மாவட்டத்திற்கான இடைவிறுதிப் போட்டிகள் 19—10—63ம் திகதி நடைபெறும்.

பதுளை மாவட்டத்திற்கான இடைவிறுதிப்போட்டி 19—10—63ம் திகதி காலை 10 மணிக்கு பதுளை தேவாலய வீதியிலுள்ள சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராக திரு. தமிழோவியன் கடமையாற்றுவார்.

திருக்கோணமலை மாவட்டத்திற்கான இடைவிறுதிப் போட்டி 19—10—63ம் திகதி காலை 9 மணிக்கு பெருந் தெரு மி. மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராக திரு. க. சிவகுரு கடமையாற்றுவார். அவரின் முகவரி: 144, பெருந் தெரு, திருக்கோணமலை.

வவுனியா, மன்னார் மாவட்டத்திற்கான விபரம் அடுத்த இதழில் வெளியாகும்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்.

## பாத யாத்திரை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
வாலிபர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. ஏ. நல்லையா நன்றி தெரிவித்துப் பேசுகையில், 'வாயப் பேச்சுடன் மட்டுமல்லாது செயலை விரும் தீண்டாமையை அகற்ற தமிழரசுக்கட்சி நின்று நடவடிக்கை எடுத்து வருவதைக் கண்டு நாங்கள் பெரு மகிழ்வு அடைகிறோம். தமிழரசுக்கட்சி போல தமிழர்களுடன் தோளோடு தோள் நின்று போராட இனத் தடையேதும் கிடையாது' எனவும் பலத்த கரகோஷத்தினிடையே குறிப்பிட்டார். தமிழரசு மூவர்ணக் கொடி வாசிகசாலை முன்றிலில் ஏற்றி வைக்கப்பட்டது.

அளவெட்டி இலந்தைகட்டி வைரவ கோவில் வீதியில் திரு. ஐ. தம்பிராசா தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அன்று இரவை அவ்விடத்தில் தொண்டர்கள் கழித்தனர்.

வியாழன் காலை அங்கிருந்து புறப்பட்டு அளவெட்டி தெற்கு— வினாயகர் சந்நிதியூடாக இளவாலைச் சந்தியடியில் காலைச் சாப்பாடு உண்டனர். இளவாலை சனசமூக நிலையத்தில் மதிய உணவை முடித்துக்கொண்டு புறப்பட்ட தொண்டர்கள் மாதகலை அடைந்தனர். மாதகலில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இரவை மாதகலில் செலவிட்ட தொண்டர்கள், வெள்ளிக்கிழமை காலை வட்டுக்கோட்டைத் தொகுதியை நோக்கிப் பயணமானார்கள்.

### காண்டீபன்!

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தம்பதிகளுடன் அவர்கள் மைந்தன் 8 வயது நிரம்பாத செல்வன் காண்டீபன் பாத யாத்திரையில் தொடர்ந்து பங்கு கொள்கிறான், மூவர்ணக் கொடியுடன் செல்லும் பர்மினம் பாலகனுள காண்டீபனின் துணிவைப் பாராட்டி மக்கள் பரவசமடைகின்றனர்.

## ஐ. நா. சபையில் அம்பலாங்கொடை எம்.பி.யின் பேச்சு

## தமிழரசுத் தந்தை தந்தி மூலம் மறுப்பு

இலங்கையில் இன, மத, வகுப்பு அடிப்படையில் துவேஷங்கள் காட்ட அங்குள்ள சட்டங்கள் இடமளிக்கவில்லையென்றும், அங்கு எவ்வித பாரபட்சமும் இடையாதெனவும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டமொன்றில், அம்பலாங்கொடை எம். பி. திரு. பீ. டி. எஸ். குலரத்தின தெரிவித்த கருத்தை 'சுத்தப் பொய்' என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மறுத்துள்ளார். அவர் தமது மறுப்பைத் தந்தி மூலம் ஐ. நா. பொதுச் சபைக்கு அனுப்பியும் வைத்துள்ளார். அத் தந்தியின் விவரம் பின் வருமாறு:

"இலங்கையிலுள்ள தமிழர்கள் சட்டத்திலும், நிர்வாக நடவடிக்கைகளிலும் அவஸ்தைப்படுகிறார்கள். இதற்கு உதாரணமாக, 10 லட்சம் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் குடியுரிமை மசோதாவையும், நாட்டின் சனத்தொகையில் 30 சத வீதமான மக்களின் மொழியாகிய தமிழுக்கு உத்தியோக அந்தஸ்தை மறுத்து, சிங்களத்தை மாத்திரம் உத்தியோக மொழியாக்கும் உத்தியோக மொழி மசோதாவையும் குறிப்பிட விரும்புகிறோம். இன்று, மோசமான மொழிப் பிரச்சினை ஒன்றில் இலங்கை அகப்பட்டுள்ளது. பாரபட்சத்தை இலங்கைச் சட்டங்கள் அனுமதிக்கவில்லை என்று கூறுவது முற்றிலும் பொய்யாகும்."

# யாழ். கச்சேரியில் தமிழ் ஊழியர்கள் அவதி

## இடமாற்றம் செய்ய முயற்சி

யாழ்ப்பாணக் கச்சேரியில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் தென்னிலங்கைக்கு மாற்றப்படலாமென்றும், அவர்களுக்குப் பதிலாகச் சிங்கள ஊழியர்கள் அங்கு அனுப்பப்படலாமென்றும் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக இரு தினங்களுக்கு முன்பு உள்நாட்டு விவகார அமைச்சில் ஒரு மாநாடு நடைபெற்றதாகவும், அதில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவும் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது.

யாழ். கச்சேரியில் கடமையாற்றும் சுமார் 70 தமிழ் ஊழியர்களை வேறு இடங்களுக்கு மாற்றிவிட்டு, அவர்களின் ஸ்தானங்களுக்குச் சிங்கள ஊழியர்களை நியமித்தாலே வட பகுதியில் சிங்களத்தை அமுல் நடத்த முடியுமென்று திரு. ஜயவீர மாநாட்டில் வற்புறுத்தினார் என்று கூறப்படுகிறது.

தமிழ் ஊழியர்களை அங்கிருந்து இடமாற்றம் செய்ய முடியவில்லையேல் தன்னையே இடமாற்றம் செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.

இம்மாதச் சம்பளம் பட்டியலை சிங்களத்தில் தயாரித்திருந்தும், கச்சேரியில் தமிழ் ஊழியர்கள் கடமையாற்றுவதால் அதன் அங் [illegible] பந்தம் ஏற்பட்டதாம். இதனுல் சிங்கள அமுல் தடைப்பட்டுவிட்டதாம். அத்தோடு தமிழ் ஊழியர்கள் படித்துள்ள சிங்களம், சிங்களத்தில் கடமையாற்றுமளவுக்கு போதியதாக இல்லையென்றும் அரசாங்க அதிபர் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

## திருமலையில் மாபெரும் கூட்டம்

திருமலைத் தீரர் இராசவரோதயம் மறைவினால் காலியாகிய திருகோணமலைத் தொகுதி இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் தினமாகிய 16ம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்களை ஆதரித்து ஓர் மாபெரும் கூட்டம் திருமலை முற்ற வெளி மைதானத்தில் நடைபெறும்.

கூட்டத்திற்கு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமை வகிப்பார். திருமிகு எஸ். எம். இராசமாணிக்கம், வைத்திய கலாநிதி இ. மு. வி. நாகநாதன், ஜனாப் முகம்மது அலி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.


## தேவை

விஜயா ஸ்டுடியோவில் தயாரிக்க இருக்கும் மலை வாசல் தமிழ்ப் படத்திற்கு திறமைமிக்க நடிக, நடிகையர், பாடகர்கள் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி
ஆர். எஸ். பிக்சர்ஸ்,
2, 1/1 லூக்கஸ் வீதி,
கொழும்பு-14.

## ப்ரம்மீ கேசரத்ன தைலம்



A 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

B 6 அவுன்ஸ் போ: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்.

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர் ஒன்பது நினைவில் சமாதி

உச்சி வெயில் சற்றுச் சாய்ந்து நீளத் தொடங்கும் மத்தியான வேளை. வெயிலின் அனலின் வெம்மை சற்றும் குறைந்த பாடில்லை. அனற் புழுதிகளை கிண்டியிறைக்கும் கோடைக் காற்று.

கிணற்றடியைச் சூழ்ந்து தென்னை, கமுகு, வாழை, நிழலை இறைக்கின்றன. வாழை இலைகள் வெயிலில் தன்மை குன்றி, வாடித் தொய்ந்து, கிழிந்த துணியாகத் தொங்குகின்றன.

கிணற்றுக் கட்டில் அமர்ந்து கிணற்றையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறாள் புவனம். கிணற்றின் உட் சுவர்களில் நீரின் நிழல் ஒளியாட்டம் காட்டுகின்றது. நீருக்கும் நிழல்! மனிதனின் கடந்த கால நிகழ்ச்சிகளும் நிழல்கள் தாமே!

புவனம் நீரையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறாள். நீர்ப் பூச்சிகள் நீரிலே சித்திரம் தீட்டிக் கொண்டிருக்கின்றன.

நானும் நீரின் மேல் நினைவுச் சித்திரம் தீட்டுகிறேனா? என் நினைவுகள்—ஆசைக் கனவுகள்—எல்லாமே நீரின் எழுத்தாமோ?

ராஜ்!...உங்களைப் பற்றிய நினைவுகள் இனி என்னைப் பொறுத்த வரை நிழல்களாகிவிடும்...அப்புறம்...... உருவம் எனப்து...

ராஜ்!... நான் செய்வது சரியோ, தவறோ?...உங்களைப் பற்றிய நினைவுகளை கடைசி முறையாக மனதிலிருத்தி, ஆறுதல் தேடிவிட்டு, அவற்றிற்கு சமாதி கட்டப் போகிறேன...பின்பு அது காலா காலத்திற்கும் திறக்கப்பட மாட்டாது...மண்மூடிப், புல் முளைத்துப் போகட்டும்!...

ராஜ்!... என்னை மன்னிப்பீர்களா?...

'புவனம்!...அடி புவனம்!... கிணத்தடியில என்ன செய்யிறாய்?...அவங்க வந்தாப் போலயா நீ ஆயத்தமாகப் போறாய்!'—அம்மா அழைக்கிறாள். நான் போக வேண்டும். அதற்கிடையில்—

'ராஜ்!...உங்களை எப்படி மறப்பேன்!...உங்களை மறந்தாலும் உங்கள் கண்களை!... அபூர்வ ஒளிவிடும் விழிகளை எப்படி மறப்பேன். என்னைப் பைத்தியமாக்கியது உங்கள் கண்கள் தானே!...

ராஜ் அந்த நிகழ்ச்சி உங்களுக்கு நினைவிருக்கிறதா?...

'ராஜ் நீங்கள் பிற பெண்களைப் பார்ப்பீர்களா?' என்கிறேன் நான்.

'இதென்ன கேள்வி புவனம்?...'—முகஞ் சுளிக்கிறீர்கள் நீங்கள்.

'இல்லை ராஜ்!......உங்கள் கண்கள் ...மோகனமானவை ...பார்வையின் வீச்சிலேயே நான் உலகின் இன்பங்களை உணருகிறேன்...அந்த மயக்கத்தில்தான் நான் மயங்கிக் கிடக்கிறேன்......'—என்று சொல்லியவாறு உங்களை நோக்குகிறேன். நீங்கள் என்னை வேடிக்கை பார்க்கிறீர்கள்.

நான் திணறிவிடுகிறேன்.

அந்தப் பார்வை!...

'புவனம்!...அடி புவனம்!... உனக்கென்ன நேர்ந்து விட்டது?...ஏன் உன் மார்பகங்கள் அடித்துக் கொள்கின்றன?' — என் இதயத்திலிருந்து என்னை ஆதுரத்துடன் வினவுபவர்கள் யார்?...

'ராஜ்!...ராஜ்!...அப்படிப் பார்க்காதீர்கள்!...நான் வலுவிழுந்து விடுவேன்!.....கண்களை மூடிக்கொள்ளுங்கள்'... என்று துடிக்கிறேன். என் நிலை கண்டு வாய்விட்டுச் சிரிக்கிறீர்கள்.

'சொல்லுங்கள் ராஜ்!... உங்கள் கண்களால் வேற யாராவது பெண்களைப் பார்ப்பீர்களா?...சொல்லுங்கள் பார்ப்பீர்களா?...அந்தக் கண்களின் கவர்ச்சியிலேயே ...உங்களை...உங்களை....நான் என்னை...எனக்கு...'

'பைத்தியக்காரி!......உனக்குத் துரோகம் செய்வேனா? உயிரின் ஒரு பகுதிக்குத் துரோகமா?...'

'இல்லை ராஜ்! எனக்குத் தெரியும் நீங்கள் நல்லவரென்று!...ஆனால் உங்கள் கண்கள் ...அதற்கு மயங்காமல்...உலகில் எந்தப் பெண்களுமிருக்க மாட்டார்கள்... ராஜ், எந்த ஒரு பெண்ணும் உங்களை நேருக்குநேர் பார்க்கக் கூடாது. பார்த்து விட்டால்...உங்களை என்னிடமிருந்து பிரித்து விட்டால்... நான்...எனக்கு...'

—ராஜ் அன்று அப்படி விம்மிய நான் இன்று உங்களை...உங்கள் மோகன ரூபத்தை...உங்களின் காவியக் கண்களை முற்றாக மறக்கப் போகிறேன்...நீங்கள் சொல்வது போல் நான் பைத்தியக்காரி தானே?...

நேற்றைய நிகழ்ச்சி மனதில் நிழலாடுகின்றது.

'என்னடி புவனம்!...அப்படிப் பாக்கிறாய்?...அவளின் விதவைக் கோலம் அப்படி உன்னைக் கவருகிறதா?...அல்லது பரிதாபப் படுகிறாயா?..' —என்று அவளின் சிநேகிதி-பக்கத்து வீட்டுப் புதிய சிநேகிதி—உலுப்புகிறாள்.

பரிமளத்தின் கழுத்து, நெற்றி, கோடைகால வானமாக வெறித்துக்கிடக்கிறது.

புவனத்தின் கைகள் மெல்லத் தனது கழுத்தைத் தடவுகின்றன. அங்கே—

செம்பியன்செல்வன்

வெறுமை!

'ராஜ்! நீங்கள் என் கழுத்திலே இட்டீர்களே சங்கிலி அதனைக் கழற்றி வைத்து விட்டேன்! இனி அந்த அன்புச் சுமையைத் தாங்க எனக்குச் சக்தியில்லை. என்னை மன்னித்து விடுங்கள்!...

'பாத்தியாடி பரிமளத்தை! பாவம் அவள் இவ்வளவு விரைவில் குங்குமத்தை இழந்திருக்கக் கூடாது. எங்களோடு படித்தவள். நாங்களோ இன்னும் வாழ்வின் முதல் படியிலேயே கால் வைக்கவில்லை ...... அவளோ வாழ்பவள்... கடைசிப் படியில்...ஏறவும் முடியாது இறங்கவும் முடியாது... பாவம் திரிசங்கு நிலையில்...'

—சிநேகிதி என்னமோ சொல்லிக் கொண்டு போகிறாள். 'என்னைப் போல அவளும் தனது குங்குமத்தை அழித்துக் கொண்டாள்'— புவனம் முணு முணுக்கிறாள். அப்போதுதான் தோழி அவள் நெற்றியைப் பார்க்கிறாள். அங்கு—

பொட்டில்லை!

'என்ன ரசனையடி உனக்கு! பொட்டை விரும்பாத பெண்ணா நீ?... பூவை விரும்பாத பூவையா நீ?...என்ன பிறவியடி நீ?...'

புவனத்துக்கு வெறி பிடித்துவிட்டதா?...

'எனக்கா பூவில் பொட்டில் ஆசையில்லை?...எல்லாவற்றிலும் உன்னைவிட... ஆசைப்பட்டேன் ... ஆனா... ஆனா...'—புவனத்தால் பேச முடியவில்லை. தோ என்று தோழியின் மடியில் முகம் புதைத்து விம்முகிறாள்.

'ஆனால்...என்னடி?'

'எல்லாவற்றையும்இழந்து விட்டேனடி!!'

'சாய்.........பேச்சைப்பார் பேச்சை!...'

'இல்லையடி சந்திரா! அவள் உலகத்தின் முன்னால் கணவனை இழந்தவள்...நான் ... ......... ...... ...லனை இழந்தவள். இரண்டிற்கும் வேறுபாடுண்டாடி!'

சந்திரா விரல் நுனியால் விழி நீரைச் சுண்டி எறிகிறாள்.

'புவனம்!...எடி புவனம்!... இங்க வரப் போறியா இல்லையா!...'—இதோ அம்மாவின் மறு அழைப்பும் வந்து விட்டது.

நான் போகிறேன். இன்று என்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்!...,விதவைக்கு மணம் பேச வருகிறார்கள்!...

'ராஜ்!...நான் விதி வழியே நடக்கின்றேன். இனித் தெரிந்தோ தெரியாமலோ, என் விதி வழியின் எதிரே வராதீர்கள். வரட்டுமா, ராஜ்!...ராஜ்!...ராஜ்!...'

* *

'புவனம்!...புவனம்!...' — கந்தையர் அழைக்கிறார்.

'என்னப்பா!......' —என்றவாறு உள்ளிருந்து வருகிறாள் புவனம்.

அவளை ஒரு விநாடி உற்றுப் பார்க்கிறார்.

'போய் அம்மாளை நான் கூப்பிட்டன் எண்டு வரச் சொல்!...'

'என்னத்துக்குக் கூப்பிட்டீங்க!...அடுப்பிலை எல்லாம் அரைக் கொதி, கால் கொதியாக் கிடக்கு!...எணை பிள்ளை நீ போய் அடுப்பைக் கவனி!'

—வெற்றிலைத் தட்டத்தை அவர் அருகே இழுத்து வைக்கிறாள்.

'வெத்திலை வேணும்!... சுருட்டிலை ஒண்டு கொண்டு வா!...பறையிலை இருக்கும் பிள்ளை பார்!...'

—கொடுத்த சுருட்டைப் பற்றவைத்தவாறு, 'இஞ்சரும். நீர் இந்தக்கந்தையனைப் பற்றி என்னவெண்டு நினைச்சீர்...இவள் புவனத்துக்குஒரு சோக்கான மாப்பிள்ளை ஒண்டு பாத்துக் கொண்டு வந்தனான் நீர் என்னண்டாலும் சொல்லும், இதைப் போல ஒரு மாப்பிள்ளை என்ர இருவது வருஷ சர்விசில பாத்தது கிடையாது...பொடியன் கிளாஸ் ஒனில பாஸ் பண்ணியிருக்கிறான்...போகப் போக இன்னும மேல உயருவான்... முயற்சியுள்ள பொடியன்!... நீர் என்ன சொல்லுறீர்!...'

'நான் என்னத்தைச் சொல்லக் கிடக்குது...... எனக்கு எதெண்டாலும் சரிதான்!...பிள்ளையல் வேஒமெண்ணேனும்!

'இஞ்சாரும் உந்தக் கதையை விடும்!...இன்னும் உவள் அந்த...அந்த...எனக்கு என்னத்துக்கு வாயில வருது...... அவனைத் தான் இன்னமும் தாயும் மகளும் நினைச்சுக் கொண்டிருக்கிறியள் போல கிடக்கு...அது நடக்காது!... இந்தக் கந்தையர் உயிரோட இருக்கும் வரை உந்த எண்ணம் நடக்காது...உப்பிடி ஏதாவது எண்ணமிருந்தா இப்பவே தாயும் மகளும் வீட்டை விட்டு போயிடலும்!...ஓ!...நான் சொன்னாச் சொன்னது தான்!......'—கந்தையரைப் பார்க்க அவளுக்கு நடுக்கமாகக் கிடக்கிறது.

'அதுசரி... வரனைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தியள், பேந்து விட்டிட்டியளே!......அதைப் பற்றிச் சொல்லுங்களன்!...அதை விட்டிட்டு ஏதேதோ பேசிறியளே!...'

'அதுதானே கேட்டனான்!... பிள்ளை வீட்டுக்காரர் பரம்பரைப் பணக்காரர். நீர் வேலியில பெரிய உடமைக்காரர். ஒரு பொடிச்சியும், இந்த மாப்பிள்ளையும்தான். பொட்டை கொழும்பில முடிச்சுக் கொண்டிருக்கிறாள்...கரைச்சலில்லாத சம்பந்தம்...அவையள் சீதனத்தைப் பற்றி பேசேல்ல... 'நீங்களே பாத்துச் செய்தா, சரிதான்!'... என்டினம்!... பின்ன என்ன நாளைக்குப் பின்னேரம் பெண் பார்க்க வரப் போயினம்!...நீதான் எல்லாத்துக்கும் பொறுப்பாகக் கவனிக்க வேணும்...'

'எதுக்கும் ஒருவாய் பெட்டையைக் கேட்டிட்டா!...'

'அவளை என்ன கேக்கிறது! மணவறையில போய்க் குந்தெண்டா, குந்த வேண்டியவள்தானே!...'

'அது உங்கட காலத்தில சரியா, இருக்கும். இந்தக் காலத்தில்...'

'என்ன, என்ன நீ சொல்லுறதைப் பாத்தா நீயே அவளுக்கு சொல்லிக்கொடுப்பாய் போல கிடக்குது...அது கிடக்கட்டும்!... இன்னொரு சங்கதி கேட்டியே!...'

'என்ன அது!...'

'நான் செய்யிற எதுதான் பிழை போகுது...... இந்த இரண்டுபேரையும் பிரிச்சு வைச்சா, இரண்டும் ஒன்னையொன்று மறந்திடுமெண்டு தானே கொண்டு வந்து வச்சன் இங்க...அது இப்ப வேலை செய்யுது நல்லா!'

'என்ன சொல்லுறீங்க!...' திகிலுடன் கேட்கிறாள் அவள்.

'அதுசரி!......அதை நான் உனக்கு இன்னமும் சொல்லேல்லியே!...அதுதான் இப்படி பதறுகிறாய்!...இங்க கிட்ட வா!...பிள்ளையின்ர காதில விழப் போகுது!...... ஒரு விசயம் கேள்விப் பட்டன்...அவன் தான்......அது தான் ராசாவோ...மந்திரியோ கண்டியில யாரோ ஒரு தோட்டக்காரப் பெண்ணோட பெரிய நேசமெண்டு ஒரு பேச்சு என்ர காதில் அடிபட்டுது. உண்மையில்லாம பேச்சு வராது... எனக்குத்தான் தெரியுமே இந்தக் காலப் பொடியன்களைப் பற்றி...ஒருத்திக்கு அருகில் இருக்கு மட்டும்தான் கண்ணே ராசாத்தி எங்கிறது...அங்கால போயிட்டா அதே மாதிரி இன்னொருத்தியிடம்... இப்படிப்பட்ட படுவா..காவாலியைப்போய் இந்தப் பெட்டை நம்பிச்சே! நல்லவேளை! இதுக்குத்தான் கலியாணம் கார்த்திகை எல்லாம் பெரியவங்க கவனிச்சு செய்ய வேணும் என்கிறது...!'—கந்தையர் பேசிக் கொண்டே போகிறார்.

'இதென்ன கறி அடிப் புடுச்சு, எரிஞ்சு மணக்குதே!' என்றவாறு சமையலறைக்குள் நுழைய, 'அவர் அப்படிப்பட்டவரல்ல'— என்று தன்நிலை மறந்து முனகும் புவனத்தைக் கண்டு திகைக்கிறாள்.

* *

தொங்கும் மலர்ச் சரங்கள்!...அன்னத்தின் தூவியன்ன மலர்ப் படுக்கை!...பழங்கள்!...பால்! சாம்பிராணியின் சுகந்த மணம்!...எட்டிப் பார்க்கும் ஒளிக் கிரணங்கள்!...

புவனம் எப்படி வாழ்க்கையை அமைக்கப் போகிறாள்?

இதோ இன்னும் சில விநாடிகளில் அவளுக்கு—உடலுக்கு — உலகறிய மாலையிட்டவன் வரப்போகிறான்!

அவன் வருகையைத்தென்றலாக்குவதும், புயலாக்குவதும் அவள் கையில்!...

தென்றலா? புயலா...

'உண்மையைச் சொல்லி விட்டால்...?

(15-ம் பக்கம் பார்க்க)




கூட்டாக எழுதும் தொடர் கதை

உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் புண்புரைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சிறுமூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் ருதுக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. R. மயூரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலைதாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் உரிமை காக்க வாரீர்!

## லண்டன் கூட்டத்தில் தீர்மானம்

## ஏகமனதாக நிறைவேறியது

சென்ற மாதம் 21ம் திகதியன்று லண்டனில் தமிழர் கூட்டமொன்று நடைபெற்றது. அக் கூட்டத்தில், உலகிலுள்ள எல்லாத் தமிழர்களையும் — தனி நபர், தாபனங்கள் உட்பட — இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராட ஒத்துழைக்கும்படி கோரப்பட்டது. இக் கோரிக்கை அடங்கிய தீர்மானமொன்று, கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் முழு உருவையும் கீழே தருகிறோம்.

"கல்வி, தொழில், விவசாயம், நீதி, குடியுரிமை ஆகிய வாழ்க்கையின் பல் துறைகளிலும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களும், மற்றும் சிறுபான்மையினரும் பாரபட்சமான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, கடும் கஷ்டங்களுக்குள்ளாகியிருப்பதாலும்; தமிழ் மொழிக்குரிய இடம் மறுக்கப்பட்டுள்ளதாலும்; மத சுதந்திரத்தில் குறுக்கிடு உள்ளதாலும்; கருத்தையும், எதிர்ப்பையும் தெரிவிப்பதற்குரிய சனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டதாலும்;

நாட்டின் சனத்தொகையில் எட்டில் ஒரு பங்கினரை வாக்குரிமையற்றவர்களாக்கிய இந்திய, பாகிஸ்தானிய குடியுரிமை மசோதா (1948) வும், முப்பது லட்சம் மக்களுக்கு அநீதி விளைவிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட அரச கரும மொழி மசோதா (1956)வும் — இங்கு குறிப்பிட்ட இந்த இரண்டும் — வேறும் மிகவும் பாரபட்சமான நிர்வாக சட்டங்களும் அமுலாக்கப்படுவதாலும்;

அரசாங்க சேவையாளர் பாதிக்கப்படமாட்டாரென்று காலம் சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா உறுதிமொழிக்கெதிராக 1-1-64 தொடக்கம், சிங்களத்தில் போதிய தேர்ச்சியில்லையென்ற காரணத்துக்காக, 13,000த்திற்கும் அதிகமான அரசாங்க சேவையாளர் தமது பதவியினின்றும் விலக வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருப்பதாலும்;

ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, இலங்கைத் தோட்டங்களில் தொழிலாற்ற, தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 800,000 தமிழ் மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டு, அவர்கள் 'நாடற்றவர்கள்' என்ற நிலைக்குள்ளாக்கப்பட்டு, எதிர்காலத்திலும் குடியுரிமை கிடைக்குமோ வென்ற ஐயத்தில் வாழ வேண்டியவர்களாகியுள்ளதாலும்;

அதிக இனங்கள், மொழிவாரி குழுக்கள் வாழும் பிற நாடுகளிலுள்ள சட்ட முறைகள், அரசியல் சட்ட பாதுகாப்புகள் முதலியன சுட்டிக் காட்டப்பட்டும், விவேகத்தின் பெயரில் நீதி கோரப்பட்டும், இதுவரை இலங்கை அரசாங்கத்திலிருந்து அவை எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லையாதலாலும்:

எல்லா அமைதியான எதிர்ப்பு இயக்கங்கள், சத்தியாக்கிரகம் [illegible] அரசாங்கத்தின் ஆண்டுதலின் [illegible] இராணுவ [illegible] முறியடிக்கப்பட்டு, பங்கு பற்றியோரும் இம்சிக்கப்பட்டிருப்பதாலும்;

உலகிலுள்ள எல்லா சுதந்திர நாடுகளுக்கும் இலங்கையிலுள்ள 30 லட்சம் சிறுபான்மையினரும் படும் அவஸ்தைகளைத் தெரியப்படுத்தி, உலக அனுதாபத்தைப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்;


தமிழ் பேசும் மக்கள் எல்லோரையும் ஒன்றாகப் பிணைத்து, அவர்களுடைய சுதந்திரத்தில் இனிமேலும் கை வைக்காதிருக்கப் பாதுகாத்துக் கொள்வதுடன், இழந்த உரிமைகளையும் மீட்க வேண்டியிருப்பதாலும்;

இலங்கைக்கு வெளியிலுள்ள தமிழ் பேசும் மக்களுடைய நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் மத்திய நிலையமாகக்கூடிய வகையில், ஒரு ஒற்றுமைப்பட்ட, பொதுத்தாபனம் தேவையாகவிருப்பதாலும்;

ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் பலாத்காரமற்ற, சாத்விகப் போராட்டத்துக்கு அனைவரதும் ஆதரவும் தேவையாகுமானபடியாலும்:

1963ம் ஆண்டு 21ம் திகதி, லண்டனில் கூடும் இக்கூட்டம், எல்லாத் தமிழர்களையும் அவர்களின் அனுதாபிகளையும், தனி நபர்கள், இயக்கங்கள் இரண்டையும் கோரிக் கொள்வதாவது:

இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் கஷ்டங்களை எவ்வளவு விரிவாகத் தெரியப்படுத்த முடியுமோ அவ்வளவு விரிவாகத் தெரியப்படுத்துவதிலும், இழந்த உரிமைகளை மீட்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், எங்கள் நாட்டில் நீதியையும், அமைதியையும் மீண்டும் நிலைநாட்டச் சிங்கள மக்களிடையேயுள்ள பொறுப்புணர்ச்சியுள்ளவர்களுடன் ஒத்துழைப்பதிலும், தமிழ் நடவடிக்கைக் குழுவின் திட்டத்துக்கு, அரசியல் சார்பற்ற ரீதியில், ஆதரவு அளிக்கவேண்டுமென்று.




## தையிட்டியிலிருந்து சிங்களக் கடிதம்

தையிட்டியிலுள்ள கலாவல்லி கிராம முன்னேற்றச் சங்கத்தின் முத்திரை பொறித்த, கடிதத் தலைப்புடன் கூடிய தாளில் சிங்களத்தில் அச்சிட்டு, சிங்களத்தில் ஒப்பமிட்டு திரு. துரைராஜா என்பவரும், திரு. குமாரலிங்கம் என்பவரும் ஒரு கடிதத்தைத்தானி, மின்சார அமைச்சருக்கு விடுத்துள்ளனர். அந்தக் கடிதத்தை அப்படியே இங்கு தருகிறோம்.

'விவசாயத்துக்கு நீரிறைக்க தற்பொழுது பெட்ரோல் மோட்டோர் பூட்டிய பம்புகளையே பாவிப்பதால் ஏராளமான பொருள் விரயமாவதால், எங்கள் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டால், பொருள் செலவு மீதப்படுவதுடன் அதிகமான, பயனையும் பெற முடியும்'. என்றும் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளனர்.

நாம் பேசும் மொழியை இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்கள் குழி தோண்டிப் புதைப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்று அலசி ஆராய்ந்து, செயல்பட்டு வரும் இவ் வேளையில்—இந் நிலையினை நீக்க ஒரு சாரார் தம்மை வருத்தி அறப்போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுதில்—நம்மவர்களே, நம் மொழியை உதாசீனம் செய்து வேற்று மொழிக்கு வரவேற்புக் கொடுத்து வேதனை யூட்டுவது பெரும் துரோகமாகும். இனத்தின் மானத்தைக் காக்கத்துடிக்கும் மறத் தமிழர் கூட்டம், இம்மாதிரியான போலிகளை—காட்டிக் கொடுக்கும் கயமைச் செயலாளர்களைப் புறக்கணிக்க வேண்டியது முதற் கடமையாகிறது.

### நடிகவேள் லடீஸ் புதிய நாடகம்

ஜெயகாந்தன் எழுதிய யாருக்காக அழுதான் என்ற கதையை நாடகமாகத் தயாரிக்கப்போகிறார்கள், நடிகவேள் குழுவினர். நடிகவேள் குழுவினர்களின், முதல் சமூக நாடகம் இது என்பது குறிப்பிடத் தக்கது.

நடிகவேள் லடீஸ் வீரமணி அவர்களே இந்நாடகத்தின் வசனம்-டைரக்ஷன்-தயாரிப்பு ஆகிய பொறுப்புக்களை ஏற்றுள்ளார். இணை இயக்குனர்களாக பி. எஸ். ராஜன், எஸ். செல்வராஜ், கே. கந்தசாமி, பெனடிக் பெர்னண்டோ ஆகியோர் பொறுப்பேற்றுள்ளார்கள். முற்றிலும் புதுமையான கதை அம்சத்தைக் கொண்ட இந்நாடகத்தில் கே. வி. சாமி, லடீஸ் வீரமணி, கிறிஸ்டி ரட்டினம், எஸ். எஸ். மணி, ரி. கலைதாசன், ஏ. எஸ். ராஜா, ஒகாதாயிர், எஸ். எம். அனிபா, ஏ. ஜே. பாலு, ஈ. ஸ்டீபன், என். செபஸ்தியன், நாவரசன், புது முகங்கள் [illegible] சித்திரகலா, எம். [illegible] கலா, ஜே. ராஜீ ஏ. [illegible] ஆகியோர் நடிப்பார்கள்.

### அரசாங்கத்தின் மீது அதிருப்தி

ஸ்ரீமா அரசாங்கத்தின் ஆட்சி அலுத்துப்போய் விட்டதாகவும் எந்த நேரத்திலும் அது பொது மக்களிடமிருந்து ஓய்வெடுத்துக்கொள்ளலாமெனவும் சில அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இதற்குக் காரணம் சென்ற மாதம் பூராவும் நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்துக்கு போதியளவு சுதந்திரக் கட்சி எம். பிக்களே வந்திருக்காதது தான்.

இதை அவதானித்த யூ. என். பி. யினர் சென்ற வாரத்தில் தேர்தல் சம்பந்தமாக ஆலோசித்ததாகத் தெரிய வருகிறது.

டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, எம். டி. எச். ஜெயவர்தனா ஆகியவர்கள் எந்த நேரத்திலும் தேர்தல் வரலாமென அபிப்பிராயம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளக் கடத்தல் கும்பலுடன் புரட்சி நடிகர் புகுந்ததேன்?

## விபரம் தர தயாரிப்பாளர் மறுத்து விட்டார்

—நமது சென்னை நிருபர்—

**இலங்கையிலிருந்து கள்ளமாகக் கடல்மார்க்கமாகச் சென்ற கள்ளக் கடத்தல் பொருட்களை அப்புறப்படுத்துவதில் எம். ஆர். ராதா முயற்சி செய்தார். இவருக்குப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும் உடந்தையாக விருக்கிறார். விபரங்களை அறிய படத் தயாரிப்பாளர் பிரண்ட் ராமசாமியை நமது நிருபர் அண்டியும், எதுவித தகவலும் கொடுக்க மறுத்துவிட்டார்.**

இலங்கையிலிருந்து ஒரு வள்ளத்தில் கள்ளக் கடத்தல் பொருட்கள் தமிழகக் கரையை வந்தடைகின்றன. பொருட்களைப் பாதுகாப்புடன் அப்புறப்படுத்திப் பதுக்கி வைக்க கடத்தல் கும்பலின் தலைவன் தக்க ஆட்களை நியமிக்கப் போய் விட்டான். அவன் மகள்—



அழகின் பிறப்பிடம்—அன்ன நடை நடந்து ஆடிப்பாடி வருகிறாள். அவளைத் தொடர்ந்து ஒரு ஆடவனும் வருகிறான். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்து விடுகின்றனர். கேட்கவா வேண்டும்? காதல் சோடிகள் கரை கடந்த இன்ப வெள்ளத்தில் மிதக்கின்றனர்.

அவனுடைய உடையே அவனையும் முரடனாகத்தான் காட்டுகிறது. எனினும்,



நமக்கு நன்கு பழக்கப்பட்ட முகம்தான்.

இன்னும் தெரியவில்லையா? புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தான், கள்ளக் கடத்தலுக்கு அவரும் உடந்தைபோலும்!

அவள்...நமது விஜயலட்சுமி...அவள் தந்தை—கடத்தல் கும்பலின் தலைவன்—எம். ஆர். ராதாவன்.

தயாரிப்பாளர் பிரண்ட் ராமசாமியை அண்டி 'என்ன சார் உங்கள் படத்தில் புரட்சி நடிகர் தான் கதாநாயகன் என்று கூறினீர்களே! இங்கே 'வில்லன் போஸ்' கொடுக்கிறாரே' என்று கேட்டேன். 'பொறுத்திருந்து பாருங்கள். அடுத்த வாரம் வேண்டுமென்றால் இங்கே வாருங்கள். உங்களுக்கெல்லாம் கடிதங்கள் கொடுக்க 'போஸ்ட் மேன்' ரூபத்தில் எம். ஜி. ஆர். வருவார். மீதியை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்' என்று கூறி மழுப்பி விட்டார்.

பிரண்ட் ராமசாமியின் தயாரிப்பான பெயரிடப்படாத படத்துக்கான மேற்படி காட்சிகள் அண்மையில் படமாக்கப்பட்டன.

மற்றும் பிரண்ட், தேவிகா, நாகேஷ் முதலியோரும் நடிக்கும் இப்படத்தின் கதை வசனத்தை குடந்தை சோமு எழுதியுள்ளார். காசிலிங்கம் டைரக்ட் செய்கிறார்.

### கற்பகம்

அமர்ஜோதி மூவீசார் தயாரிக்கும் 'கற்பகம்' தீபாவளி விருந்தாகவிருக்கும். ஜெமினி கணேசன், சாவித்திரி, ரங்கராவ், எம். ஆர். ராதா, ஷீலா, முத்துராமன், வி. கே. ராமசாமி முதலியோர் தோன்றுகின்றனர்.

இப்படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் முதலியவற்றை கே எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றிருக்கிறார்.

## ஸ்டூடியோவில்

### கர்ணன்

பத்மினி பிக்சர்ஸ் தயாரித்துவரும் முழு நீள வர்ணப்படமான 'கர்ணன்' இன்னும் சில நாட்களில் ஜெய்ப்பூர் செல்லப் போகிறது. போர்க் காட்சிகள் சிலவும் அரண்மனைக் காட்சிகளும் ஜெய்ப்பூரில் படமாக்கப்படவிருக்கின்றன. சிவாஜி கணேசன், சாவித்திரி, தேவிகா முதலியோர்களும் கலை வல்லுநர்களும், டைரக்டர் பந்துலுவும் ஜெய்ப்பூர் செல்கின்றனர்.

### காஞ்சித் தலைவன்

புரட்சி நடிகர், இலட்சிய நடிகர், பானுமதி, விஜயகுமாரி, எம். ஆர். ராதா, வளையாபதி முத்துக்கிருஷ்ணன் முதலியோர் தோன்றும் மேகலா பிக்சர்சாரின் 'காஞ்சித் தலைவன்' இந்த வாரம் தமிழகமெங்கும் திக்விஜயம் புறப்படுகிறார்.

### துளசிமாடம்

தீபாவளிக்கு வெளிவரவிருக்கும் எம். ஏ. வி. பிக்சர்சாரின் துளசி மாடத்துக்காக இரண்டு பாடல்கள் அண்மையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.



அம்மாடியோ அத்தானுக்கு
கோபந்தைப் பாரு—அவர்
அழகு முகத்தில் எள்ளும்
கொள்ளும் வறுத்தது யாரு
என்ற பாடலும்
ஆடும் மயிலே ஆட்டம் எங்கே;
பாடும் குயிலே பாட்டு எங்கே?
பேசும் கிளியே பேச்சு எங்கே?
பெண்ணே உனது சிரிப்பு
எங்கே?

என்ற பாடல்களும் ஒலிப்பதிவாகின.

ராஜன், கோபாலகிருஷ்ணன், சந்திரகாந்தா, சாரதா முதலியோர் இப்படத்தில் தோன்றுகின்றனர்.

## அறிமுகப்படுத்துகிறோம்

**"நா**ன் பெருக்கும் புகழுக்கும் ஆசைப்படுகிறேன். பெரும் புகழும் இருந்தால்தான் நாம் சொல்லும் கருத்தை மக்கள் மதிப்பார்கள். பெரும் புகழும் இல்லாத எவனையும், அவன் எவ்வளவு அறிவாளியாக விருந்தாலும் உலகம் மதிப்பதில்லை" என்று கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனே கூறியுள்ளார். நல்ல பேரும், நால்வரின் புகழ்ச்சியும் உள்ள ஒருவன் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாடும் ஏடும் மதிப்பளிப்பது கண்கூடு.

இலங்கையில் பல புகழ் பெற்ற கலைஞர்கள் இலைமறை காய் போல் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோரை 'சுதந்திரன்' முன்பெல்லாம் அறிமுகப்படுத்தி வந்திருக்கிறது. அந்த வரிசையிலேயே மேடைக் கலைஞர்களை அறிமுகப்படுத்தும் பணியினை மீண்டும் ஆரம்பிக்கிறோம்

'மேடைக் கலைஞர்கள்' என்ற வரிசையில், நாடகங்களில் நடிப்பவர்கள், நடனமாடுபவர்கள், இசைக் கலைஞர்கள், மேடைக் காட்சி அமைப்பாளர்கள் ஆகியோரை வாசகப் பெரு மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க எண்ணியுள்ளோம்.

### குறிப்புகள் அனுப்பும் முறை

கலைஞர்கள், (தற்புகழ்ச்சி என்ற பதத்தை அசட்டை செய்து கொண்டு) தங்களைப் பற்றிய குறிப்புகளைச் சுருக்கமாக எழுதி அனுப்புதல் வேண்டும். நடிகர்களானால் தாங்கள் நடித்த நாடகங்களின் பெயர், மன்றத்தின் பெயர், புனைந்த வேடம் முதலியவற்றுடன் நாடக மன்ற நிர்வாகிகளிடமிருந்து சான்றிதழ் ஒன்றும் பெற்று அனுப்பி வைத்தல் நன்று.

நடிகர்களும், நாட்டியக் கலைஞர்களும் அண்மையில் நடைபெற்ற நாடகத்திலோ, நடனத்திலோ இருந்து, புனைந்த தோற்றத்துடன் கூடிய புகைப்படம் ஒன்றும், 'பாஸ்போட்' அளவு சாதாரண புகைப்படம் (கறுப்பு-வெள்ளை) ஒன்றும் அனுப்பி வைத்தல் வேண்டும். படங்களின் பின்புறத்தில் பெயரும் முகவரியும் இருத்தல் வேண்டும்.

ஏனைய கலைஞர்களும் தங்கள் தகுதிக்குரிய சான்றிதழ்களை உசிதமான முறையில் அனுப்பி வைப்பதுடன் 'பாஸ்போட்' அளவு (கறுப்பு—வெள்ளை) படம் ஒன்றும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

### உங்கள் ஒத்துழைப்பு

தாங்களே தங்களைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதைப் பல கலைஞர்கள் விரும்புவதில்லை. கலையைப் பொறுத்த வரை, கலைஞர்கள் கலைவாணரின் மேற்கூறப்பட்ட கருத்தை அனுசரிப்பதே சாலச் சிறந்தது என்ற எண்ணத்துடன், கலைஞர்களின் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

"அறிமுகப் படுத்துகிறோம்" பகுதியில் கலைஞர்களை 'சுதந்திர'னே அறிமுகப்படுத்துவதால் கலைஞர்கள் தாங்களாகவே தங்களைப் பற்றிய விபரங்களைத் தருவதில் தயங்கத் தேவையில்லை.

இதுபற்றிய கலைஞர்களின் கருத்தையும் அறிய 'சுதந்திரன்' ஆவலாயுள்ளது. உங்கள் கருத்துக்களைக் கடித மூலமோ, நேரடியாகவோ தெரிவிக்கலாம்.

'அறிமுகப் படுத்துகிறோம்' பகுதிக்கு விபரங்கள் தரும் கலைஞர்கள் தங்கள் விபரங்களுடன், கீழ்க்காணும் பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும் என்று கோருகிறோம்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

அறிமுகப்படுத்துகிறோம்;
"சுதந்திரன்"
த. பெட்டி 1183
கொழும்பு.

### அறிமுகப்படுத்துகிறோம்

முழுப் பெயர்..........................................

முகவரி..........................................

..........................................

துறை..........................................

(நாடகமா, நடனமா அல்லது வேறு வகையா என்பதைக் குறிப்பிடவும்)

பங்குபற்றிய நிகழ்ச்சிகள்..........................................

..........................................

..........................................
பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்
கையொப்பம்

(18 வயதுக்குக் குறைந்த நடிகர்களும் பெண் கலைஞர்களும் அவசியம் நிரப்ப வேண்டியது)

..........................................
கையொப்பம்

## எமது விமர்சனம்

# பெற்ற மனம்

**டா**க்டர் மு. வரதராசனாரின் சிறந்த நவீனங்களில் ஒன்றான 'பெற்ற மனம்' பீம்சிங்கின் டைரக்ஷனுடன் வெள்ளித் திரையில் ஒளி விடுகிறது. முனியம்மா தன் இளைய மகன் மணிவண்ணனைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் மூத்தவன் முத்துவையும் இழந்து விடுகிறாள். மணிவண்ணனோ பேராசிரியர் சீராளர் வீட்டில் தத்துப் பிள்ளையாக, சுட்டிப் பயலாக வளர்கிறான். மூத்தவன் முத்து அச்சகத்தில் கடமையாற்றுகிறான். ஊரவர் மத்தியில் அவன் குணக்குன்றாக விளங்குகிறான்.

மான்விழியின் அன்புக்கு ஆளாகிறான் முத்து. மணிவண்ணனோ அவளைத் தனது ஆசைக்குப் பலியிட முயற்சிக்கிறான். இதனால் ஏழை முத்துவுக்கும் பேராசிரியர் வீட்டு மணிவண்ணனுக்கும் மிடையே போராட்டம். ஈற்றில் வழமை போல அனைவரும் ஒருங்கு சேருகிறார்கள்.

துட்டப்பயலாக வளர்ந்த மணிவண்ணன் சீர்திருத்தச் செம்மலாகி தனது வரலாற்றைக் கூறுவது போன்று கதை அமைகிறது. ஆரம்பத்திலும் முடிவிலும் மணிவண்ணனைக் காட்டியிருக்கலாம். இடையிடையே பெரியவரான மணிவண்ணன் தோன்றுவது சீராகச்சென்று கொண்டிருக்கும் கதையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

முனியம்மாவாகத் தோன்றும் புஷ்பவல்லி தனது பாத்திரத்தை சிறப்பித்துள்ளார். மணிவண்ணனாக சிவாஜி கணேசனும் முத்துவாக எஸ். எஸ். ராஜேந்திரனும் தங்கள் பாத்திரத்தை குறைவின்றி நிவைவேற்றியுள்ளனர்.

மணிவண்ணனின் காலேஜ் நண்பனாக சந்திரபாபுவும், சந்திரபாவுவின் காதலியாக எம். என் ராஜமும் வருகிறார்கள். இவர்களின் நகைச்சுவை தூங்கிச் செல்லும் கதைக்கு விழிப்பு ஏற்படுத்துகிறது.

[illegible] சிறிது நேரம் தோன்றினும் பாத்திரத்துக்கு ஊட்டம் அளித்துள்ளார். பேராசிரியர் சீராளராக வரும் எஸ். வி. ரங்கராவ் பேராசிரியராகவே தோன்றி அமைதியாகச் சென்று விடுகிறார். மான்விழியாக வரும் எல். விஜயலட்சுமி தனது பாகத்தை திறம்படச் செய்துள்ளார்.

சம்பாஷணைகள் மிகைப்படவிருப்பதே சலிப்புத்தட்டுவதற்குக் காரணமாகும். பாடல்களை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கண்ணதாசன் போன்றோர் புனைந்திருந்த பொழுதிலும் 'காதற் கரும்பு கண்டேன்...' என்ற பாடலே ஓரளவு விருந்தளிக்கிறது.

உள்ளத்தைத் தொடும் சம்பவங்கள் என்று எதையும் குறிப்பிட முடியாது போனாலும் மொத்தத்தில் 'பெற்ற மனதை'க் காண முடிகிறது.

—பூவன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்புக் கலவரத்தை உருவாக்க இடதுசாரிகள் முயற்சி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரானதேயாகும். இதை நாடு அறியும்—நல்லவர்கள் புரிந்து கொள்வார்கள். ஆனால் சிந்திக்கும் திறன் அற்ற மரமண்டை படைத்த உங்களால் ஏனோ புரிந்து கொள்ள முடியவில்லை, இப்படிக்கூறி இந் நாட்டில் ஒரு வகுப்புக் கலவரத்தை மூட்டிவிடவே முனைகிறீர்கள். இதை நீங்கள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தமிழ் பேசும் மக்கள் நடாத்தும் இந்த பகிஷ்கரிப்பு இயக்கம் சிங்கள மக்களுக்கு எதிரானதாக இருந்திருந்தால் வட-கிழக்கு மாகாணத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் பொதுமக்களையும் அல்லவா பகிஷ்கரிக்கச் சொல்லியிருப்பார்கள்? மாறாக பகிஷ்கரிப்பு இயக்கத்திற்கு ஆதரவு நல்கும்படி அவர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் ஒத்துழைப்புத் தருவதாகச் சம்மதித்துள்ளார்கள். இந்த நிலையில் நீங்கள் இல்லாததைக் கற்பனை பண்ணிக் கூறி இந் நாட்டில் ஒரு இரத்தக் களரியை ஏற்படுத்த வேண்டாம்.

பகிஷ்கரிப்பு இயக்கம் காந்திய தத்துவத்திற்குப் புறம்பானது என்று மார்க்ஸிஸவாதியாகிய நீங்கள் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

### மலட்டு வாதம்

காந்திஜி எந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பகிஷ்கரிப்பு இயக்கம் நடத்தினாரோ, அதே வழியைப் பின்பற்றி இன்று இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் பேசும் மக்கள் மீது ஆட்சிபுரிவதை எதிர்ப்பதற்கு பகிஷ்கரிப்பு இயக்கத்தைக் கையாளுகிறார்கள் என்பதை மரமண்டை படைத்த உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறோம். எனவே பகிஷ்கரிப்பு இயக்கம் காந்தியத்திற்குப் புறம்பானது என்று கூறுவது அறியாமை—சுத்த மடமைத்தனமான மலட்டுவாதமாகும்.

### புகட்டிய பாடம் போதாதா?

உங்களின் உண்மை உருவம் வெளிப்படுவதற்கு முன்னரே, உங்களின் விலாங்குத்தனத்தைப் புரிந்துகொண்ட தமிழ் பேசும் மக்கள் என்றுமே உங்களை ஒதுக்கி வந்துள்ளார்கள். ஒருகால் தாலிப் பிச்சை வேண்டிப் பாராளுமன்றக் கதிரையைக் கைப்பற்றிய உங்கள் சக கொம்யூனிஸ்டுகளை போட்ட கொக்கரிப்பும் குள்ள நரிச் செயலும் போதும் போதும் என்றாகி விட்டது. தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்து 'சிறி' எதிர்ப்பு இயக்கம் நடத்தும் பொழுது அன்றைய பருத்தித்துறைப் பிரதிநிதி 'சிறி' பஸ் வேண்டுமென்று ஆட்சியாளரிடம் இரந்து நின்று அவல நிலை தமிழினத்திற்கு அழியா அவமானத்தைக் கொடுத்தது. இவற்றை நன்கு உணர்ந்து கொண்ட தமிழ் பேசும் மக்கள் கடந்த தேர்தலின் போது உங்களுக்குப் புகட்டிய பாடம் போதாதா? இந்த நிலையில் நீங்கள் தமிழ் பேசும் இளைஞர்களுக்கு வேறு வேண்டுகோள் விடுக்கிறீர்கள். உங்கள் நிலையை எண்ணிப் பரிதாபப்படுவதா? வேதனைப்படுவதா? அல்லது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இத்தகைய சிந்திக்கும் திறன் அற்ற மரமண்டைகளும் உளர் என்று அனுதாபப்படுவதா?

### அது பழங்கதை

தமிழ் பேசும் தொழிலாளர்கள் இந்த இயக்கத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஏதோ சர்வாதிகாரி போன்று கட்டளை பிறப்பித்திருக்கிறீர்களே! சற்று எண்ணிப் பாரீர். தொழிற் சங்கங்களை நீங்கள் கட்டியாண்ட காலம் கனவாகப் பழங்கதையாக மாறி விட்டது. இன்று மொழி வழித் தொழிற் சங்கங்கள் முகிழ்த்து அவற்றின் கூட்டமைப்பான 'தமிழ் பேசும் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனமும்' உருவாகிவிட்டது. இவையனைத்தையும் நீங்கள் அறியீரா? நீண்ட நெடும் தூக்கமா? அல்லது சித்தப் பிரமையா?

உங்கள் கூற்றை ஏற்றுச் செயல்படுவதற்கு உங்கள் ஆதிக்கத்தில் நீங்கள் நினைப்பது போல் தொழிலாளர் இல்லை. இதைச் சற்று நினைவு படுத்திக் கொள்ளவும். உங்கள் ஆதிக்கத்திலிருக்கக் கூடிய சிறு தொகையினரும் இன்றையோ, நாளையோ நம்மை வந்து அடையப்போகிறார்கள். தொழிலாளர்கள் விழித்து விட்டார்கள். உங்கள் பசப்பு வார்த்தையில் மயங்கி அவர்கள் தங்கள் தன்மான உணர்வை இழக்கத், தயாராகவில்லை.

'தமிழர் பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்' என்று மீண்டும் கேலியும் பண்ணுகிறீர்கள். 56ம் ஆண்டு காலிமுகப் பசும் புற்றரையில் செங்குருதி கொட்டிய பொழுது 'ஏன் உங்கள் போராட்டத்தைத் தமிழ்ப் பிரதேசத்தில் வைத்துக் கொள்வதுதானே' என்று கூறினீர்கள். இன்று அதற்கு மாறாகக் கூறுகிறீர்கள். அப்படியானால் தமிழினம் தனது இழந்த உரிமை பெற போராட்டம் நடத்தக் கூடாதா?

### யார் வகுப்புவாதிகள்?

அடுத்து தமிழ் பேசும் மக்களைப் பார்த்து வகுப்புவாதிகள் என்று கூறுகிறீர்கள். என்னே உங்கள் செருக்குத்தனம். தென்னிலங்கைத் தலைவர்களின் பாதாரவிந்தங்களை சிரமேற்தாங்கும் உங்களின் மரத்துப்போன உணர்ச்சியில் — மரமண்டையில் எழுந்த அடிமைப் புத்திதானே இப்படிக் கூற வைத்தது. நீங்கள் அடிமைச் சாசனத்தை எழுதிவிட்டீர்கள் என்பதற்காகத் தமிழ் பேசும் இனம் அந்த அடிமைச் சாசனத்தை ஏற்கத் தயாராகவில்லை. இதை நன்றாக மனதில் நிறுத்திக் கொள்ளவும்.

அண்மைக் காலத்தில் கொம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர் ஒருவர் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் 'மலைநாட்டுப் பிரச்சினை தமிழர் பிரச்சினை அல்ல' என்று கூறியுள்ளார்.

### மலைநாட்டு மக்கள் பிரச்சினை

மலைநாட்டு மக்களின் பிரச்சினை தமிழர் பிரச்சினை அல்ல என்றால் அது யாருடைய பிரச்சினை என்று கேட்கிறோம்?

இந்நாட்டில் வாழக் கூடிய மக்கள் இரண்டு மொழி பேசுகிறார்கள். ஒன்று சிங்களம், மற்றையது தமிழ். ஒருவன் பேசும் மொழியைக் கொண்டே அவன் எந்த [illegible] என்று [illegible]. அப்படியானால் மலைநாட்டு மக்கள் தமிழ் மொழி பேச வில்லையா? அவர்கள் தமிழ் மொழியைப் பேசவில்லை என்றால் நிச்சயம் சிங்களவர்களாக அல்லவா இருக்க வேண்டும்?

அவர்கள் சிங்களவர்களாக இருந்திருந்தால், நிச்சயமாக உலக நாடுகள் எங்குமே இல்லாத புதுரகமான இப்படியொரு பிரச்சினை தோன்றியிருக்க முடியாதே. இவற்றையெல்லாம் ஏனோ இடதுசாரி மர மண்டை படைத்த உங்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

இரு வாரங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் உள்ள ஒரு கொம்யூனிஸ்டுப் பெருந் தலைவர் ஆட்சியாளரின் மந்திரிசபை முடிவு பற்றித் தெரிவித்த அபிப்பிராயத்தில் 'அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் வேண்டிய தகுதியை அடையாவிட்டால், அவர்களுக்குப் பொது மக்களின் அனுதாபம் சிறிதளவே இருக்கும்' என்று கூறியுள்ளார்.

### தமிழ் மக்கள் இல்லையா?

அந்தக் கொம்யூனிஸ்டுத் தலைவருக்கு இந்நாட்டில் வாழக் கூடிய மக்கள் அனைவரும் சிங்கள மக்கள் என்ற எண்ணமா? அல்லது தமிழ் பேசும் மக்களின் அபிப்பிராயம் அரசியற் கனம் அற்றது என்ற எண்ணமா?

இத்தகைய எண்ணத்தை அந்தத் தென்னிலங்கைத் தலைவருக்குக் கொடுத்தவர்கள் யார்?

வேறுயாருமல்ல வட-கிழக்கு இலங்கையில் இருக்கக் கூடிய தமிழ் அபிமான மற்ற எட்டப்பர்களான எடுபிடிகளான இடதுசாரிகளேயாகும் என்பதை அறியீரா?

'நாம் தமிழர்' என்று இல்லாத இயக்கத்தை வைத்துப் பூச்சாண்டி காட்டினார்கள் ஆட்சியாளர். ஆனால், இன்று 'நாம் சிங்களவர்' இயக்கம் ஒன்று இரத்தின புரி நகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு விட்டது.

### 'நாம் சிங்களவர்'

இரத்தினபுரி நகரில் சில காலமாக எத்தகைய பொதுக் கூட்டங்களும் வைப்பதற்கு அனுமதி வழங்கப்படாமலிருந்ததை நாடு அறியும். ஏன் அரசியல் கோமாளி ஜனப் அசிஸ் அவர்களின் ஐ. தொ. காங்கிரஸ் கூடப் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் இன்று 'நாம் சிங்களவர்' இயக்கம் உருவாக அனுமதி வழங்கப் பட்டுள்ளது. அத்துடன் அக் கூட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்குப் பகிரங்கமாகச் சவால் விடுக்கப்பட்டும் உள்ளது. இவையனைத்தும் நம்மவர்க்குப் பழக்கப்பட்ட விடயம். இவற்றை எதிர்பார்த்து நமது உரிமைப் போராட்டத்தை நாம் கைவிட முடியுமா?

ஆனால் நமது உரிமைப் போராட்டத்தை வாபஸ் பெறும் படியும், சிங்கள ஊழியர்களுக்காக வக்காலத்து வாங்குபவருமான நீங்கள் இத்தகைய கண்டியெடுத்த வகுப்புவாத நடவடிக்கைகளை எதிர்த்து ஒரு அறிக்கை வெளியிடுகிறீர்களா? இல்லை உங்கள் தென்னிலங்கை சகமான்களாவது ஏதாவது கூறியிருக்கிறார்களா? அதுவும் இல்லை.

'பிரதேச சபைகள் அமைக்கப்படுவதாயின் மீண்டும் 1958ம் ஆண்டே உருவாகும்' என்று பகிரங்கமாக திரு. கே.எம்.பி ராஜரத்தினு உளறியிருக்கிறார். இவை உங்கள் காதுகளில் படவில்லையா?

### செய்தி இருட்டடிப்பு

தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை மட்டம் தட்டி, அவர்களை அடக்கி ஒடுக்கி விடுவதற்குப் பல வழிகளிலும் சூழ்ச்சிகளும் பயமுறுத்தல்களும் தினே தினே நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. நாட்டில் இருக்கக் கூடிய தினப் பத்திரிகைகள் செய்தி இருட்டடிப்புச் செய்வதில் தீவிரமாகச் செயல்படுகின்றன. என்றாலும் தமிழினம் உரிமை பெற்று, இந்நாட்டில் வாழக் கூடிய பெரும்பான்மைச் சமூகத்துடன் சரிசம நிலையில் வாழ்வதென்று திட சங்கற்பம் பூண்டுவிட்டது. இதை எந்தச் சக்தியாலும் அடக்கவோ அன்றி அழிக்கவோ முடியாது.

ஆனால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய எட்டப்பர்களும் காக்கைவன்னியர்களும் காலத்துக்குக் காலம் சுயநல வேட்கையுடன் குள்ளநரிச் செயலில் ஈடுபடுதல் நமது விடுதலைப் பாதைக்குச் சிறு தடைகளாக இருக்கலாம். ஆனால் அவை விடுதலைப் பாதைக்கு நிச்சயம் நந்தியாக இருக்க முடியாது. இவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்கள் திரு. குலரத்ன போன்றவர்களுக்குச் சிறிது தெம்பைக் கொடுக்கலாம். ஆனால் நமது நடவடிக்கை மூலம் ஆட்டம் காணவிருக்கும் ஆட்சிபீடத்திற்கு இவை ஊட்டம் அளிக்கப் போவதில்லை.

### பஸ்மீகரமாவீர்

இன்று சிங்களம் மட்டும் அமுலுக்கு கருவியாக உள்ளவர்கள் பகிஷ்கரிக்கப் படுகிறார்கள். நிலைமை மோசமாகினால் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களும் பகிஷ்கரிக்கப்படுவார்கள். இதை எட்டப்பர்களும் தென்னிலங்கைத் தலைவர்களின் எடுபிடிகளாக வட—கிழக்கு மாகாணத்தில் உள்ள இடதுசாரி மர மண்டை படைத்த எட்டப்பர்களும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் பேசும் இனத்தின் உரிமைப் போராட்டத்திற்குச் சிறு களங்கம் விளைவிக்கக் கூடிய நடவடிக்கையில் தானும் இந்த எட்டப்பர்களும் காக்கைவன்னியர்களும் முனைந்தால், அவர்கள் தமிழினத்தின் சுதந்திர வேட்கை என்ற அனற் பிழம்பில் பஸ்மீகரமாக வேண்டியதுதான்.

---

# ஆட்சியாளரின் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய மதங்களை நசுக்கி ஒடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஏனைய மதத்தவர்களைப் புத்த மதத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கிறது. இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மதத்தவர் மீது வீண் அபாண்டங்களையும், பழியையும் அரசாங்கம் சுமத்துகிறது. ஏனைய மதக் கோயில்களையும், புனித இடங்களையும் புத்த ஆலயங்களாகவும் புத்தர்களின் புனித இடங்களாகவும் மாற்றுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது அரசாங்கம்.

இவற்றை எதிர்த்து தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் மூன்று போராட்டங்களை நடாத்தியுள்ளார்கள். போராட்டங்களின் போது ஆட்சியாளர் காடையரையும் — காவலரையும் ஏவிவிட்டு தமிழ் பேசும் மக்களின் போராட்டங்களை நசுக்கி உள்ளார்கள். தமிழ் மாதர்கள் நடுத்தெருவில் — நடுப்பகலில் காடையர்களால் கற்பழிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தனை இன்னல்களைத் தாங்கிக் கொண்டும், மீண்டும் தமிழ் பேசும் இனம் போராட்டத்தில் குதித்துள்ள வேளையில் இனப் பாகுபாடுபற்றி ஐ. நா. சபையில் நடைபெற்ற விவாதத்தின்போது இலங்கைப் பிரதிநிதி திரு. பி. டி. எஸ். குலரத்ன, திரு. கெனடியை வாழ்த்தியதுடன், இலங்கையின் சட்டங்கள் இன மத பாகுபாடுகள் காட்டுவதற்கு இடமளிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரதிநிதியின் இந்தப் பேச்சு மேற்கூறிய இரு கதைகளையுமே ஒத்திருக்கின்றன.

[illegible] நாளைத் [illegible] யாக வேடம் போட முடியும்? அயோக்கியன் ஒருவனை மத்தியில் யோக்கியனாக வாழலாம். ஆனால் விபசாரியோ, அயோக்கியனோ பல நாளைக்கோ அல்லது பல பேரையோ ஏமாற்ற முடியாது.

### தந்தையின் முயற்சி

இலங்கைப் பிரதிநிதியின் ஐ. நா. சபைப் பேச்சின் குட்டைத் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் உடைத்து விட்டார்கள். தமிழரசுத் தந்தை அவர்களின் செயல் நிச்சயமாக இந்நாட்டு ஆளவந்தாரின் அருவருக்கத்தக்க ஆட்சி முறையை உலக அரங்கில் நாற்றமெடுக்க வைத்தேதீரும். வருங்காலத்தில் இன, மதப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஐ. நா. சபையில் விவாதிக்கப் படும் பொழுது நமது நாட்டுச் சிங்கள ஏகாதிபத்திய வெறி பிடித்த அரசின் பிரதிநிதிகள் வால் அறுந்த நரிகள் போன்று அமர்ந்திருக்க வேண்டியது தான்.

திரு. பி. டி. எஸ். குலரத்ன அவர்கள் ஐ. நா. சபையில் இத்தனை துணிகரமாக இலங்கையில் இன, மத வேறுபாடுகளுக்கு இடமில்லை என்று கூறுவதற்கு ஊக்கம் அளித்தவர்கள் யார்? எத்துணை கூச்சமுமின்றி பேசுவதற்கு இவருக்கு எங்கிருந்து தெம்பு வந்தது? வந்த இடங்களும் இருக்கத்தான் செய்கிறது.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள இடதுசாரி எட்டப்பர்களும் ஏனைய காக்கை வன்னியனார்களும் மேலெழுந்தவாரியாகச் சுயநல நோக்கத்துடன் உளறிக் கொட்டுவதின் பிரதிபலிப்பே இலங்கைப் பிரதிநிதியின் ஐ. நா. சபைப் பேச்சாகும்.

ஆட்சியாளரின் இந்த முழுப் பூசனிக்காயைச் சோற்றில் புதைக்கும் முயற்சி நீண்ட நாளைக்குப் பயன் கொடுக்க மாட்டாது. உண்மைக்கு என்றும் அழிவில்லை. சத்தியம் வெல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மர்மத் தொடர் கதை:

# புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

மல்லிகா பட்டு மாளிகை முன்பு பொலீஸ் ஜீப் பொன்று உறுமிவிட்டு நின்றது. அதிலிருந்து ஒரு இன்ஸ்பெக்டர் இறங்கிக் கறுப்புத் கண்ணாடி இளைஞனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தவாறு மல்லிகா பட்டு மாளிகையுள் நுழைந்தார்.

"ஹலோ! எப்படிச் சுகம்...?" என்று கறுப்புக் கண்ணாடியின் முதுகில் தட்டிய இன்ஸ்பெக்டரின் முகத்தில் அசடு வழிந்தது...'மன்னிக்கவும்...எனது நண்பர் குமார் என்று உங்களை எண்ணி விட்டேன். அவரும் உங்களைப் போலத்தான் இருப்பார்...' என்றார் இன்ஸ்பெக்டர்.

இப்போதுதான் இளைஞனுக்கு உயிர் வந்தது. வாய் விட்டுச் சிரித்துச் சமாளித்துக் கொண்டு சேலைகளுடன் காரை நோக்கி விரைந்தான். காரினுள் சேலைகளைப் போட்டு விட்டுச் சற்று நேரம் பட்டு மாளிகையை நோக்கியபடி நின்றான். இன்ஸ்பெக்டர் ஏதோ துணி வாங்கிக் கொண்டிருந்தார். இளைஞன் காரில் ஏறினான்... கார்...பறந்தது.

(5)

அன்றொரு வெள்ளிக் கிழமை. திருமலைக் கோணேசர் ஆலயத்தில் ஒரே கூட்டம். புராதனக் கோயிலின் அமைப்பைப் பார்ப்பதற்காக வெளியூர்களிலிருந்தெல்லாம் இரண்டு மூன்று பஸ்களில் பக்தர்கள் வந்திருந்தனர். பக்தர்களின் மத்தியில் கறுப்புக்கண்ணாடி இளைஞனும் அசல் பக்தனாக் காட்சியளித்தான். மூன்று விரல் விபூதிப் பூச்சும், சந்தனப் பொட்டும் அவனுடைய நெற்றியை அலங்கரித்தன.

மத்தியானப் பூசைக்குப் பின் கூட்டம் சிறிது சிறிதாகக் குறைந்தது. கறுப்புக் கண்ணாடி மட்டும் அங்கும் இங்குமாக எப்போதும் நடமாடிக் கொண்டேயிருந்தான். ஓரிடத்தில் வெளியூர்ப் பக்தர்கள் கூட்டமொன்று, கோணேசர் ஆலயத்தை அடுத்துள்ள சிறிய புதர்களுக்குள் மான்கள் துள்ளி விளையாடுவதை ஆர்வத்துடன் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தது. கறுப்புக்கண்ணாடியும் கூட்டத்தோடு கூட்டமாக நின்றான். அவனுடைய கண்கள்...ஒரு பெண்மணியின் கழுத்திலிருந்த தங்க மாலையை இமை கொட்டாது நோக்கிக் கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில் ஒருவாறு அப்பெண்மணியின் பக்கத்தில் நெருங்கிவிட்டான். கூட்டத்தினரை ஒரு தடவை கூர்ந்து நோக்கினான். எல்லோர் கவனமும் மான் கூட்டத்திலேயே இருந்தது. இமை கொட்டும் நேரத்தில் அப்பெண்மணியின் தங்க மாலையை இழுத்தறுத்துத் தன் பையில் திணித்துக் கொண்டான்...! 'ஐயோ! திருடன்! திருடன்!! மாலையை அறுத்துவிட்டான்...!' அழுது புலம்பினாள் அந்தப் பெண்மணி. 'அதோ ஓடுகிறான்.....விடாதே பிடி!.....' என்று கூச்சல் போட்டவாறு எதிர்த்திசையை நோக்கி ஓடினான் கறுப்புக் கண்ணாடி. 'விடாதே... அரதது...!' என்று கத்தியபடி பலர் அவனைப் பின் தொடர்ந்தனர்.

சிறிது தூரம் ஓடி வந்ததும், 'ஐயையோ...! எங்கேயோ பதுங்கி விட்டானே......இந்தப் பற்றைகளை நன்றாகச் சோதனை பண்ணுங்கள்...' என்றவாறு பற்றைகளையும் பரிசோதித்தான். கூட்டத்திலிருரும் பற்றைகளை ஆராய்வதில் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். அப்போது இளைஞன் அங்கிருந்து மெள்ள நழுவினான்.

இராவணன் வெட்டிற்கு அண்மையில் கடலை அண்டியிருந்த ஒரு பெரிய பாறையில ஒரு செட்டியார் ஏதோ ஒரு நூலைப் படித்தபடியிருந்தார். கறுப்புக் கண்ணாடி மெள்ளச் சென்று அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் செட்டியாரின் கவனத்தைக் கவர்ந்து, அவருடன் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

திடுதிப்பென்று மூக்குப் பொடியைப் பற்றிப் பேச்சைத் திருப்பித் தனது பையிலிருந்து ஒரு சிறிய தகர டப்பியை வெளியே எடுத்து 'எனக்குப் பொடி போடாவிட்டால் ஒரு வேலையும் ஓடாது...' என்று கூறிக் கொண்டே டப்பியைத் திறப்பதற்குப் பகீரதப்பிரயத்தனம் செய்தான். அவனால் திறக்க முடியவில்லை. 'இப்படிக் கொடு தம்பி! ஒரு விநாடியில் திறந்து தருகிறேன்...' என்று சிரிப்புடன் டப்பியை வாங்கி இலேசாகத் திறந்தார். அடுத்த விநாடி... 'ஐயோ!' என்று அலறியபடி பாறையில் விழுந்தார் செட்டியார்!

(தொடரும்)

## அதிசயம்... ஆனால் உண்மை!

1829-ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்த ஒரு சிறுவனுக்கு நான்கு வயதிலேயே மீசை, தாடி எல்லாம் முளைத்துவிட்டன. ஏழு வயதில் அவை நரைத்து, அவனும் கிழவனாகி இறந்து போனான்!

யோகி ஹரிதாஸ் தம் நாவால் தம் நெற்றியிலுள்ள திலகத்தைத் தொட்டு விடுவார்!

பிடால்ட் என்ற பிரெஞ்சுக் குடியானவன் இரண்டு மூக்குகளுடன் பிறந்தான்!

மலேஷியாவில் உள்ள ஒரு வகை மீன், மரங்களில் ஏறுகிறது!

—தி. சிறீஸ்கந்தராசா, கந்தர்மடம்.

## சுதந்திரப் பொன் மொழிகள்

பணத்திற்காகவும், பதவிக்காகவும் தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்பவன் அடிமையை விடக் கேவலமானவன்,

—காரிக்.

அநியாயம் என்ற அடிப்படையின் மீது கட்டப் பட்டதுதான் அடிமைத்தனம்.

—பிளாட்டோ.

சுதந்திர மனிதனாகப் பிறந்த ஒருவனுக்கு, தன் சந்ததியாரிடம் தன் தாயகத்தைச் சுதந்திர நாடாக ஒப்படைப்பதுதான் மிகுந்த பெருமைக் குரியதாகும்.

—ஹாவார்ட்.

நாம் சுதந்திரமாக வாழப் பிறந்தோம் என்பதை உணராதவர்கள் ஒரு போதும் சுதந்திரத்திற்காகப் போராட முடியாது.

—கோதே.

ஒரு நாட்டு மக்கள் சுதந்திரம் அடைவதற்குத் தகுதியாகாத வரையில், அதன் அரசியற் தலைவர்கள் எவ்வளவு முயன்றாலும் அதற்குச் சுதந்திரம் கிட்டாது.

—மெக்காலே.

ஒரு நாட்டின் சிறப்பை அதன் நீர் வள, நிலவளத்தால் அளக்கக் கூடாது. அந்த நாடு சுதந்திர நாடா அல்லதா என்பதை வைத்துத்தான் அளக்க வேண்டும்.

—மாண்டெஸ்கியூ.

மதச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், மனித உரிமைச் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையிலே தான் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியையும், திருப்பத்தையும் வருவிக்க முடியும்.

—ஜெபர்ஸன்.

அடிமைத் தனம் என்பது திருடுவதற்கும் கொள்ளை அடிப்பதற்கும் ஒப்பானதாகும்.

—சாக்கிரட்டீஸ்.

அடிமைத்தனத்தை வெறும் ஒரு மணி நேரத்திற்கு கூட என்னால் அனுமதிக்க முடியாது.

—வில்லியம் பிற்.

தொகுத்தவர்:

வீ. சண்முகலிங்கம்,

நாரந்தனை தெற்கு.

## புதிய மருமக்கள் வாரீர்!

3763 எம். பிச்சை, 188, மெயின் வீதி, எட்டியாந் தோட்டை.

3764 க. நா. நடராஜா, சி. த. ப. வகுப்பு, தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா.

3765 சி. சாந்தலிங்கம், மே/பா திரு. சி. சின்னையா, தையிட்டி, காங்கேசன் துறை.

3766 அ. வைரவமூர்த்தி, பத்திரகாளி கோவிலடி, சுழிபுரம்.

3767 க. விக்கிரம பாஸ்கரன், பொன்லன் தோட்டம், துன்னாலை மேற்கு, கரவெட்டி.

3768 கே. செல்லையா, மே/பா திரு. எஸ். கந்தையா, அல்வாய் வடக்கு, அல்வாய்.

3769 கே. ஆர். குமாரன், எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3770 சி. வேலு, எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3771 சி. வெள்ளைசாமி, எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3772 கி. ரா. பாலகிருஷ்ணன், எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3773 செல்வி கே. ஆர். தேவகி, எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3774 ரா. செ. மைக்கேல், எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3775 சி. செல்வராஜ், எவிங்டன் தோட்டம், பொரலங்கடை.

3776 ஏ. புஹாரி, 75, கண்டி ரோட், வறக்காமுறை, உக்குவலை.

3777 ச. யோகரெட்ணம், 11-ம் வட்டாரம், பெரிய கல்லாறு, கல்லாறு.

3778 ந. சிவநேசன், 'நவ மகால்', கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

3779 எஸ். ஏ. கரீம், 3/5, டயஸ் பிளேஸ், கொழும்பு—12.

3780 சொ. கிருஷ்ணமூர்த்தி, 358, திருமலை வீதி, மாத்தளை.

3781 பெ. கணேசன், மாணிக்கவத்தை மேமலை, மடுல்கெல்ல.

3782 செல்லி செபரட்ணம், 'முருகேஸ்திரா', நுணுவில் மேறகு, சாவகச்சேரி.

3783 இ. குமாரகுலசிங்கம், மே/பா திரு. பொ. இராசையா, கட்டுடை, மானிப்பாய்.

3784 செ. ஜெயபாலசிங்கம். இலகடி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

3785 கு. இராமநாதன், கலையிறுதியாண்டு, புனித சூசையப்பர் கல்லூரி, பண்டாரவளை.

3786 க. சிவானந்தசோதி, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

3787 செல்வி முருகேசு மாரிமுத்து, கோபாலபுரம், நிலாவெளி, திருகோணமலை.

3788 செ. சிவகுருநாதன், அம்பிகைவாசம், கொடிகாமம்.

3789 த. குகனருள்தம்பி, மே/பா திரு. ரி. தம்பி, இணுவில் மேற்கு, சுன்னாகம்.

3790 சி. சிறீஸ்கந்தராசா, உடப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, உடப்பு.

3791 செல்வி அ. சந்திரவதனா, பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

3792 ச. செல்லத்துரை, இல. 9, பசார் வீதி, வதுளை.

3793 வி. கணேசன், கச்சாய் ரோட், சாவகச்சேரி.

3794 சி. க. சுதர்மசீலன், இல. 1, மிஷன் வீடு, மன்னார்.

## அமுத வாக்கு

மற்றவர்கள் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்வீர்களாக.

—இயேசுநாதர்.

பழங்கள் நிறைந்த மரம் எப்பொழுதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். நீ பெருமையடைய வேண்டுமானால் அடக்கத்துடனும் பணிவோடும் இரு.

—ராமக்கிருஷ்ணர்.

எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது. அது போல் ஈசுவரன் இல்லாமற் போனால் மனிதன் ஜீவித்திருக்க முடியாது.

—ராமக்கிருஷ்ணர்.

தன்னைத்தானே உயர்ந்தவன் என்று கர்வப்படுபவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்திக்கொள்பவன் உயர்த்தப்படுவான்.

—இயேசுநாதர்.

நீங்கள் பிறரை மன்னித்தால், கடவுள் உங்களை மன்னிப்பார்.

—இயேசுநாதர்.

அனுப்பியவர்:

நா. சிவேந்திரன், நுகேகொடை.

## உங்கள் சிந்தனைக்கு

கண்களுக்கு இமைகள் சாந்தியளிப்பதுபோல், உழைப்பிற்கு அமைதி நிறைந்த ஓய்வு வேண்டும்.

—தாகூர்.

செல்வந்தர்களின் மாளிகைகளை விட ஏழைகளின் குடிசைகளிலேதான் அன்பு வாசம் செய்கிறது.

—இங்கர்சால்.

அறியாமைகளிலெல்லாம் பெரியதோர் அறியாமை உண்டு. அது தான், தெரியாத ஒன்றைத் தனக்குத் தெரிந்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்வது.

—பிளேட்டோ.

3795 வீரசிங்கம் நாகநாதன், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

3796 மு. கதிரவேல், உப்புக்குளம், மன்னார்.

3797 பே. ராஜு செபஸ்தியன், வன்னாகுளம், முருங்கன்.

3798 செல்வி மு. கிருஷ்ண தேவி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

3799 எம். வை. சம்சுல் ஹன், கராகொடை, எட்டியாந்தோட்டை.

3800 க. ரமணாஸ்கந்தா, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

3801 க. நல்லுசாமி, அம்பாத்தனை தோட்டம், மத்துகம.

3802 வேலுப்பிள்ளை குமாரசாமி, நுணுவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி.

3803 வ. க. பத்மநாதன், கல்லடி-உப்போடை, மட்டக்களப்பு.

3804 செல்வி வெ. இரா. தனபாக்கியம், நல்லாயன் பெண் பாடசாலை, நுவரெலியா.

3805 த. சிறீ ஸ்கந்தராஜா, 144, அரசடி வீதி, கந்தர் மடம்.

3806 செல்வி பேர் ராஜரட்ணம், 30, யூனியன் பிளேஸ், கொழும்பு—2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## மோட்டார் வள்ளங்களால் கரவலைக்கு இடையூறு

## தமிழ் தொழிலாளர் அவதி

மட்டக்களப்பு கடற்கரை ஓரங்களில் வாடி அமைத்துக்கொண்டு கரவலைத் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு, மோட்டார் பூட்டிய வள்ளங்களில் சென்று மீன் பிடிக்கும் சிங்கள மீன் பிடிகாரர்களால் பெரிய இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளன. தகராறுகள் வளர்ந்து அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக் கூடும் என்று அஞ்சுவதாகவும் மட்டக்களப்பு தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. பாவிலுப்பிள்ளை தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் ஆக ஆறு மாதங்கள்தான் மட்டக்களப்பு கடலில் கரவலையின் உதவியுடன் மீன் பிடிக்க முடியும். இந்தக் குறுகிய காலத்தை நல்ல வகையில் பயன் படுத்தினால்தான் எஞ்சிய காலத்தை ஓரளவு கவலையின்றித் தொழிலாளர்கள் கழிக்க முடியும். ஆனால் இந்தக் குறிப்பிட்ட காலத்துக்குள்ளேயும் மீன் பிடித் தொழிலை நடத்துவதற்கு சிங்களத் தொழிலாளர்கள் பெரும் இடையூறு செய்து வருவதாக திரு. பாவிலுப்பிள்ளை கூறுகிறார்.

கரையோரங்களில் சில தமிழ்த் தொழிலாளர்கள் வாடிகளை அமைத்துக் கொண்டு கரவலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான மோட்டார் பூட்டிய வள்ளங்கள் கடற்கரை ஓரங்களில் அடிக்கடி ஓடித்திரிவதனால் மீன்கள் கரவலைக்குள் பிடிபடாமல் கலைக்கப்படுவதோடல்லாமல், பெருந் தொகையான பணம் செலவிட்டு வாங்கப்பட்ட வலைகளும் சேதமடைந்து விடுகின்றன. இந்த வள்ளங்களை சிங்களத் தொழிலாளர்களே வைத்துள்ளனர்.

சமாதானமான முறையில் மோட்டார் வள்ளக்காரர்களிடம் எவ்வளவோ வேண்டியும் அவர்கள் செவிமடுப்பதாயில்லை. இந்த நிலை நீடிக்குமானால் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடும் என்று தொழிலாளர்களும், சுற்றுப்புற மக்களும் கிலேசமடைந்துள்ளனர்.

பரம்பரை பரம்பரையாக தங்கள் சொந்தப் பிரதேசத்தில் செய்து வந்த தொழிலுக்கே இடையூறு ஏற்பட்டு விட்டதைக் கண்டு மக்கள் துன்பமுறுகின்றனர், என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### பாரதி மாணவ மன்றம்

திருகோணமலை இல. 29, ஔவையார் வீதியில் பாரதி மாணவமன்றத்துக்கு இவ்வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: எஸ். சிவலிங்கம், காரியதரிசி: என். மகேந்திரன், பொருளாளர்: ஆர். ஜெயராஜா, செயற்குழு உறுப்பினர்: திருவாளர்கள் கு. துரைராஜா, ஆர். ராஜ்மோகன், மூ. சந்திரமோகன்.

### இந்தி எதிர்ப்பு மாநாடு

கிருஷ்ணகிரியில் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை நடாத்துவதற்கு சுதந்திராக் கட்சி தீவிர ஏற்பாடுகள் செய்து வருகிறது. சுதந்திராக் கட்சியின் முக்கிய தலைவர்களான ராஜாஜி, ரங்கா, மசானி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள் என்று தெரிகிறது.

### இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்க செயலாளர் அறிக்கை

'இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கதையின் மீது அறுவர் உரிமை கொண்டாடினர். வெவ்வேறு முகவரியிலிருந்து அவர்கள் தங்களுக்கே பரிசுப் பணத்தை அனுப்பும்படி கேட்டு எழுதினர் அவர்கள் எல்லோருமே எழுத்துலகுக்குப் புதியவர்கள். அவர்களில் ஒருவராவது தங்கள் புகைப்படங்களை அனுப்பவோ, தங்களைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை அனுப்பியோ தங்களை இன்னாரெனக் காட்டிக் கொள்ளவில்லை. எந்த முகவரியிலிருந்து கதை வந்ததோ அந்த முகவரிக்கு பரிசுப் பணத்துடன் நேரே சென்ற தலைவர், எழுதியவரைக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பினார். ஆகவே சங்கச் செயற்குழு இரண்டாவது பரிசை வழங்குவதில்லையெனவும் அக் கதையைப் பயன்படுத்துவதில்லையெனவும் பரிசுப் பணத்தை நன்கொடையளித்த மில்க்வைற் சோப் தொழிற்சாலையினரிடமே திருப்பிக் கொடுப்பதெனவும் முடிவு செய்துள்ளது.

மீதி ஒன்பது கதைகளும் "போட்டிக் கதைகள்" என்ற தலைப்பில் ஒரு தொகுப்பாக இம்மாதம் வெளியிடப்படும்.'

இவ்வாறு இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. மகாதேவா [தேவன் — யாழ்ப்பாணம்] அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### பாரதிகள் தோன்றவேண்டும்

"பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியா சுதந்திரம் பெறாமல் அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு அடங்கி, ஒடுங்கி இருந்தது. அந்தக் காலத்திலேயும், இக்காலத்தில் வாழும் சில பதவி ஆசை பிடித்த மக்களைப் போல் வாழ்ந்த மக்கள், ஆங்கில மோகத்தில் மூழ்கிப் பதவியும் பணமும் கிடைத்தவுடனே தமிழ்ப் பண்பை மறந்தனர், தங்கத் தமிழை மறந்தனர், தான் யார் என்ற நிலையை மறந்தனர். ஏன் தன்னையே மறந்தனர்." இவ்வாறு மட்டக்களப்பு உதய மன்றத்தின் சார்பில் நடை[illegible] பாரதி விழாவில் [illegible] திரு. ஞா. வாசன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசினார்:-

சுயநல வேட்டையே தம் இலட்சியமாகக் கொண்டு ஒரு சமுதாய மக்கள் கிறிறங்கிப் போனால் அந்தச் சமுதாயத்தில் அச்சம் குடி புகுந்து கொள்கின்றது. அடிமைத்தனமும் மக்களை இறுகத் தழுவிக் கொள்கின்றது. இதைக் கண்டு பாரதியார் மனம் கடலலைபோல் குமுறி யெழுகின்றது. கவிதைகளும் அலையலையாக வந்து விழுகின்றன. 'நெஞ்சு பொறுக்குதில்லையே'! .... ஒரு அலை வந்து விழுந்தது... 'இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்'... அடுத்த அலைகளும் வந்து விழுகின்றன. அடிமைத்தனம், அச்சம், சுயநலம், சாதிச் சண்டைகள் இவைகள் எல்லாம் எதிர் காலத்தில் கரைந்துவிடும் என்று அவர் கண்ட கனவுகள் நனவாகிக்கொண்டே வருகின்றன. ஆனாலும் இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் மொழிக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமானால் பதவியாசை பிடித்த சில பச்சோந்திக் கும்பல்களால் தலை குனிந்து நாணிக் கூனி, வெட்கித்துக் கிடக்கும் தமிழ்த்தாய் தலை நிமிர்ந்து தன் மானத்துடன் வாழவேண்டுமானால்—பல பாரதிகள் தோன்ற வேண்டும்.

திருவாளர்கள்: அ. செ. மத்தியாஸ், மாஸ்டர் சிவலிங்கம், 'நடமாடி' கு. யோன்ராசன், அற்புதராசா குரூஸ், செல்வி யோகம்மா சின்னையா ஆகியோரும் பேசினர். கூட்டத்துக்குத் திரு. ஞா. அல்போன்ஸ் தலைமை தாங்கினார். திரு. வ. அந்தோனி வரவேற்புரையும் திரு. அ. அந்தோனிமுத்து (முத்தழகு) நன்றியுரையும் நிகழ்த்தினர்.

## சங்கப்பலகை

(௨-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தி வைத்திருக்கும் வகை, சுவையான நடை, ஆங்காங்கு இடம் கருதித் திருவாசகப் பனுவல்களைச் சேர்த்திருக்கும் முறை, அரிமர்த்தன பாண்டியன், செம்மனச் செல்வி, ஏனதிராயர் என்போரது குணவியல்புகளை அவர்களது பேச்சுக்களின் மூலமே வெளிப்படுத்தியிருக்கும் திறமை என்பனவற்றைக் கூறலாம். மேலும், நாடகத்தில் சில காட்சிகள் மிகவும் சிறியனவாக அமைந்துள்ளன வெனினும், மேடையில் நடிக்கும்போது, சிறிய காட்சி என்று தெரியாத வளவிற்குக் காட்சிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

'தென்னவன் பிரமராயனி'ல் ஒரு சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. சில காட்சிகள் பாத்திரங்கள் மூலமாகக் காட்டப்பட்டுள்ளன. இவை, மேடையில் நாடகமாகப் பார்ப்போருக்குக் கதையில் தெளிவின்மையையும், மயக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியவை. நாடறிந்த கதை ஒன்றை எழுதும் போது, 'நாடறிந்த கதைதானே' என்ற மன நிலையோடு எழுதாமல், 'எவருக்கும் தெரியாத ஒரு கதையை எழுதுகிறேன்' என்ற நினைவோடு எழுத வேண்டும். தென்னவன் பிரமராயனில் உள்ள சில பாத்திரங்கள் பேசுகின்ற பேச்சு வழக்கு, மாணிக்கவாசகரின் காலத்திற்கு எங்களை இழுத்துச் செல்லத் தடையாக விருக்கின்றது.

நாடகம் ஒன்றை மேடையில் பார்க்கும்போது, இயக்குனரின் திறமையை அறிய முடியும். ஆனால், நாடகம் ஒன்றைப் படிக்கும்போதும் இயக்குனரின் திறமையை அறிய முடியும் என்பதைத் தென்னவன் பிரமராயனில் காணலாம். இந்நாடக நூலின் மூலம் இதன் ஆசிரியரை, சிறந்த, மேடை நாடகச் சிருஷ்டி கர்த்தாவாகவும், தத்துவ ஞானியாகவும், அசுவ நூலறிஞராகவும் நிச்சயமாகக் கணிக்கலாம்.

'தென்னவன் பிரமராயன்' இலக்கிய அந்தஸ்தை எட்டிப் பிடிக்காவிட்டாலும், படிக்கும்போது மேடையில் காண்பது போன்ற உணர்வை அளிக்கின்றது. இச் சிறப்பு ஒன்றே இந்நூலின் வெற்றிக்குப் போதுமானது. சுருக்கமாகக் கூறில், தென்னவன் பிரமராயன் 'பொழுது போக்கிற்கேற்ற' சிறந்த ஒரு நாடக நூல் எனலாம்.

—'ஆழியான்'

## இஸ்லாமிய முன்னேற்றக் கழக தொடக்க விழா

"ஒற்றுமையின் மேம்பாட்டினையும் ஒரு தலைவனின் பெருமையையும் எடுத்துக்காட்டிய இஸ்லாத்தில், இன்று எத்தனை—எத்தனையோ பிரிவுகளும் வேறுபாடுகளுந் தோன்றி, நம்மை ஒன்றாகத் திரளச் செய்யாது வெவ்வேறாகப் பிளவு படுத்தி வைத்திருக்கிறது—இதை ஒரு மூலமாகத் தீர்த்து இஸ்லாமியர் அனைவரையும் ஒற்றுமைப் படுத்துவதும் ஒரு தலைவனை நாம் காணுவதுமே இஸ்லாமியர் முன்னேற்றக் கழகத்தின் மூலக் கொள்கையாகும்."

இவ்வாறு பஸ்யாலைப் பகுதியைச் சேர்ந்த, நாம்புளுவை என்னுமிடத்தில் அண்மையில் நடந்த இஸ்லாமிய முன்னேற்றக் கழகக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தை தொடக்கி வைத்த இ. மு. க. பொதுச் செயலாளர் ஜனாப் ஏ. ஆஸாத் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் [illegible] பட்டனர்.

தலைவர்: ஜனாப் ஏ. எம். ஷாபி ஹசன், உபதலைவர்: ஜனாப் எம்.எஸ்.எம். ஜஃபர், காரியதரிசி: ஜனாப் எம். என். எம். ஸவாஹிர், உப காரியதரிசி: ஜனாப் ஏ. எம். எம். ஹனிபா, பொருளாளர்: எம். வை. எம். சிஹாப்தீன்.

நிர்வாக சபையில் ஜனாப்கள்: ஏ. எல். புஹாரி, ஏ. ஸீ. எம். ராஸீக், ஏ. ஆர். எம். றபீக், ஏ. எம். கவுஸ், ஏ. ஆர். எம். ஆரிப், எஸ். ஏ. ஏ. அஹத், எம். ஏ. எம். யாசீன் ஆகியோர் சபையோரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்பச் சுரங்கம், புலி வாழ் குகையானால்?...

சகோதரியாக ஏற்பாளோ?

பைத்தியக்காரி!...தாலி கட்டி மணந்தவளை சகோதரியாக ஏற்க, வாழ்வு கதையா? கனவா வாழ்வு?...

வாழ்க்கை என்பது கணநேர துய்ப்பா?

என் நிலை உணர்ந்து, என் அன்பனிடம் என்னைச் சேர்ப்பாரா?

'உன்னை உன் அன்பனிடம் சேர்ப்பதா? ஏமாற்றிவிட்டதாக வழக்குப் போட்டால்?...

என் காதல்?...

'பைத்தியக்காரி!... உனக்கு ஏது காதல்! காதலைப் பற்றிச் சிந்திக்கும் நேரமா இது? உன் வாழ்வு பற்றிக் கவலைப்படுகிறாயே!...எதும் அறியாது உன்னை மணந்தவன் வாழ்வை இருட்டடிக்க உனக்கேது உரிமை! உன் காதலுக்காக நீயோ, ராஜுவோ, மனங்கலங்குவதில் அர்த்தமுண்டு...ஆனால் உங்களுக்காக,ஒன்றுமறியாத உன் கணவர்வாழ்வைப் பாழாக்கலாமா?...

மலரைக் கொய்தவன் மணத்தை நுகரவே தவிர, அதன் முள்ளின் கூர்மையை ஸ்பரிசிக்க அல்லவே!

அப்படியானால், இவருடன் இணைந்து வாழுவதா?...ராஜ் தீண்டிய மேனியை...

நினைவுகளே மேனியில் புழுக்களாக நெளிகின்றனவே!...

இளமைக் காதல் நிறைவேறினால் புனிதமானதுதான். ஆனால்—எத்தனை நிறைவேறுகின்றது?

உடலும் உள்ளமும் ஒருவனுக்குத்தான் உரிமை, எனக்கூற இது என்ன காவிய காலமா?

அப்படியானால் கற்பு!...

கற்புக்குத்தான் புதுப்புது அர்த்தங்கள் பல இந்த நவீன காலத்திலே கற்பிக்கப்பட்டு விட்டனவே!...தன் மனத்தை தானே ஏமாற்ற, உலகம் வகுத்துக் காட்டிய வழிதானே இது!...

உள்ளமும் உடலும் பிரியப்பட்ட, 'பிரிக்கப்பட்ட உலகம் இது. இதில் காதலாவது, கற்பாவது!

எப்படியாவது வாழ்ந்தால் சரி என்னும் உலகம்.

'முடியாது! ... இப்படித்தான் வாழவேண்டும் என்று கனவுகள் பல கோடி வளர்த்தவளாயிற்றே நான்! என்னால் எப்படியாவது வாழ்ந்தால் சரி என்று இருக்கமுடியாது!...'

உன் பழைய நினைவுகளை மறந்து விடு!...

அதன் சுவடுகளைமறைத்து விடு!

கால ஓட்டத்தில் அதன் மேல் பல சுவடுகள் பதியாது போகாது!...

'உண்மையை, உள்ளத்தை மறைத்து என்னால் வாழமுடியாது. உள்ளதை உரைக்கவே போகிறேன்!...'

உன் உண்மையால் இரு குடும்பங்கள் பாரம்பரியமாக அழியாத பழியைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றால்...உன் பெற்றோர்கள் அவமானம் தாங்க முடியாமல் வேறு வழியைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றால்...உண்மையைச் சொல்! ......இல்லாவிட்டால் இருளை மறை! ஒளியை விடு! மறைக்க வேண்டியதை மறைத்துவிடு!... ...புதைத்து விடு!...

பழமையில் மூழ்கி, வாழ்வை இழக்காதே!...

அதோ அவனும் வந்து விட்டான்!...

'அன்பே!...'—உணர்ச்சியின் வெம்மையில் சொற்கள் உருகிக்கசிந்து கரகரத்த குரலில், தெளிவற்ற நிலையில் வெளியாகின்றன.

—தளிர் மேனி நடுங்க,இதயம் இனங்காணுத் துடிப்பில் படபடக்க, அவள் புதிய வாழ்வை நோக்கி எழுகின்ருள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2வது வாரம் காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் [மருதானை] ராணி [யாழ்ப்பாணம்] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] ஓடியன் [கல்கிசை]

லிபர்ட்டி [பதுளை] ஜோதி [திருகோணமலை] சென்ட்ரல் [நாவலப்பிட்டி] நியூஜோதி [இரத்தினபுரி]

ஓடியன் [கண்டி] சென்ட்ரல் (பருத்தித்துறை) லவினியா [நுகேகொடை]



பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல்
பகையையும் சாடுகிருர் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா,
எம். ஆர். ஆர். வாசு, எஸ். ஏ. அசோகன், பி. கண்ணம்பா,
சாண்டோ சின்னப்ப தேவர்

மற்றும் பலர் நடித்த

# தாயைக் காத்த தனயன்

---

## விரைவில்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை)

மற்றும் 7 திரைகளில்!

ஆனந்தன்—இ. வி. சரோஜா—அசோகன்
சரஸ்வதி—ராமராவ்—எம். வி. ராஜம்மா

மற்றும் பலர் நடித்த



# வீரத்திருமகன்

---

## 3வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
புஷ்பலதா — கல்யாண்குமார் — நாகேஷ்
மற்றும் பலர் நடித்த



# நீங்காத நினைவு

---

## நவம்பர் 14 முதல்!

ரீகல் — எல்பின்ஸ்டன் — ரெக்ஸி
மற்றும் பல திரைகளில்!

ஜெமினி கணேசன் — சாவித்திரி
கமலா லக்ஷ்மணன்— மனோகர்
மற்றும் பலர் நடித்த



# கொஞ்சும் சலங்கை

---

## சிறந்த திரைக் காவியம் என போற்றப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)



பார்த்தோர் பாராட்டும் பண்புமிகுந்த படைப்பு!
கலைக் காவியம்!!.................. இன்றே பாருங்கள்!!!

மு வரதராசனரின்

# பெற்ற மனம்

நடிகர்கள்:

சிவாஜி கணேசன்—எஸ். எஸ். ராஜேந்திரன்—எம். என். ராஜம்
எல். விஜயலட்சுமி—எஸ். வி. சுப்பையா—எஸ். வி. ரங்கராவ்
புஷ்பவல்லி—குமாரி—சந்திரபாபு.

டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்

இசையமைப்பு:
எஸ். ராஜேஸ்வரராவ்

இப் பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் [illegible] கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org